
கனவு நிலா
காஞ்சனா ஜெயதிலகர்

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | கனவு நிலா |
| ஆசிரியர் | : | காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | ஏப்ரல், 2004 |
| தாளின் தன்மை | : | 11.6 kg. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 240 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : | அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி: 28132791 |

**விலை: ரூ.60.00**

| | | |
|---|---|---|
| கணிப்பொறி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ✆94441-01753 |
| அச்சிட்டோர் | : | தீ.பி. பிரிண்ட்ஸ்,<br>சென்னை-5. |




# கனவு நிலா

உள்ளே...


1. கனவு நிலா ........................................ 5
2. நேச நதிக்கரையில் ........................ 139


# கனவு நிலா

## 1

**சா**தாரண நாட்களிலேயே பொலிவானப் பெண், பண்டிகை நாட்களில் அற்புதமாய் இருப்பது போல அன்று அதி அமர்க்களப்பட்டது ரெயில் நிலையம்.

தீபாவளி முடிந்து மக்கள் மறுபடி வேலைகளுக்குத் திரும்பும் அவசரத்திலிருந்தனர். போனஸ் கேட்டு அரசு பஸ் ஊழியர்கள் 'ஸ்டிரைக்' என்று நின்று விட்டதில் தனியார் பஸ்கள் இரட்டிப்பு முட்டிப்பாய் ட்ரிப் அடித்துக் கொண்டிருந்தன. இருந்தும் மக்கள் வாகனங்கள் போதாமல் தவிப்புடன் ரெயிலை அப்பியிருந்தனர்.

தன்னைச் சுற்றிலும் திரண்ட மக்கள் கூட்டத்தை கவனித்தபடி ரெயிலுக்குள் உட்கார்ந்திருந்தான் அசோக்.

அவன் விடுமுறை முடிந்து வேலைக்குத் திரும்பு நிலையில் இல்லை.

உல்டா! பார்த்து வந்த தற்காலிக வேலையின் காலக்கணக் முடிந்துவிட வீடு திரும்பிக் கொண்டிருந்தான். பி. கார்ப்பரேட்டிற்குப் பிறகு சில கம்ப்யூட்டர் கோர்ஸ்கள செய்த பிறகும் நிலையான வேலை அமையாத துரதிர்ஷ்ட

இங்கே இரண்டு மாசம் அங்கே மூன்று மாசம் என்ற பந்தாட்டம்தான். பிரபல பள்ளியில் படித்ததால் ஆங்கிலம் அவனிடம் வம்பு பண்ணுவதில்லை. அவன் நாவில் தன்மையாய் புகுந்து விளையாடும். ஆக ஒரு நட்சத்திர ஹோட்டலில் இரு மாதங்களாக டெஸ்க் ஸ்டாப்பாக இருந்த பிறகு, கல்யாணம் செய்துகொண்ட ரிஸப்ஷனிஸ்ட் தாலியும் மெட்டியுமாய் திரும்பி வந்துவிட இவன் ஆலங்குளம் கிளம்பிவிட்டான்.

ஆலங்குளத்தில் இருந்தது தாத்தா மட்டும்தான்.

அவர் ஒரு கிறிஸ்தவ பாஸ்டர் என்பதால் மலைப் பிரதேசத்தில் உயர்ரகப் பள்ளி ஒன்றில் பேரன் அசோக்கிற்கு இலவசமாய் படிப்பு கிடைத்தது. வேலையும் அப்படி சுலபமாய் வாய்த்தால் தேவலை.

ரெயிலுக்குள் கூட்டம் முண்டி ஏறியது.

இங்கே உட்கார இடம் கிடைத்ததற்கே சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். எதிர் இருக்கையின் நுனியில் வந்து தொற்றிக் கொண்ட இளைஞனைப் பார்த்தான் அசோக்.

யாரது நடிகர் அரவிந்த்சாமியா?

அதே மைதாமாவு நிறம், நெற்றியில் மரு, புஷ்டியான உடம்பு... தன்னைப் போலவே பிற பயணிகளும் அவனையே முறைப்பது புரிந்தது. கூடவே அவன் நடிகர் அ.சாமி அல்ல என்பதும்!

பிஸ்கட் நிற பருத்தி சட்டையும் அதே நிற ஜீன்ஸும் அவனை மேலும் கவர்ச்சியாய் காட்டின.

அசோக்கிற்கு சிரிப்பு வந்தது.

இதென்ன பெண்களை 'சைட்' அடிப்பது போல ஒரு ஆணை கவனித்துக் கொண்டிருக்கிறேனே என்ற நினைப்பில்



கிளம்பிய சிரிப்பு. அங்கு ரசிக்கும்படியான பெண் யாருமில்லை என்பதோடு அந்த அ.சாமியின் வசீகரம் தனி!

முழங்கால்களின் இடையே ஒரு 'சாம்சனெட்' பெட்டியை அடைக்காத்த அவனுடைய கைகளில் சமீபத்திய 'ஸிட்னி ஷெல்டனின்' நாவல்.

அதன் பக்கங்களை விரல்களால் விசிறியவன் அவ்வப்போது அதனுள் உன்னிப்பாய் பார்த்ததை அசோக்கும் ஆர்வமாய் கவனித்தான். ஹீரோவிற்கு வாசிக்கும் உத்தேசமே இருப்பதாய் தெரியவில்லை.

ஆனால் அதன் பக்கங்களில் இருப்பது என்ன? அதைப் பார்த்தவனின் பார்வையில் வேதனையின் சாயல் தெரிகிறதே? எதிர் ஸீட்டிலிருந்து ஒருவன் எழுந்து போக, அசோக் நவனை போல அ.சாமியின் அருகே பாய்ந்து இடம் பிடித்தான். இருவருக்கும் இடையே ஒரு அம்பது வயது ஆசாமி மட்டும்தான். அவரும் தீபாவளி பட்சணம் சாப்பிட்டு, தீபாவளி மருந்து சாப்பிடாதது போல வயிறு புடைத்து அயர்ச்சியுடன் சாய்ந்திருந்தார். ஆக அ.சாமி மறுமுறை புத்தகத்தைப் புரட்ட, அதன் நடுவே இருந்தது ஒரு புகைப்படம் என்பதை அசோக் பார்க்க முடிந்தது.

அதற்கு அடுத்த முறை அது ஒரு அழகுப் பெண்ணின் படம் என்பது...

மறுமுறை அவள் ஒரு பேரழகி என்பது!

இனி எப்போது புத்தகம் விரியும் என்று ஒருவிதமா அவனைத் தவிக்கச் செய்த அளவிற்கு அழகான பெண்ணி முகம்.

எத்தனையோ அட்டைப்பட அழகிகள் பெட்டிக்கடையின் விளிம்புகளில் காற்றாடிக் கொண்டிருக்க, இந்தப் படம் ஏன் தன்னில் இத்தனை ஆர்வத்தைக் கிளப்ப வேணும்?

மறுமுறை தெரிந்த அப்படத்தை சில கணங்கள் நிதானமாய் ஆராய்ந்தவனுக்குக் காரணம் பிடிபட்டது.

அது அப்பெண்ணின் முகத்திலிருந்த பாவனை...

அல்லது அவளின் அம்சமான முகத்தின் மேல் வலையாய் விரிந்திருந்த உணர்வுகள். அவள் முகத்தில் கர்வமிருந்தது.

சவால் விடும் பாவனையிலிருந்தன விழிகள்.

அவள் சிரிப்பில் துளி மர்மம் கலந்திருந்தது.

அது வெற்று அழகல்ல...

அழகினூடே அர்த்தங்களைத் தேக்கி வைத்திருந்த முகம்.

இப்படி எதையேனும் கவனிப்பதும், அது பற்றி யோசிப்பதும் அசோக்கின் வழக்கம்தான்.

ஒற்றைப் பிள்ளையாய் போய்விட்டதால், பேச ஆளின்றி இப்படிச் சுற்றிலும் பார்ப்பதும், பின்பு அதை ஒட்டிக் கற்பனை செய்வது பழக்கமாகிவிட்டது. பெற்றோர் இன்றி தாத்தாவின் ...ழலில் வளர்ந்தவனுக்கு தக்கப் பேச்சுத் துணையென்றால்... ...து அனுதான்.

அனுவை நினைத்ததுமே அவன் முகம் இளகியது.

புகைப்பட அழகியை ஒதுக்கி அனுவின் முகத்தை மனதுள் ...த்து நிறுத்தினான். அவளுடையது சாதாரண முகம்தான். ஆனால் அதில் எப்போதும் அசாதாரணமாய் ஒரு உற்சாகம் ...ம்பும். அது பேச்சாய், சிரிப்பாய் பிறருக்கும் தாவும்.

அசோக்குடன் குன்னூரின் ஒரு தனியார் பள்ளியில் ஐந்தாம் ...ப்பு வரை சேர்ந்து படித்த தோழி அவள்.



அவன் பள்ளியில் சேர்ந்தது ஐந்தாம் வகுப்பில் என்பதால் அவளைவிட இரண்டு வயதுக்கு மூத்தவன். அந்த முகத்தில் (தான் ஆண்பிள்ளை என்ற முக்கிய கெத்தும் வேறு) அடிக்கடி அவளை அடித்து ஆட்சி செய்தான் அத்தனையையும் மீறி அவர்களுக்குள் அன்பு ஊற, சிநேகமானார்கள்.

ஆறாவதில் அவர்கள் பிரபல பள்ளியில் சேர்ந்த பிறகும் நட்பு தொடர்ந்தது. ஏழை பாஸ்டரின் பேரனும், பிரபல மர வியாபாரி பூபதியின் மகளும் எந்த பிசுவும் இன்றிப் பழகினார்கள். பள்ளியிலிருந்து வீட்டிற்கு இருந்த 400 கிலோ மீட்டர்களை சேர்ந்து பயணித்தார்கள். பகிர்ந்து சாப்பிட்டார்கள்.

'நீதான் என் பெஸ்ட் ஃப்ரண்ட்' என்று பாச அறிக்கையிட்டார்கள். அதிலும் அசோக் அதிகம் பேசாதவன் என்பதால் அவனுக்குமாய் சேர்த்து அனு பேசித் தீர்ப்பாள்.

கிரிக்கெட், சினிமா, சாப்பாடு, படிப்பு, உலக நடப்பு என்று அவள் சொல்வது அனைத்திலும் அவனுக்கு உடன்பாடுதான். தலையாட்டி கேட்டுக் கொள்வான்.

எழுந்த அரவிந்த்சாமி கால், கையைச் சற்று ஆட்டிய பிறகு 'ஒரு நிமிஷத்தில் வந்துடறேன்' என்று தன் இருக்கையை பாதுகாத்துக் கொள்ளுமாறு சைகை செய்துவிட்டு போக, அவனை மீண்டும் ரசிப்பாய் பார்த்தான். எடுப்பான உயரம் - அதற்கேற்ற உடம்பு.

30 வயது இருக்கலாம். அப்படியானால் புகைப் படத்திலிருந்த அப்பெண் அவனுடைய மனைவியோ? அதுதான் சற்று காட்டமாய் அதைப் பார்த்தானோ?

'கன்னிப் பெண்கள் எல்லோரும் நல்லவர்கள்தாம் அப்படியானால்'

மோசமான மனைவிகள் எங்கிருந்து உருவாகின்றனர்? என்ற மேற்கத்திய நையாண்டியை நினைவுகூர்ந்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான். அதற்குள் அடுத்த ஞாபக அலையில் அஜு வந்தாள்.

முந்தாநாள் அவளுடன் போனிலான சம்பாஷணை அவனை மேலும் புன்னகைக்கச் செய்தது.

''அசோக், எனக்கு அப்பா மாப்பிள்ளை எல்லாம் பாக்கறாருடா...''

''ம்ம்...''

''என்ன ம்ம்? அதை வருத்தமாயாச்சும் சொல்லேன். நாலு, அஞ்சு பசங்க போட்டோஸ் காட்டினாங்க. ஒன்னுகூட சகிக்கலை. எல்லாம் போல் வால்ட்டுக்கு குழுாய் மாட்டின மாதிரி ஒல்லிப் பிச்சான்ஸ். அதுல ரெண்டு பேரு கண்ணாடி - ந்ததுகளுக்கு அசட்டுக் களை.''

''உனக்குப் பொருத்தமாய் இருக்குமே?''

''ச்சீ... உனக்கு என் அறிவு ஜீவி களை மேல பொறாமை... வனாம்ப்பான்னுட்டேன். நல்லவேளை அப்பாவும் துகள்ல இம்ப்ரஸ் ஆகலை. யாரும் ஆம்பளை மாதிரி ல்லையே. ஹாக்கி மட்டைங்க மாதிரி இருக்கானுங்கனுட் . அதுக்கு எங்க அத்தை என்ன சொன்னாங்க தெரியுமா?''

''உங்கத்தை ஊரிலேருந்து வந்திருக்காங்களா?''

மாப்பிள்ளை செலக்ஷனுக்கு கூட ஒரு ஆள் இருக் மென்னு அப்பா வரவழைச்சிருந்தார் போல... ஆனா க எல்லாரையும் கழிச்சதுல அத்தைக்கு கோபம் ருச்சு. 'பசங்க 30 - 35 வயசுலதான் சதை பிடிச்சு மாவாங்க... அப்ப நேரே அந்த வயசுப் பையனாய்



பாருன்னு' அதட்டுனாங்க. அப்பா ஒரு மாதிரி பயந்து மாப்பிள்ளைத் தேடும் படலத்தை நிறுத்தி வச்சிருக்கார்... சரி நீ எப்பக் கிளம்பறே? வேலை எப்படி? நீ வேலையில் சேர்ந்த நாளாய் அந்த ஹோட்டல்ல கூட்டமில்லையாமே? 10% ஆக்யுபென்ஸிதானேமே?''

லட்சக்கணக்கான 'டட் டடக்'களுக்குப் பிறகு மணியாச்சி ஸ்டேஷன் வந்தது. இங்கு இறங்கி வேறு ட்ரெயினுக்கு மாறவேணும். பிறகு ஒரு மணி நேரத்தில் திருநெல்வேலி ஜங்ஷன் வரும்.

அரவிந்த்சாமி எல்லாரையும் முந்திக்கொண்டு இறங்கினான்.

''என்ன ஸார்... திருநெல்வேலிதானே?'' அசோக் விசாரித்தான்.

''ம்ம்... ஆனா இன்னைக்கு கனெக்டிங் ட்ரெயின் டிலே ஆகுமாம்... ஆக நான் ஏதேனும் வேன் பிடிச்சு ஊர் போயிடலாம்னு இருக்கேன்.''

சின்ன தலையாட்டலுடன் விலகி விரைந்தான்.

அசோக்கிற்கு எந்த அவசரமும் இல்லை.

மேலும் நாலு பேரைப் பார்த்து, மனதில் அவர்களைப் பற்றி படம் ஓட்டி இல்லை தூங்கிவிட்டு சாவகாசமாய் ஊர் போய் சேரலாம்.

காத்து நின்ற மறு ரெயிலுக்குள் பறவையாய் ஏறி அடைந்தான். மதிய வெக்கைத் தணிந்து, மழை மேகத்தின் குளிர்ச்சி கிளம்பியிருந்ததால் தூக்கம் அசத்தியது.

நெல்லையைத் தொட்டு விட்ட ரெயிலின் தடம் மாறியதும் அவன் உறக்கம் இயல்பாய் கலைந்தது.

அலுப்பு நடையில் நகர்ந்தது ரெயில்.

டட்... டடக்... டொட்... டடக்...

இதுவரை வேகவேகமாய் இருபுறக் காட்சிகளைப் புறம் தள்ளிவிட்டு நீந்தி முன்னேறிய ரெயிலின் மெதுவான நீச்சல்...

முகம் கழுவித் துடைத்தவன், பெட்டியுடன் கூட்டத்தோடு நகர்ந்தான். வாசலில் நின்று நோட்டமிட்டான்.

வெளியே குழுமியிருந்த நூற்றுக்கணக்கான முகங்களில் ஒன்று மிகப் பரிச்சயமானது.


அதன் விழிகள். பரபரவென்று யாரைத் தேடுகின்றன?

தனக்காகவா வந்திருக்கிறாள்?

அத்தனைப் பயண அலுப்பும் உரிந்துவிட,

''அனு... அனு...'' என்ற உற்சாக அழைப்புடன் ரெயிலிலிருந்து இறங்கினான்.

## 2



தழைத்து விரிந்த அரசமரத்தின் கீழே நிழலோடு ஒன்றி நின்ற லான்சரைத் திறந்தாள் அனு.

கண்களை இடுக்கி காரின் நிறத்தை ஆராய்ந்தான்.

''டவ் பிஸ்தர் பச்சை. இந்த மெட்டாலிக் ஷேட்ஸ் வந்த பிறகு எல்லா நிறத்துக்கும் கவர்ச்சி கூடியிருச்சு...''

அனு பட்டனை அழுத்த வாய் திறந்த டிக்கியில் தன் சாமான்களை வைத்து மூடிவிட்டு காருக்குள் ஏறினவன்,

''இது மகா பந்தா'' என்றான்.

''நான் பந்தாக்குரிய ஆளுன்றதைக் காட்டத்தான் இந்தக் காரை, ஒன்பது லட்சம் கொடுத்து வாங்கறது...''



''அதில்லை. நவம்பர் மாசம் சாயங்காலம் ஆறு மணிக்கு ஏ.ஸி.யை ஓடவிடறதைச் சொன்னேன்.''

''இது குளிருக்காக இல்லை பையா... தூசியும் புகையும் நம்மை... அதாவது என்னைப் படுத்தாமல் இருக்க...''

நெல்லை ரெயில் நிலையத்திற்கும் பஸ் ஜங்ஷனுக்கும் இடையே கிடந்த சாலை ஜன நெரிசலாய் தத்தளித்துக் கொண்டிருந்தது. இருபுறக் கடைகள் தீபாவளிக்காகச் செய்திருந்த அதிகப்படி ஒளி அலங்காரத்துடன் இன்னும் மினுக்க, பண்டிகையைக் கடன்பட்டாவது கொண்டாடிவிட்ட சந்தோஷ அலுப்புடன் மக்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

ஹாரிஸ் ஜெயராஜின் புதுப்பட பாட்டு இனிமை, புதுமையாய் காருள் சுழல ஆரம்பிக்க, காலை நீட்டி உடம்பை முறுக்கினான் அசோக்.

''ஹா...''

''என்ன பயண அலுப்பா?''

''இந்த சொகுசில் அதெல்லாம் மறந்தே போச்சு... அனு, தாங்க்ஸ்.''

அவள் மனிதர்கள், மாட்டு, பிற வண்டிகளை தவிர்த்து முன்னேறுவதில் குறியாய் இருந்தாள்.

''நீ என்னைக் கூப்பிட இத்தனை தூரம் வருவேன்னு நினைக்கலை.''

''வேலை இருந்துச்சுப்பா... வாங்கற சாமான்களோட அப்படியே உன்னையும் ஏத்திக்கலாமேன்னு வந்தேன்.''

''ட்ரெயின் ஏறக்குறைய ஒன்னரை மணி நேரம் தாமதம்... காத்திட்டு இருந்தியா?''

முகம் களியக் கேட்டான்.

''பத்து நிமிஷம் முன்னேதான் காரை இங்கே பார்க் பண்ணினேன்.''

''ஓஹோ...''

''ஷாப்பிங் இருந்தது. சில சிப்பேர் வேலை. ரெண்டு பிலிம் ரோலை டெவலப் பண்ணக் கொடுத்தேன்... வந்ததும் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி கேட்டேன். ட்ரெயின் ஒரு மணி நேரம் தாமதமாகும்னாங்க. சரின்னு வேலைகளை முடிச்சேன்... லஷ்மி விலாஸ் அல்வா, பக்கோடாவும் வாங்கி... என்ன அப்படி நக்கலாய் சிரிக்கறே...?''

''வீட்ல உட்கார்ந்து இப்படி நொறுக்குத் தீனியாய் தின்றேன்றதைப் பார்த்தாலே தெரியுது...''

''ச்சேச்சே... எங்க வீடு அத்துவானக் காட்டிலேப்பா. வீட்டுக்கு விருந்தாளி வந்ததும் பின்வாசல் வழியே டிப்போய் பலகாரம் வாங்கி வரல்லாம் முடியாது... அதனால ப்படி கோக், பெப்சி, நொறுக்ஸ் எல்லாம் வாங்கி ஸ்டாக் ண்ணிடுவேன்.''

''ஆளைப் பார்த்தா, அதை நீயே காலி பண்றதாயும் து...''

''ஒன்னரைக் கிலோதாம்ப்பா போட்டிருக்கேன். உனக்குப் றாமை. நாம இப்படி வாடி வதங்கி இருக்க அனு மட்டும் ப்பாய் அழகாயிட்டேப் போறாளேன்னு...!''

ாரை 'அரசன் பேக்கரி' அருகே ஒதுக்கி நிறுத்தியவள் த்தாள். அவளைச் சமாதானப்படுத்த பேச்சை னான்.



''இன்னைக்கு ரெயில்ல என்னோட ஒரு கம்பீரமான ஆள் ட்ராவல் பண்ணார் அனு... முதல்ல அவரை பிலிம் ஸ்டார் அரவிந்த்சாமின்னே நினைச்சுட்டேன்...''

தன் கைப்பையிலிருந்து ஒரு ரசீதைத் தேடி எடுத்தவள் அசோக்கை வெடுக்கென நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன ட்ரஸ்?''

''யார்... என்ன ட்ரஸ்?''

''அந்த ஆள்... அரவிந்த்சாமி எப்படி உடுத்தியிருந்தார்?''

''ச்சீஸ் கலர் ஷர்ட்...''

''அதே நிற ஜீன்ஸ்?''

இப்போது அசோக்கும் அவளை விநோதமாய் பார்த்தான்.

''அவர் நெற்றியிலேகூட அதே மாதிரி ஒரு மிளகு மரு?''

''ரைட்... நீ எங்கே அவரைப் பார்த்தே?''

''நமக்கு ஒரு மணி நேர ட்ரைவ் இருக்கே. அப்ப உங்கிட்ட சொல்றதாய்தான் இருந்தேன்... டெவலப் பண்ண கொடுத்திருந்ததை வாங்கணும்.. வர்ரியா?''

''இங்க சொகுசாய் ஏ.ஸி.யில பாட்டு கேட்டபடி இருக்கேனே?''

''அந்தக் கடையும் ஏ.ஸி.தான் வா.''

மனமின்றிதான் இறங்கினான்.

பயண அலுப்பு இருந்ததுதான். ஆனாலும் சிற வயதிலிருந்து பழகிய சிநேகிதி அனு தன்னைத் தேடி ஸ்டேஷனுக்கு வந்திருந்தது தனி உற்சாகம். ஆக அவள் உத்தரவு போன்ற வேண்டுதலை மறுக்க மனமின்றி அவளை நாய் குட்டியாய் தொடர்ந்தான்.

முழுக்கக் கண்ணாடியிலான ஃபிரிட்ஜ் போலிருந்தது நுழைந்த கடை. கடை முழுக்க பெரிய அளவில் நேர்த்தியும் நுணுக்கமுமான புகைப்படங்கள். பூக்களும் குழந்தைகளும் அவற்றில் இருந்தாலும் பெரும்பாலும் பெண்கள்தான் அதிலும் கச்சிதமான அழகிகள்.

அழகைக் கண்டதும் மீண்டும் அந்த சக பயணியின் நினைப்பு எழுந்தது.

அவளை அனு எங்கே எப்படி பார்க்க நேர்ந்தது?

அடுத்து எழுந்த கேள்வி அ.சாமியின் புத்தகத்தில் ஒளிந்திருந்த பெண்ணின் படம்.

எத்தனைக் கவர்ச்சியான முகம் அது...

"இதைப் பிடி அசோக். புது மாடல் காமெரா ஒன்று வந்திருக்காம். பார்த்துட்டு வந்துடறேன்."

அனு அவன் கையில் இரு சின்ன ஆல்பங்களை கொடுத்துப் போனாள்.

இப்போது ஒரு கவரில் புகைப்படங்களை இட்டுத் தருவதில்லை போலும். குட்டி ஆல்பம் ஒன்றில் படங்களைச் செருகியே தந்து விடுவது வசதிதான்.

அதைத் திறந்து புரட்டினான்.

வழு வழு பிளாஸ்டிக் கவர்களுக்குள் அடங்கிய வண்ணப் படங்கள்.

முழு, ஜோடி, ஒற்றையாய் என்ற விதவிதமாய் டுக்கப்பட்டவை. குற்றால அருவியில் குளியல், பிக்னிக் ப்பாடு, சீட்டாட்டம் என்ற ஒரு குடும்பத்தின் வெவ்வேறு ழகலங்கள் அதில் பதிவாகியிருந்தன.



ஈ போல அவற்றைச் சுற்றி சுற்றி மொய்த்த அவனது பார்வை அந்த முகத்தில் பட்டதும் 'சட்'டென அதன் மேல் அமர்ந்தது.

வெளிச்சத்திற்கு வாகாய் தூக்கிப் பிடித்து, பின் ஆல்பத்திலிருந்து அப்படத்தை உருவியும் உற்றுப் பார்த்தான்.

இது... இது... அவளேதான்.

அதே கூர்மையான பார்வை... சவால் புன்னகை... அழகு!

பரபரப்பாகி நடந்தான்... நிலை கொள்ளவில்லை.

இது வெகு விநோதம் எனப்பட்டது.

முன்பின் அறியாத ஒரு பெண்ணின் புகைப்படத்தை ஒரே நாளில் இரு வேறு சந்தர்ப்பங்களில் பார்க்க நேர்வது...

இது தற்செயல்தான். ஆனாலும் தாத்தா சொல்லுவது போல கடவுளின் செயலோ?

'தற்செயலாய் நடந்ததுன்னு நினைப்போம்டா அசோக். ஆனால் கடவுளின் சித்தம், திட்டப்படிதான் இந்த உலகில் அத்தனையும் இயங்குது...' என்பாரே?

'கடவுள் தன் சொந்தப் பெயரில் எழுத முடியாதபோது சந்தர்ப்பம் என்ற புனைப் பெயரில் எழுதுகிறார்' என்றும் எங்கோ வாசித்ததும் உண்டு.

இந்தப் பெண்ணின் முகம் தன்னை ஈர்த்து மறுபடியுமாய் தன் கண்ணில், கருத்தில் மோத வேண்டியது என்ன... எதனால்?

அவனுக்குள் மெள்ள ஒரு கிளுகிளுப்பு பரவியது.

அனுவுடன் கடையை விட்டு வெளியேறுகையில் அவளிடமே ஆல்பங்கள் இருந்தன.

"எனக்குப் பசிக்குது அசோக்."

"எனக்கும்."

கார் அருகேயிருந்த 'ஆர்யாஸ்'னுள் நுழைந்தது. புல்வெளியில் நின்ற மேஜை முன் அமர்ந்தார்கள்.

கூட்டமில்லை. காற்று இதமாக வீசியது.

"ரெண்டு தோசை, சில்லி கோபி."

சர்வரிடம் ஆர்டரைச் சொன்ன பிறகு அந்த போட்டோவை அனுவின் முன் நீட்டினான்.

'என்ன?' என்பதாய் அவள் புருவங்கள் உயர்ந்தன.

"யாரிது?"

சுவாரஸ்யமின்றி படத்தைப் பார்த்தவள் உதடு பிதுக்கினாள்.

"எனக்கெப்படி தெரியும்?"

"இதை வாங்கத்தானே வந்தே?"

"உனக்குத்தான் என் குடும்பத்தாரை எல்லாம் தெரியுமே அசோக். இது ரேவதிக்காக நான் பிரிண்ட் போட்டு வாங்கிட்டுப் போறது."

"யார் அவங்க?"

"குடும்ப நண்பர்கள். நம்மைப்போல மர வியாபாரம்தான். மொத்த கூப்பெடுத்து, மரம் வெட்டி விற்கறதோடு, சில ர்னிச்சர்லும் டிஸைன் செய்றாங்க. மொத்த ஆர்டர்ஸுக்கு..."

"அது சரி... அப்ப இந்தப் பொண் யாரு?"



"யார்னு தெரியாதுன்றதைத்தானே சொல்லிட்டு இருக்கேன்."

"இது ரேவதிங்கறவங்க இல்லையே?"

"ம்ஹூம்" சில பக்கங்களைப் புரட்டிக் காட்டினாள். "அது இவங்க."

"இவங்க இருக்கறது?"

"குற்றாலத்தில்... அவங்களுக்கும் நம்மைப்போல தென்காசி ரோடில் ஒண்டியாய் தோப்புக்குள்ளே நிற்கற வீடுதான்... அக்கம் பக்கம் யாருமில்லை... தவிர அவங்களுக்கு அஞ்சு வயசுல விவேக்குன்னு ஒரு சுட்டிப் பயல்... குற்றாலத்தில் இருந்தால் பிரைமரி படிப்பு வரைக்குமாவது மகனைத் தன் கூட வச்சுக்கலாங்கற எண்ணத்தில் டவுனில் வீடு கட்டி குடியேறிட்டாங்க ரேவதிக்காக. ம்ம்... நாமும் இதே காரணத்தாலதான் நினைவு தெரிஞ்சதிலேருந்து ஹாஸ்டல்ல சேர்ந்து படிச்சோம்."

"நமக்கும் அம்மா இருந்திருந்தால் ஒருவேளை இப்படி நம்மோட தங்கி படிக்க வச்சிருப்பாங்களோ?"

தோளைக் குலுக்கியவன் அதை அலட்சியமாய் சொன்னது போலிருந்தாலும் குரலில் ஆதங்கம் இருந்தது.

"ஒருநாள் ரேவதிக்கா எங்க வீட்டுக்கு வந்து ரொம்ப நேரம் பேசிட்டு இருந்தாங்க... பிரியமாய் அழைச்சதால் நானும் அவங்க வீட்டுக்குப் போனேன். நெல்லைக்குப் போகணும்னா அவங்க வீட்டைக் கடந்துதானே போணும்... அப்படி இறங்கினப்ப இந்த பிலிம் ரோல்களை டெவலப் பண்ணிக் கொண்டு வரக் கேட்டுக்கிட்டாங்க அக்கா... அல்வா பக்கோடா வும் கூட அவங்களுக்கும் சேர்த்துதான் வாங்கியிருக்கேன்."

"அ... ஆங்... கார் டிக்கியில் அரை டன் அல்வா இருக்கறதை நான் பார்த்துட்டேங்கறதால சமாளிக்கறே."

"போடா அக்க."

குஷியான, தன்னை மறந்த நேரங்களில் நண்பனை அப்படித்தான் அழைப்பாள்.

"சரி இப்ப ஒரு விஷயத்துக்கு வருவோம். முக்கியமான விஷயம். அந்த அரவிந்த்சாமியை நீ எங்கே பார்த்தே?"

"மதுரையிலிருந்து மணியாச்சி வரைக்கும் நாங்க ட்ரெய்ன்ல எதிர் எதிரே பிறகு பக்கத்து பக்கத்துல உட்கார்ந்திருந்தோம்."

"ஓஹோ? அப்ப மணியாச்சியிலிருந்து வேன் அல்லது கார் பிடிச்சு நெல்லை ஜங்ஷன் வந்திருப்பார் போல..."

"ஆமா... சீக்கிரமாய் போகனும். ட்ரெயின் டிலே ஆகுதுன்னார்."

"பேசிகிட்டீங்களா?"

"பேசினது அது மட்டும்தான். அதுவும் நா கேட்டதுக்குப் பதிலாய் சொன்னார். ஆள் ஸ்மார்ட்டாய் இருந்ததால கவனிச்சேன்... பிறகு அவர் கையிலேருந்த புத்தகத்தில் ஒரு போட்டோ இருந்ததைக் கவனிச்சேன். வெரி அட்ராக்டிவ் ஃபேஸ்."

நாற்காலியின் நுனிக்கு நகர்ந்தவன் ஆல்பத்தைத் தட்டினான்.

"அதேப் பொண்ணுதான் இதுவும்."

"ஓஹோ... நான் உன்னிடம் சொல்லப் போறது வேற மாதிரியான விநோதம்ப்பா... அந்த அரவிந்த்சாமியை நான் பார்த்தேனே ஒழிய அவர் என்னைப் பார்க்கலை."


"நேச்சுரலி... நீ பார்க்கும்படியான பெண்ணில்லை."

"அக்க, பி சீரியஸ்... அவர் மயங்கிக் கிடந்தார். தலையில் பட்டு ரத்தம் வழிய பேவ்மெண்ட்ல கிடந்தார். இந்தக் கைதான் தூக்கிப் போட்டு ஹாஸ்பிடல்ல சேர்த்தேன்."



அவன் பதில் பேசத் தோன்றாமல் அவளையேப் பார்த்திருந்தான்.

3



பசியிருந்தும் ருசித்துச் சாப்பிட முடியாதபடி இருவரும் சிந்தனைகளில் அமிழ்ந்திருந்தனர். மாறி மாறி பேசியவர்கள் இப்போது மௌனமாய் ஆலங்குளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

லான்ஸர் சத்தமேயின்றி சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

பஸ்ஸின் நெரிசலில் ஏற முடியாமல் தவித்த சில பாட்டிகளையும் காரின் பின் ஸீட்டில் ஏற்றிக் கொண்டிருக்க, பாட்டிகள் தூங்கி விழுந்தபடி இருந்தனர்.

"ஆக நீ ஹாஸ்பிட்டலை விட்டுக் கிளம்பற வரை அவர்... அந்த அ.சாமி கண் முழிக்கலை?"

"நோ... கார்ல இருந்த டர்க்கி டவலால் அவர் தலையைச் சுற்றிக் கட்டினேன். கூடவே ஒரு போலீஸ்காரரும் வந்தார்... அவர் தடுமாறி விழுந்ததாய் சொன்னாங்க. ஆள் பெரிய இடம் பிளஸ் படிச்சவராய் தெரிஞ்சதாலும் பக்கத்திலேயே நல்ல ஹாஸ்பிடல் இருந்ததாலேயும் எல்லாம் சுலபமாய் போச்சு."

"அவர் கையில் ஒரு ஸிட்னி ஷெல்டன் நாவல் இருந்துச்சா?"

அவனை முறைத்தவள் அதேத் தொனியில் பேசினாள்.

"அதுக்குள்ள ஒரு பொம்பிளைப் படம் இருந்துதா...? நீ அதிலேயே நில்லு!"

"பார்த்தியா இல்லையான்னு சொல்லேன்."

"தெரியலை. அவரோடு ஒரு பெட்டி மட்டும்தான் இருந்தது. புக் அதற்குள்ளே இருந்திருக்கலாம். இல்லை எட்டி விழுந்து எங்கன்ல படத்தவறியிருக்கலாம்."

“ம்ம்... ஸ்ட்ரேஞ்ஜ் இல்லை? அவரை நாம பார்த்தது. அவரைப் பத்தி பேசிக்கும்படியான சம்பவம் நடந்தது எல்லாம்...”

“ம்ம்... நீ அந்தப் பொண்ணின் போட்டோவை இருமுறை பார்க்க நேர்ந்ததும் விசித்திரம்தான்.”

“நாளை இல்லை அதுக்கு மறுநாள் நான் உங்க வீட்டுக்கு வர்றப்ப என்னை இந்தப் பொண்ணு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போவியா அனு?”

“எனக்கு ரேவதியக்காவைத் தெரியும்... இவ அவங்க நேபராய் இருக்கலாம்.”

பாட்டிகளை ஊர் பஸ் நிலையத்தில் இறக்கி விட்டுவிட்டு அசோக்கின் வீட்டின் முன் அடுத்ததாய் நிறுத்தினாள்.

அவசரமாய் இறங்கி தன் வீட்டிற்குள் ஓடிய அசோக் மறு நிமிடம் மூச்சிரைக்கத் திரும்பினான்.

“பார்த்தியா ஒரு 'தாங்க்ஸ்'கூட சொல்லாம ஓடின உன்னைத் தாத்தா வீட்டுக்குள்ளே ஏத்தலை இல்லையா? நான் சிபாரிசு பண்ணினால்தான் எல்லாம் நடக்கும்...”

காரிலிருந்து இறங்க முயன்றவளைத் தடுத்து கதவை மூடியவன் மறுபடி காருக்குள் புகுந்தான்.

“தாத்தா வீட்ல இல்லை. ஒரு கன்வென்ஷனுக்காய் தூத்துக்குடி போயிருக்காராம். பக்கத்து வீட்டு அக்கா சொன்னாங்க... நான் உன் கூட குற்றாலம் வரை வர்றேன். அங்கேருந்து பஸ் பிடிச்சுத் திரும்பிடுவேன்.”

“எல்லாம் அந்த போட்டோ அழகிக்காகவா?”

சற்று எரிச்சலாய் கேட்டாள்.

“ஒரு க்யூரியாஸிட்டிதான்.”



“ரேவதிக்கா வீட்டுக்குப் போனதும் 'இது யாரு யாரு'ன்னு கேட்டு வழியாத.”

“நீதான் கேட்டுச் சொல்லணும்...”

“எனக்கெதுக்கு இந்த வேலைல்லாம்?”

“பிகு பண்ணாதே அனு.”

அவனும் சற்று எரிச்சலாகவே சொல்ல, கார் கிளம்பி வேகமெடுத்தது.

ரேவதியை அசோக்கிற்கும் பிடித்துவிட்டது. சற்று குண்டு உடம்பும் கனிவான முகமுமாய் இருந்தாள் ரேவதி.

“சாப்பிட்டீங்களா, தம்பி உனக்கு பாலா, டீயா எது போட? பக்கோடா பிடிக்கும்ல?” என்று வாய் ஓயாமல் உபசரித்ததும் காரணமாய் இருக்கலாம்.

பக்கோடா தட்டை காலியாக்கின பிறகு அசோக், அனுவைப் பாவமாய் பார்க்க, அவளும் மனதிரங்கி பேச்சை ஆரம்பித்தாள்.

“இந்த போட்டோவை தற்செயலாய் பார்த்தோம்க்கா... இது தெரிஞ்ச முகமாய் பட்டது...”

அனு பக்கங்களைப் புரட்டி சுட்டிக்காட்ட, அசோக் எம்பி அவள் சரியான முகத்தைத்தான் காட்டுகிறாள் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு ரேவதியின் பதிலுக்காய் ஆவலுடன் பார்த்தான்.

“அது ரம்யா... பக்கத்தில் க்ளினிக் வச்சிருக்கிற டாக்டர் சௌந்தர்ராஜனுடைய மனைவி.”

“ஐயோ பாவம் நீ” என்று குறும்பாய் தன் தோழனைச் சீண்டின அனுவின் விழிகள்.

"அவங்க எப்போதிருந்து இங்க இருக்காங்க?"

"ஒன்னு, ஒன்னரை வருஷமிருக்கலாம்... என் கொழுந்தன் ரவீந்தர் அவங்க வீடு கட்டினதும்தான் இந்த இடத்தை வாங்கி அவசரமாய் இந்த வீட்டை எழுப்பினான். பக்கத்தில் ஆள் இருக்கறது தனி தெம்புதான் இல்லையா... ஆனா."

ரேவதியின் முகத்தில் சிறு கலக்கம் தோன்றியது.

விரல்களை பின்னிப் பிசைந்தாள்.

"என்னக்கா... அந்தக் குடும்பத்தை உங்களுக்குப் பிடிக்கலையா?"

ரேவதி தயக்கத்துடன் அசோக்கின் பக்கம் பார்க்க, அவன் இந்தப் பேச்சையேக் கவனிக்காதவன் போல வேறு எங்கோ பார்த்திருந்தான். இரு பெண்களையும் தனித்து விடுவது பல விஷயங்களை வெளியே கொண்டு வரும் என்பது புரிந்தது. ஒரு ஆண் நங்களின் நடுவே இருந்தால் அவர்களால் மனம் விட்டுப் பேச முடியாதுதான்.

ஆக எழுந்து நின்றான்.

"இப்படி உங்க தோட்டத்தைப் பார்த்துட்டு வரேன்ங்க... நிறைய விளையாட்டு சாமானெல்லாம் இறைஞ்சு கிடக்குதே... உங்கப் பையன் எங்கே?"

"வீட்டுப் பாடம் செய்யச் சொன்னதுமே விவேக்குக்குத் தூக்கம் வந்திடும்... மற்றபடி அனுவைப் போலவே அவனும் துறுதுறுதான்..."

சிரித்தார்கள்.



"அனு இங்க அப்பப்ப வந்து போறது எனக்குத் தெம்பாய் இருக்குது தம்பி. கலகலன்னு ஏதாவது பேசிட்டுப் போறாளா... வீடே தூசி தட்டினாப்பல ஆயிடுது."

"அப்ப நான் வந்து போனதும் தும்ம ஆரம்பிச் சிடுவீங்களா?"

"ம்ம்?"

"தூசி பறந்துறேனே?"

"நீங்க பறந்துங்க... நான் பத்து நிமிஷத்துல வர்றேன்."

"வந்ததும் கிளம்ப வேண்டியதுதான் அசோக்... இப்பமே மணி ஒன்பதைத் தாண்டிருச்சு. நாம இங்க இருக்கறதை அப்பாட்ட போன் பண்ணி சொல்லிட்டாலும்..."

"ரைட். பத்தே நிமிஷம்."

"ம்ம்... ஒரேயடியாய் அலைஞ்சுடாதே..." எச்சரித்து அனுப்பினாள். ரேவதி காபி தட்டு, கோப்பைகளை எடுத்துக் கொண்டு போக அசோக் சொன்னான்.

"நான் ஒன்னும் அலையற கேஸில்லை. இது வெறும் ஆவல்... அவளை அந்த ரம்யாவை இந்நேரம் எப்படிப் பார்க்க முடியும்...? சும்மா ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வந்துடறேன். என்னை பஸ் ஸ்டாப்பில் இறக்கி விட்டுட்டு நீ வீடு போய் சேரு."

"ம்ம்..."

அசோக் இந்த வீட்டின் எல்லையை விட்டு வெளியேறி மறு வீட்டை ஆராய்ந்தான். பெரிய கட்டடம் அது. சொற்ப விளக்கு களே எரிந்தன. இரு வீடுகளையும் சுற்றி விசாலமான சுற்றுச் சுவர்கள் ஓடின. அவற்றின் நடுவே ஓடை போலொரு சிறு சந்து.

அசோக் அதில் நடக்க, மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. எல்லா சந்துகளையும் போல இங்கும் அதே நாற்றம்!

நீர்வளம் மிகுந்த ஊர் என்பதால் காட்டுப்புதர்கள் கூட செழித்து நின்றன. காம்பவுண்ட் சுவரின் உள்ளே நெடிய மரங்கள் காவல் பூதங்களாய்...

முன்புற கேட்டைத் தவிர்த்து, இந்தப் பக்கவாட்டுச் சுவரிலும் ஒரு சிறு கதவு இருந்தது. நிலா வெளிச்சத்துக்கு கண் பழகியதும் அந்தத் திட்டி வாசலை நெருங்கினான். மண் நிற வர்ணம் பூசிய இரண்டடி அகலக் கதவு. மேலே ஈட்டி போன்ற துருத்தல்களுடன் இரும்புக் கதவு.

அதை மெள்ளத் தள்ளினான்.

துளி உள்வாங்கியது.

ஆச்சரியத்துடன் மேலும் அழுத்த கதவு சத்தமின்றி அவனுக்கு வழிவிட்டது.

அசோக் இதை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

ஒரு மனநல மருத்துவமனையின் கதவு இத்தனைச் சுலுவாய் திறக்குமா?

போதை மருந்திற்கு அடிமைப்பட்டவர்களை மீட்பதே இதன் முக்கிய நோக்கம் என்றிருந்தார்கள் ரேவதி.

காவலாளி தடியும் அதட்டலுமாய் வருவதற்காய் மூச்சைப் பிடித்துக் காத்திருந்தான்... எதுவும் இல்லை.

உள்ளே மரங்களால் மேலும் அடர்த்தியான இருட்டா யிருந்தது.



அதற்குத் தோதான மௌனம்.

ஆழ மூச்செடுத்தபடி உள்ளே நடந்தான். கூப்பிடு தொலைவில் நிழலாய் பிரதான கட்டடம் தெரிந்தது. வீடு அத்தனை ஜன்னல் கதவுகளையும் சாத்திக் கொண்டு கோஷா பெண் போல நின்றது... அவனுக்கு ஏனோ அசௌகர்யமாய் பட்டது.

இந்த டாக்டரைப் பற்றி பேசும்போது ரேவதியின் முகத்தில், தொனியில் அதிருப்தி தெரிந்ததே... அது ஏன்?

அது பற்றி அனுவிடம் கேட்க வேணும் என மனதில் குறித்து வைத்தான்.

உயர்ந்த கோட்டைச் சுவரின் முதுகு முழுக்கக் கண்ணாடி சில்லுகளின் குரூர பளபளப்பு. இந்தக் கதவு இல்லாவிட்டால் லேசில் உள்ளே நுழையவே முடியாத பாதுகாப்புதான்... ஆனால் ஏன் இத்தனை அலட்சியமாய் இதைத் தாழிடாமல் வைத்திருக்கிறார்கள்?

கண்கள் இந்த ஆழ்ந்த இருளுக்கும் பழகிவிட மேலும் நடக்கலானான். திடும்மென அந்த வாசனை அவனைச் சூழ்ந்து, கிறக்கியது... செண்பக மரத்தின் கீழே நிற்கிறோம் என்பது புரிந்து அண்ணாந்து பார்த்தான்.

குற்றாலத்திற்கே உரிய செண்பக மரம்தான். தன் அசாத்திய மணத்தை ரசிக்க யாரும் உண்டா, இல்லையா என்ற கவலையே இன்றி மணத்தை தாராளமா பரவவிட்டிருந்தது.

கதவின் இடுக்குகள் வழியே வெளிச்சக் கசிவு.

ஆக அறைகளுக்குள் ஆட்கள் இருக்கிறார்கள்.

இனிமேலும் முன்னேறுவது சரியல்ல... இவனை பார்த்துவிட்டு,

'தப்பி ஓட முயன்ற நோயாளி' என்று குண்டுகட்டாய் தூக்கிப் போய் அடைத்து விட்டால்?

அழகிய ரம்யா இங்குதான் எங்கோ இருக்கிறாள்... ஆனால் அதை மீறி ஏதும் யோசிக்காதபடி மனதை அடக்கி வைத்தான். அவள் திருமணமான பெண் அல்லவா?

திரும்பிவிடலாம் என்ற முடிவுடன் அவன் நின்ற வேளையில் அந்தக் கதவு திறந்தது.

இந்நேரம் அசைவது உசிதமல்ல என்ற அச்ச எச்சரிப்புடன் அசோக் அப்படியே உறைந்தான்.

தனது வெளிர் நீலச்சட்டை இருட்டை மீறித் தெரிகிறதோ என்ற யோசனை... தாத்தாவிற்கு இளைஞர்கள் பச்சை, சிவப்பு நிறங்களில் உடுத்துவது பிடிக்காது. ஆக அவரே போனுக்கு வெளிர் நிற சட்டையும் அடர்நிற பேண்ட்டும் வாங்கித் தந்து விடுவார்.

திறந்த அறைக்குள்ளும் இருந்தது மங்கிய வெளிச்சம்தான் என்றாலும் ஒரு கணம் வாசற்படியில் நின்ற உருவம் பெண் என்பது புரிந்தது. நைட்டி போலொரு உடையில் இருந்தவள் அவசரமாய் தன்னை நோக்கி வரவும் இவனுக்கு வெலவெலத்தது.

தன்னைப் பார்த்து விட்டாளா?

நெருங்கி வந்து 'கஞ்சா எங்கே, அபின் தா' என்று பிடித்து உலுக்கி விடுவாளோ?

அல்லது அந்நியனைக் கண்டதில் அஞ்சி அலறப் போகிறாளா?

அவள் தீர்க்கமாய் எட்டுக்கள் வைத்து இவனை நெருங்கினாள்.



அருகே வந்தவளின் முகம் திகைத்தது...

அசோக்கும் திகைத்தான்... அது அவன் தேடிக் கிளம்பிய அழகிய ரம்யா...!

4

அவனை நெருங்கியவள் ஆணி அடித்தது போல நின்றாள். கண்கள் மிரண்டு உருண்டன.

''பயப்படாதீங்க மேம்... நான் ஜஸ்ட் எ விஸிட்டர்.''

"இது ஆபத்தான இடம்... உயிருக்கே ஆபத்து'' என்றாள் மெல்ல.

"நான்... நீங்க...'' அசோக் தடுமாறினான்.

''யாரும் உங்களை இங்க பார்க்கறதுக்கு முன்னேப் போயிடுங்க... சீக்கிரம்.''

அசோக் நெஞ்சம் பரவசம் பயம் என்று மாறி மாறி துடித்தது!

பரவசத்திற்குக் காரணம் அவள் நேரிலும் மிக அழகாயிருந்தது! கட்டாமல் விட்டிருந்த கூந்தல் காற்றில் சுருண்டு அசைந்தது. வழுவழுத்த கன்னங்களும் வடிவான உதடுகளும் இருளை மீறி மினுங்கின. துணி மூடாத கைகளும், கழுத்தும் தந்தத்தின் வழுவழுப்பில்... முக்கியமாய் அந்தக் கண்கள்... அத்தனை பயத்தைத் தேக்கியிருந்த போதும் அவற்றில் கவர்ச்சியும் புரியாத ஒரு சவாலும் விலகவில்லை.

''ஓடிருங்க...''

''உங்களுக்கு ஏதும் உதவணும்னா சொல்லுங்க மேடம்... நான் செய்றேன்!''

''ப்ளீஸ் முதல்ல போங்க...''

இனியும் தாமதித்தால் அவள் கத்தக் கூடும் என்று பட, பின் வாங்கினான். உலர்ந்த உதடுகளை தன் நாவால் நீவியவள் திரும்பி தன் அறைக்கு ஓடிப் போனாள். கதவு மூடிக் கொண்டது.

திட்டி வாசலை அடைந்த அசோக் பற்றியபடி சற்று நேரம் அப்படியே நின்றான். தான் கண்டது பிரமையா... கனவா... என்ற பிரமிப்பில்!

"அசோக்..."

அனுவின் குரல் தான் அவனை மீட்டது.

"இதோ வரேன்" விரைந்தான்.

அவனைக் கண்டதும் உரிமையாய் அதட்டினாள்.

"எங்கே போயிட்டே இத்தனை நேரமாய்?"

பதில் வராததால் அவன் முகத்தை ஏறிட்டவள், இளகினாள்.

"ஏறு... போலாம்ல."

"ம்ம்... வரேங்க... தாங்க்ஸ்" ரேவதியைப் பார்த்து கை குவித்தான்.

"என்ன தம்பி இப்படி வியர்த்திருக்குது... அதுவும் நவம்பர் மாசத்துல?"

"அது... இடையே சாப்பிட்டதால கொஞ்சம் ஜாகிங் செய்தேன்."

"நானும் அதெல்லாம் பண்ணனும்னு நினைக்கறதுதான்" என்றாள் ஒரு பெருமூச்சுடன் ரேவதி. தன் அகண்ட உடம்பைப் பார்த்தபடி.

"இன்னும் ராகவ் அண்ணா வரலியா... ரொம்ப பிஸி யில? இதுவரை அவரை வீட்ல நாம் பார்க்கலை?"



ரேவதியின் கணவனைப் பற்றி விசாரித்தாள் அனு.

"அவர்... அவரும் விவேக்கோட படுத்துட்டார்."

"ஓ... அப்ப வீட்லதான் இருந்தாங்களா?"

"ம்ம்..."

"நான் இத்தனைக் களேபரம் பண்ணியும் எட்டிப் பார்க்கலையே?"

"அவர்... அவருக்கு உடம்புக்கு முடியலை அனு. அதான் டாப்லெட் போட்டுட்டு படுத்துட்டார்."

"என்னக்கா... அதைச் சொல்லியிருக்க வேணாமா? நான் கொஞ்சம் கவனமாய் இருந்துருப்பேன்ல?"

"மாடி ரூம்லதானே... சத்தம் கேட்காது."

"ஓ.கே. வரோம்."

"வரோங்க."

காரில் ஏறினார்கள்.

"இந்தச் செவ்வாய்க்கிழமை வா அனு. ஊரே பெருக்கி எடுத்த மாதிரி வெறிச்சோடி கிடக்கும்... நீயாவது வந்து கலகலன்னு பேசிட்டிரு."

"ஷ்யூர்... வந்து தூசி கிளப்பறேன். பை."

கார் வெளி கேட்டைத் தாண்டியதுமே அனு படபடத்தாள்

"ஏன் அச்சு... என்னாச்சு?"

"நான் அவளை ரம்யாவைப் பார்த்தேன் அனு."

"ஜென்மம் சாபல்யம் அடைஞ்சிருக்குமே?"

திகிலடஞ்சது போலிருந்தா.

''நோ ஜோக்ஸ்... அவ அந்நிலையில் இருட்டில பார்த்த நானும் கூட பயந்து தான் போனேன்.''

''முனி, மோகினி எல்லாம் சேர்ந்து அடிச்ச மாதிரி தான் வந்தே...''

''அவ ஆபத்தில இருக்கிறா அனு.''

''புருஷன் வீட்டில இருக்கறது ஒரு சிலருக்கு ஆபத்துதான்!''

''இது உயிருக்கு பயப்படறளவு...''

''ம்ம்... ஸ்டவ் வெடிப்பு பற்றி அடிக்கடி கேள்விப் படறோமே.''

''அனு... அவ என்னையும் ஓடடச் சொன்னா... ஷூ வாஸ் டெரிஃபைட் ஹோ... ஏதோ த்ரில்லர் சினிமா ஸீன் போல... இன்னும் என்னால அங்கே நடந்ததை நம்ப முடியலை...''

''நீ ரொம்ப ஆசைப்பட்டதால் கடவுள் உனக்கு இப்படி ஒரு பிரமையை தந்துட்டாரோ? - ஹாலுசினேஷன்?''

''அவ நிஜமாவே பேரழகிதான். ரோஸ் கலர் நைட்டில முடி சிலுசிலுன்னு பறக்க, செண்பக மர வாசனையூடே நடந்து வந்தது. தேவதையாட்டம்.''

''அச்க, ரொம்ப அச்க பிச்கன்னு உளறுறே'' என்ற அனு ...ரை பஸ் நிலையத்தின் ஓரமாய் நிறுத்தி விட்டு அசோக்கைப் ...ர்த்தபடி உட்கார்ந்தாள்.

''சரி. நான் உளறலை... ரேவதி என்ன சொன்னாங்க?''

''இந்த ரிஹாப் சென்டர் பக்கத்திலே குடியிருக்கறது ...காவுக்குப் பிடிக்கலை. பெரும்பாலான நோயாளிகள் ...தையின் பிடியிலிருந்து விடுபட வந்தவங்க தான்.. ஆனா



அது லேசில்லையே. ஆக அப்பப்ப பயங்கரமான அலறலும் கூச்சலுமாய் கேட்குமாம். இப்படி ஒரு சூழல்ல வளர்றது தன் பையனுக்கு நல்லதில்லைன்னு அக்கா நினைக்கிறாங்க... நடு ராத்திரியில் அலறல் கேட்டால் கொஞ்சம் கதி கலங்கும்தான்...''

''சரி... நீ வீடு போய் சேரு அனு... அப்பா பதட்டமாயிடு வாங்க. நாளைக்கு போன் பண்ணு. மிச்சத்தைப் பேசுவோம்.''

''காலைல பத்துக்குப் பூத் பக்கம் நில்லு - குட் நைட்.''

கை உயர்த்தி அனுவிற்கு விடை தந்து அனுப்பி விட்டு தனிமையில் நின்ற போதுதான் நடந்த சம்பவம் மறுபடி அசோக்கை உலுக்கியது.

பஸ் நிலையத்தில் மங்கல விளக்கொளியில் சிமெண்ட் பெஞ்சுகளில் சிலர் போர்த்தி சுருண்டிருந்தனர். பெஞ்சின் கீழே சோனி நாய்கள் பந்தாய் சுருகிக் கிடந்தன.

முகத்தில் செய்தித் தாளை பரப்பிக் கொண்டு தூக்கத்தில் சரிந்திருந்த ஒருவரின் அருகே அமர்ந்தான் அசோக். சிமெண்ட் பெஞ்சில் 'சிலீர்' என்ற குளிர்.

சிலிர்த்தவன் கைகளைக் கட்டிக் கொண்டு ''ஸ்ஸ்...ப்பா'' என்றான்.

செய்தித்தாளின் பின்னேயிருந்த முகம் எட்டிப் பார்த்தது.

''இந்த வருஷம் குளிரு ஜாஸ்திதான்... இனி மார்கழி மாசம் எப்படி இருக்குமோ?''

பேச்சுக் கொடுத்தவனைப் பார்த்து முறுவலித்த அசோக் பேச்சைத் தொடர்ந்தான். இப்ப ''சீஸனு இல்லியே. ஒரு தண்ணி பார்ட்டி இப்பத்தான் சாப்பிட போயிருக்குது.

மேலப்பாளையம் போறவுக... உங்களை வழியில இறக்கி வுட்டுருவாக... என்ன ஜோலின்னு வந்தீக?''

''இங்க... மனநல ஆஸ்பத்திரி இருக்குதுல்ல...?''

அங்கிருந்தவன் சற்று விறைப்பானான்.

''யாரையும் இங்க சேர்க்க வந்தீங்களா?''

''இல்லயில்ல... கட்டுரை எழுதணும்... அதான் தகவல் சேகரிக்கலாம்னு...''

''பத்திரிகையா?''

''இல்ல படிப்பு... ப்ராஜக்ட்.''

அவன் உடம்பு தளர்ந்தது.

''பல பிள்ளைங்க ப்ராஜக்ட்னு மூலிகை, சித்தா, அருவித்தண்ணி, டூரிஸ்ட் பத்தியெல்லாம் எழுதுங்க... நீங்க இந்த அக்கிரமம் பத்தி எழுதணும் தம்பி.''

''சொல்லுங்க.''

''குடும்பத்துல சண்டை, பிரிவினை, பொறாமைன்னா வலுத்தவன் இளைச்சவனை இந்த மாதிரி சித்த மடத்துல கொண்டு சேர்த்துடறது.

'இவம் பைத்தியக்காரன்னு' பொய் சொல்லி சேர்த்துடறது... இங்க மாசச் செலவுக்கு எவ்வளவு வாங்குவான்றீங்க? பத்தாயிரம் வரை... பணம் கொழுத்தவனுகதான் வாரது... இவனுகளும் பிடுங்கிருவானுக...''

''அத்தனைப் பணம் வாங்கி... சௌகர்யமா வச்சுக்கு வாங்கதான?''



''காசை அதுக்காத் தராஙுவ? பங்காளி மக்கி மடிஞ்சு போவத் தராதுல்லா? தான் ஜெயிலுக்குப் போலாம் மத்தவனை அடிச்சுச் சாய்க்கறதுதானே குறி...''

''அப்ப ஆரோக்கியமானவங்ககூட இங்க அடைபட்டிருப் பாங்களா?''

''வரும்போது கத்திக் கூச்சல் போடுவாங்க... கையும் காலும் கரணை கரணையாட்டம் இருக்கும். அவனையே மறுவாரம் போய் பார்த்தா அடையாளம் காண முடியாது.''

பீடி பற்ற வைத்து ஆழ இழுத்தான்.

நுனியில் கனற்ற தணலின் சூடு தன்னைச் சுட்டது போல அசோக்கிற்கு சிலிர்த்தது.

''வந்ததுமே பேதிக்கு மருந்து புகட்டிர்றது. சாப்பாடு கிடையாது. மறுநாளே ஆளு கிறங்கிடும். மூணாம் நாளு தலையைக் கூட உசத்த முடியாது. பிறவு கஞ்சி மட்டுந்தான்'' கை காலை கட்டிப் போட்டு, பலருக்குச் சீழு வச்சிரும்... சில பேருக்கு அபினு தந்து கிறக்கிடறது... அவன் பேஸ்து அடிச்சாப்ல கிடப்பாம்...''

''கடவுளே இதையெல்லாம் நீங்க புகார் பண்ணனும்?''

''இவ்வளவு பணம் வசூல் பண்றது எதுக்கு? மாமூலு எல்லா இடத்துக்கும் பாயுமில்ல? ஏர்வாடில தீ பிடிச்சதால விஷயம் வெளியாகி, போலி டாக்டரு சாமியாருங்க நடத்தின இடங்களை எல்லாம் மூட உத்தரவாச்சு... பல பேரு உசிரு பிழைச்சானுவ... ஆனாலும் திரும்பிப் போவ ஒரு குடும்பம் இருந்தாவில இவனுங்க போயிருந்து உடம்பு தேற முடியும்?''

''ம்... நீங்க... என்ன வேலை?''

''மசாஜ் பண்ணி வுடுவேன். வெள்ளைக்கார டூரிஸ்ட்களை தேனருவி வரை கூட்டிட்டுப் போவேன்... சீசன் சமயம் இப்படி உக்கார முடியாதுங்க...''

''டாக்டர் சௌந்தர்ராஜனுடைய கிளினிக் எப்படி? அவர் முறையான டாக்டர்னு கேள்விப்பட்டேன்... ஆனா உள்ளே ஏதும் முறைகேடாய் நடக்குதா?''

''யாரு ஒரு சின்னப் பொண்ணைக் கல்யாணம் கட்டிக்கிட்டவரா? அவரு மகள் மாதிரி இருக்குது அது... போதாதுக்கு அப்பாரனு வேற... மனசை ட்ரீட் பண்ரேங்கற இந்த ஆசாமிகளை முதல்ல ட்ரீட் பண்ணணுங்க... மூளை பிசகிடுது...''


அசோக்கும் அவனுடன் சேர்ந்து நகைத்தான்.

''ஆனால் கிளினிக்கிலே ஏதும் குல்மால்...''

''அது பக்கா ஆஸ்பத்திரிதான்... ஆனா எந்தப் புத்துல என்ன பாம்போ... எத்தனைப் பாம்போ?''

நுனி வரை இழுத்த பீடியை சுண்டி எறிந்தபடி கைகளை விரித்தான் அவன்.

## 5



மறுநாள் காலை பத்து மணிக்கு பூத்தின் டெலிபோன் அழைத்தது.

அழைப்பு தனக்குத்தான் என்ற நிச்சயத்துடன் கருவியை எடுத்தான் அசோக். இந்த பூத் நடத்துபவன் அவனது பால்ய சினேகிதன் என்பதால் அசோக்கிற்கு இத்தகைய சலுகைகள் உண்டு.

மறுமுனையில் பேசியது அனுதான்.



கண்ணாடி கதவை 'கிச்'சென மூடிவிட்டு இவன் தனிவாய் பேசியதை அனு முழுக்கும் கேட்டு விட்டு, ''விட்டுடு அசோக்'' என்றாள் முடிவில்.,

''என்ன... எதை...?''

''இது நாம எதிர்பார்க்காத பெரிய பூதம்... கிளறாம கிணறை மூடிடு.''

''எதுக்கு அனு? பயப்படறியா என்ன?''

நேற்றிரவு அடிக்கடி தனக்கு தூக்கத்திலும் நடுங்கியதை மறந்து விட்டு 'கெத்'தாக கேட்டான்.

''இந்த கைட் சொல்றதைக் கேட்டால் பயங்கர மாயிருக்கே?''

''இப்ப அந்த மாதிரியான மோசடி சென்டர்லை எல்லாம் மூடியாச்சு. டாக்டர் சௌந்தர்ராஜனைப் பற்றி எந்தப் புகாருமில்லையே...?''

''அப்ப அந்த ரம்யா ஏன் உன்னைத் துரத்தினா? இது வேண்டாத வம்பு அச்சு. நாம சம்பந்தப்பட்ட விஷயம்னா துருவலாம்... புகார் பண்ணலாம்... ஆனா...''

''ஏதோ விவகாரம் இருக்குன்னு தெரிஞ்சு போச்சல்ல? இனி விடக் கூடாது முடியாது அனு... புலி வாலைப் பிடிச் சுட்டோம்.''

''நோ இப்பமே விட்டுடலாங்கறேன்'' - உரக்கவே சொன்னாள்.

''நம்ம ஷாலு டீச்சர் என்ன சொல்லுவாங்க? 'துறை முகத்துல இருக்கற கப்பல் பத்திரமாய் இருக்கும். ஆனால் துறைமுகத்தில் இருப்பதற்காக கப்பல் கட்டப்படலை...

நினைவிருக்கில்லை? துணிஞ்சு நடுக்கடல் வரை போய்தான் பார்ப்பமே?"

"நடுக்கடல் ஓ.கே. ஆனால் நான் ஆழத்துக்கு வரலை."

"அதாவது மூழ்கிட வேண்டாங்கற... அது சரிதான்... நீ மறுபடி ரேவதி மேம் வீட்டுக்குப் போகும்போது..."

"உன்னையும் கூட்டிட்டுப் போறேன். சரிதானே?"

தாத்தாவுடன் இரண்டு நாட்களை சமர்த்தாய் கழித்த அசோக் மூன்றாம் நாள் கிளம்பி விட்டான்.

"சாயங்காலம் வந்திடுப்பா... கோயிலை வெள்ளை அடிக்கனும்" நீ வந்து ஒதுங்க வச்சா உதவியாயிருக்கும்."

"ரைட் தாத்தா... வெஸ்டரியை சுத்தம் பண்ணினேன்... முக்கால்வாசிப் பாட்டு புஸ்தகங்க கிழிஞ்சு தொங்குது... எல்லாம் எடுத்துக்கிட்டேன்."

"எடுத்து?"

"பைண்ட் பண்ணத் தரப்போறேன்."

"குட் ஒர்க்" - பெருமிதத்துடன் புன்னகைத்தார் பெரியவர்.

"வரட்டுமா தாத்தா?"

"அனும்மாவை நான் அன்போடு விசாரித்ததாய் சொல்லு."

இத்தனைப் பாசமான தாத்தாவிடம் புலி வால் சங்கதியைச் சொன்னால் என்ன என்ற ஒரு நப்பாசை எழுந்தது.

ஆனால் வயது ஏற ஏற பயங்களும் ஏறுகின்றன.

அனுவைப் போல தாத்தாவும்.

'இது கிணற்று பூதம்... மூடிவிடு' என்று விட்டால்?



இரண்டு 'சக்கா மஸ்கா' பிஸ்கட் பொட்டலங்களுடன் பஸ் ஏறினான். ரேவதியின் வீட்டிலிருக்கும் வாண்டிற்குத் தரலாம் என்று.

அவன் எதிர்பார்த்தது போல அந்த வாண்டு வீட்டில் தான் இருந்தான். என்றாலும் வீடு களேபரப்பட்டுக் கொண்டிருந்தது.

"சொன்னாக் கேட்டாதானே... அவ்வளவு உயரத்திலேருந்து விழுந்து. இவன் முழுசாய் இருக்கறது ஆண்டவன் புண்ணியந்தான்."

இவனுடன் வந்த அனு உள்ளே ஓடினாள்.

ரேவதியின் உரத்த புலம்பல் தொடர, வேலையாட்கள் பதட்டத்துடன் அலைந்தனர்.

"வாங்க... வாய் விட்டுச் சொல்லவும் ஆளில்லாமத் தவிச்சிட்டிருந்தேன்."

"என்னாச்சு? குட்டிப் பயல் 'கம்'னு படுத்துக் கிடக்கறான்?"

அனு இயல்பாய் கட்டிலின் ஓரமாய் போய் அமர, படுத்திருந்த சிறுவன் முகத்தில் சிறு சிரிப்பு வந்தது.

வெளிறிய சின்ன முகத்தை அச்சிரிப்பு பிரகாசமாக்கியது.

"விழுந்துட்டேன்" என்றான் சற்று பெருமிதத்துடன்.

"அந்த வாதாம் மரத்திலேருந்து அனு..."

"ஏண்டா அதில ஏறினே?"

"குருவி முட்டை பார்க்க..." என்றவன் கண்கள் அசோக்கை மொய்த்தன.

அனு புரிந்தவளாய் அறிமுகப்படுத்தினாள்.

''இது அசோக் அங்கிள்... ஒரே ஸ்கூல்ல படிச்சோம்.''

''நீங்க ஸ்கூல்ல... மரம் ஏறுனதே இல்லியா அங்கிள்...?''

விவேக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான்.

''ஆன்ட்டி ஏறுவாங்க... நான் அதைப் பார்த்ததோட சரி...''

''பயமா?''

''ஆமா... அனுவைக் கண்டால் எல்லோருக்கும் பயந்தான்.''

இந்தப் பேச்சில் சூழல் சற்று லகுவாக, ரேவதி எழுந்தாள்.

''எல்லாருக்கும் ஜூஸ் கொண்டு வரேன்.''

''எனக்கு கிரேப் ஜூஸ்'' கூவினான் சின்னப் பயல்.

''சரி. அனு நீ இவனைக் கீழே இறங்காமப் பார்த்துக்கோ...''

ரேவதி வெளியேற, அனு சிறுவனை அதட்டினாள்.

''ஏன்டா மரத்துல ஏறினே... பாரு உன்னைவிட அம்மா பயந்துட்டாங்க... இனி ஜாக்ரதையாய் இருக்கனும் என்ன?''

''ம்ம்... சித்தப்பாதான் சொன்னாங்க...''

''என்ன - மேலே ஏறன்னா?''

''மரத்துல குருவி கூடு இருக்குன்னு.''

உள் வாசலில் நிழலாடியதை அனு கவனித்தது அப்போது
ான்.

ஒரு சிறிய உருவம் கதவோடு ஒட்டி நிற்பது புரிய, சற்று
ன்னோக்கி சரிந்து பார்த்தாள். அங்கு ஒரு பெண் நின்றாள்.

''யாரது?''

அனு அழைப்பது தன்னைத்தான் என்பது புரிய, அப்பெண்
ைம போல தலை நீட்டினாள். பின் அறைக்குள் வந்தாள்.



நினைத்தது போல அது சிறுமி இல்லை. குறைந்தது 15, 16 வயதிருக்கும்.

''அங்கே ஒளிஞ்சுட்டு என்ன பண்றே?'' அனு சற்று அதட்டினாள்.

''தம்பி கூப்பிட்டா, உதவிக்கு வரணுமேன்னு நின்னேன்...'' தயக்கமாய் பதில் வந்தது.

''அது கௌரி.''

சூழ்நிலை புரிந்து அறிமுகப்படுத்தினான் விவேக்.

கௌரி சற்று துணிவுடன் முன்னே வந்தாள்.

''இனி இப்படி ஆபத்தான வேலையெல்லாம் செய்யப்படாதுன்னு நல்லாச் சொல்லுங்க...'' என்றாள் புகாரின் தொனியில்.

''உனக்கு இங்க என்ன வேலை?''

''பூப்போட்ட சீட்டிப் பாவாடை, மேலே ஆண்களின் 'தொளதொள' சட்டையுமாய் நின்றவளைக் கேட்டாள் அனு.

''வீட்டு வேலைக்குத்தான்.''

கௌரியின் முகம் பாமரத்தனமாய் இல்லை. அதில் படித்த களை தெரிந்தது.

''என்னை கவனிச்சுக்கிறதுக்கு.''

குறுக்கிட்டு விளக்கினான் விவேக்.

''அப்ப நீ ஏன் அந்த வேலையைச் சரியாய் செய்யலை கௌரி?''

அனுவின் கேள்விக்குப் பதிலாய் கௌரியின் முகத்தில் ஏதேதோ உணர்ச்சிகள். அவள் கண்களின் உணர்வு எது என்பதைக் கவனிக்க முடியவில்லை.

ஆனால் நிஜக நிஜமான உணர்ச்சிகள் அதில் அலையடித்தன.

பயம்...? கோபம்...? வருத்தம்...? அல்லது அலட்சியம்..?

"விவேக்... என்னடா இது?" பதட்டத்துடன் வாசல் பக்கமிருந்து வந்தக் குரலைக் கேட்ட அனைவரும் அப்பக்கமாய் திரும்பினார்கள்.

நடுத்தர உயரமும் பருமனுமாய் ஒரு இளைஞன் அவசரமாய் வந்து கொண்டிருந்தான்.

மழித்த முகமும் ரிம்லெஸ் கண்ணாடியும் அவனை வடக்கத்தியவன் போலக் காட்டியது...

புதியவன் நெருங்க, அனு அதே வேகத்தில் ஒதுங்க இருவரும் மோதிக் கொள்ளும் நெருக்கத்தில்... சமாளித்தவர்கள் சற்று அசட்டுத்தனமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நான் ரவீந்தர். இவனுடைய சித்தப்பா."

"ஓ... ரேவதிக்கா உங்களைப் பற்றி பேசுவாங்க... நான் அனு."

அவன் சிறு முறுவலுடன் தலையசைத்தான்.

"உங்களைப் பற்றி அண்ணி சொல்லக் கேட்டிருக்கேன்."

இப்போது அவன் கவனம் படுத்திருந்த சிறுவனிடமாய் றியது.

"என்னடா விவேக் ஜாக்கிரதையாய் இருக்கவேணாமா?"

குனிந்து பரிவுடன் சின்னத் தலையை வருடினான்.

"அந்தக் கூடு... நீங்க சொன்னது."



"ஷ்... பேசாமப் படு... நாலு நாளைக்கு எழவேக் கூடாது."

ரேவதி பழரசக் கோப்பைகள் வைத்த தட்டுடன் வர, கௌரி ஓடிப் போய் அதை வாங்கி, எல்லோரும் எடுக்கும்படி நீட்டினாள்.

"அம்மா... உங்களுக்கும் எடுத்துட்டு வர்றேன்."

"தேவையில்ல கௌரி... கிச்சன்ல மிக்ஸி ரிப்பேராம். நீ போய் சமையலுக்கு மசாலை அரைச்சுக் கொடு."

"ஆகட்டும்மா."

ஒரு நிம்மதியுடன் கௌரி அங்கிருந்து விலகியதாய் தோன்றியது.

எல்லாரிலும் ஏதோ மர்மம் இருப்பதாய் தான் கற்பனை செய்கிறோமோ? - அனு குழம்பினாள்.

முன்பின் அறியாத பெண்ணை போட்டோவில் பார்த்த அன்றிரவே அவளை மிக விநோத சூழ்நிலையில் அசோக் சந்தித்தது விசித்திரம் தான்... ரேவதி அவர்களைப் பற்றி பேச விரும்பாதது விநோதமில்லை...

ஆனால் திடீரென்று மொத்த உலகமே தனக்கு சற்று கோணலாய் தெரிவது ஆரோக்கியமானதுமல்ல என்று பட, அனு பேச்சை மாற்றினாள்.

"விவேக்... நீ அம்மா சொல்படியே இருந்து அம்மாட்ட 'குட்பாய்' சர்டிபிகேட் வாங்கினா நாம எல்லாரும் சீக்கிரம் பிக்னிக் போகலாம்."

"ய்யே... புலி அருவிக்கு... பேபி ஃபால்ஸுக்கு."

"அங்க அஞ்சடி உயரத்துல குழாய் தண்ணி போல ஒரு அருவி விழுமே... அதிலேல்லாம் எங்களால குளிக்க முடியாதே?"

பிரு பண்ணினாள் அனு.

''அங்கயே பெரிய்ய அருவியும் இருக்குது ஆன்ட்டி... நீங்க அங்க குளிங்க... பேபி அருவில்ல நா பயமில்லா குளிக்க லாம்ல?''

''அப்ப நீ பயந்தாங்குளின்னு ஒத்துக்கறே...?''

''ஆங்... உங்களை மாதிரி பெரிசானதும் நானும் பெரிய்ய அருவில குளிப்பேன்.''

''சரிடா குரா... பை... இடையில உன்னோட போன் பண்ணி பேசறேன்... சரியா?''

''பை... பை...''

''கௌரி... வந்து தம்பியோட இரு. நா இவங்களை வழியனுப்பிவிட்டு வரேன்...''

''நான் இருக்கேனேன்னணி.''

''இருக்கட்டும்ப்பா... இவன் ஏதும் வம்பு பண்ணுவான்.''

கௌரி வா. மூவரும் வாசலை நோக்கி நடந்தார்கள். ரேவதியின் முகம் சோர்ந்திருந்தது. கண்களின் கலக்கம் அனுவையும் சேர்த்து கலக்கியது.

''அதான் விவேக்குக்கு ஆபத்தில்லையேக்கா... பிற ன்ன... தைரியமாய் இருங்க...''

''உனக்கு தெரியாது... புரியாது அனு... அடிக்கடி இவனுக்கு வது நேர்ந்திடுது... பிழைச்சது மறுபிறப்புங்கறாப்ல... லஞ்சு மாசத்துக்கு முன்னே ஃபுட் பாய்ஸனிங் ஆயி, ஸ்பிடல்ல மூணு நாள் கிடந்தான். நாங்க எல்லோரும் து சாப்பிட, அவனுக்கு மட்டும் எந்த உணவு ஆகாமல் சன்ரது டாக்டருக்கேப் புரியலை.''



''குழந்தைங்க எதையாவது வாய்ல போடறது சகஜம்க்கா...''

''அதிலேருந்து சாப்பாடு விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாய் இருக்கேன்... போன தரம் பிக்னிக் போனப்ப மலை ஏறுனோம். அங்கேருந்து வழுக்கி விழ இருந்து... கடவுளே... அதனால தான் அவனுக்கு உயரமான விஷயங்கள்னா ஒரு பயம்...''

''அடடே இதெல்லாம் தெரியாமல் பிக்னிக்னு பேச்செடுத்துட்டேன்.''

''பரவாயில்ல அனு... குழந்தையை இப்படியே பொத்தி வளர்க்கறதும் சரியில்லை. பழைய பயம் கரையணும்னா மறுபடி பிக்னிக் போய் பத்திரமாய் வீடு திரும்பறதுதான் அதுக்கான வழி. உன்னோட வரும்போது எனக்கும் அத்தனை பதட்டமிருக்காது.''

''வேறேதும் விபத்துகள்...?''

தயக்கமாய் கேட்ட அசோக்கை விழிகளால் சுட்டாள் அனு.

ஏற்கனவே அச்சத்தில் குழம்பியிருப்பவளை மேலும் குழப்பாதே என்ற அதட்டல் அதிலிருந்தது.

''ம்ம்... ஒரு தரம் ஷாக் அடிச்சுது... நல்ல வேளை பக்கத்திலேயே ஆயாவும் கௌரியும் இருந்ததால பிழைச்சான். தெய்வாதீனமாய் தப்பிக்கிறான்னாலும் எனக்குள்ளே பயம் வளரத்தான் செய்யுது... சரி கிளம்புங்க... உங்களையும் அநாவசியமாய் குழப்பக் கூடாது... நான்.''

ஒரு சோகைச் சிரிப்புடன் கையசைத்தாள் ரேவதி.

## 6

ஓரக்கண்ணால் படுத்தபடியே கடிகாரத்தைப் பார்த்தாள் அனு.

மணி காலை ஒன்பது.

ஆனால் இன்னும் நிறைய தூக்கம் பாக்கியிருப்பதாக உடம்பு கனத்தது. கெஞ்சியது.

அனுவின் தாயார் உயிரோடு இருந்திருந்தால், அதட்டி, ஏன் அடித்தும் கூட மகளை எழுப்பி விட்டிருக்கக் கூடும்.

ஆனால் அப்பா,

'ராஜாத்தி பாவம் அசந்து தூங்கறா... எழுந்ததும் பூஸ்ட் கொடு ஆயா' என்பதோடு வேலைக்குக் கிளம்பி விடுவார்.

நினைவு தெரிந்த நாளாய் இங்கு வேலைக்கிருக்கும் ஆயாதான் ஒரு அம்மாவின் உரிமைகளை அவ்வப்போது தன் கையில் எடுத்துக் கொள்வாள்.

''இப்படி நேரங்கழிச்சு படுத்து சூரியன் தகிக்கிறப்ப எழுந்தா அது நல்லதுக்கில்லை பாப்பா... உடம்புக்கு கேடு. புத்தியும் சோம்பலாயிடும்... வயசுப் பொண்ணு விடியலோட எழுந்து விறுவிறுன்னு நாலு வீட்டு வேலை செய்தால் நல்லது?''

''நல்லதுக்கெல்லாம் இது காமமில்லை ஆயா!''

அனு ஆயாவை சீண்டிவிட்டு உறக்கத்தை தொடருவது தான் வழக்கம். இன்றும் சாட்டின் தலையணையை வாகாய் இழுத்து அணைத்தபடி சுகமாய் புரண்டாள்.

கல்லூரி நாட்களில் இதெல்லாம் சாத்தியமில்லை.

மற்ற நாட்களில் எழுவது ஐந்தரைக்கு என்றால் பரீட்சை யத்தில் அலாரம் இல்லாமலேயே யாரோ தட்டி எழுப்பிய ழுசில் நாலரைக்கு விழிப்பு தட்டும்.



அன்னன்றைய பாடங்களை விடாமல் படித்தும் விடுவதால் அவளைப் பரீட்சைகள் மிரட்டியதில்லை.

அன்று கற்பிக்கப் போகும் பாடங்களை கூட அவள் ஒரு பார்வை பார்த்து விட்டேப் போவதால் புரிதல் இலகுவாயிருக்கும். புத்திசாலித்தனமான சந்தேகங்களை எழுப்பி, ஆசிரியரிடம் ஒரு 'ஷொர்ட்டு'டன் அதைத் தீர்த்துக் கொள்வாள்.

ஆனால் ஆயா சொல்வது போல அனுவிற்கு இன்னும் வீட்டு வேலைகளில் பழக்கமோ பதவிசோ ஏற்படவில்லை. படிப்பிலும் ஓரளவு அப்பாவின் தொழிலிலுமே மனம் ஈடுபட்டிருந்தது. காதலும் கூட இன்னும் அவளுக்கு அந்நியம்தான்.

கதவு மெல்ல தட்டப்பட்டு பின் திறந்தது.

அப்பாதான்.

''குட்மார்னிங்ப்பா...''

''கிரேட் மார்னிங். பத்து மணிக்கு கிளம்பணும்னியேம்மா? புரண்டுட்டு இருக்கியே?''

''இன்னும் ஒரு மணி நேரமிருக்கேப்பா...?''

புன்னகையுடன் எழுந்தாள்.

''ஒரு மணி நேரத்துல உன் குளியல், சாப்பாடு, சிங்காரமெல்லாம் முடிஞ்சிடுமா?''

''என்ன சிங்காரம்ப்பா? வழக்கம் போல ஒரு சூடிதார்... தலையை வாரி ஒரு க்ரன்ச்சியை முடிச்சு போடணும்... அவ்வளவுதானே...? இருங்க... மூணு நிமிஷத்துல நானும் டைனிங் டேபிளுக்கு வந்துடறேன்... நீங்க சாப்பிட்டாச்சா?''

''இல்ல...''

"உங்களோட வந்து உக்காந்திருக்கேன்... ம்ம்...?"

குளியலறைக்குள் நுழைந்த தன் செல்ல மகளைப் பார்த்து நின்றார் பூபதி. பேரழகி இல்லை என்றாலும் அனுவிடம் தனி கவர்ச்சி இருந்ததுதான்... இந்த இளமையின் துடிப்பு இருக்கும்போதே அவளைத் தக்கத் துணையோடு சேர்த்து விட வேண்டுமென்ற தவிப்பு அவருக்குள் நாளாக ஆக அதிகமாய் அலை மோதுகின்றது.

பல், முகம், கழுவி முகத்தை ஒற்றியபடி வெளியே வந்த அனு, ஆச்சரியமானாள்.

"என்னப்பா... இன்னும் இங்கேயே நிக்கறீங்க?"

வாசித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை மடக்கினார் பூபதி.

"சேர்ந்தே போவோம்னுதான்... ஹி... ஹி... இன்னைக்கு எந்த சுடிதார்ம்மா போடப் போற? இதையா?"

மேசையில் வைத்திருந்த உடையைப் பார்த்தபடி நெற்றியை நீவினார். மறுநாள் போடப் போவதை முதல் நாள் இரவே வெளியில் எடுத்து வைத்து விடுவது அனுவின் பழக்கம்.

"ஆமாம்ப்பா... காட்டன் தான் வசதி. இதிலேயே குளிச்சுட்டு பிறகு வேற மாத்திக்கடலாம்."

"அடுத்த டிரஸ் என்ன?"

"இன்னொரு காட்டன் சுடி... ஏம்ப்பா?"

கூந்தல் மேலாகச் சீவி முடிந்தவள் ஆச்சரியமாகக் கேட்டாள்.

"இல்ல... குளிச்ச பிறகாவது ஒரு நல்ல சேலை ...த்திக்கம்மா..."



"அப்பா... இன்னிக்கு போறது புலியருவிக்கு. அங்கே உடை மாற்ற அறை ஏதும் கட்டி விடலை... அப்படிப்பட்ட வசதி இருந்தாலுமே ஈர டிரஸ்ஸை உருவி, வேற மாத்தறது ஏகக் கஷ்டம்... இதுல ரவிக்கைக்குள்ள நுழைஞ்சு ஸாரியைச் சுற்றி..." என்று பேசியவள் சட்டென நிறுத்தினாள். "நேராய் சொல்லுங்கப்பா என்ன விஷயம்?"

"இல்ல... பிக்னிக்கிற்கு ரவீந்தரும் வருவானில்ல?"

மறுகணம் குபீரென சிரித்தாள் அனு.

"ஓ... அதுதான் விஷயமா? அதாவது நான் குளிச்சு, புது மலராட்டம் புடவையில் கூந்தலை உலர்த்தணும்... அதுல ரவீந்தர் மயங்கி..."

"ஷ்... அனு என்ன இது கூச்ச நாச்சமில்லாமல்?"

"சரி... அப்ப வேறென்ன?"

"விஷயம் அது தான்... ஆனால் அதை இப்படிப் போட்டு உடைக்காதேங்கறேன்!"

இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

"கல்யாணத்துக்கு இன்னும் நாலைஞ்சு வருஷம் போகட்டும்ப்பா."

"இப்பமே உன்னிடம் நாணல் கோணல் ஏதுமில்லை... அஞ்சு வருஷத்துக்குப் பிறகு முற்றல் மரமாட்டம் நிற்பே."

"மரம் முற்ற முற்றதானேப்பா வேல்யூ அதிகம்?"

"பொண்ணுங்க இளசாய் இருந்தால்தாம்மா மதிப்பு. முதிர் கன்னிகளை ஆங்கிலேயர்கள் கூட 'ஷி' வாஸ் லெஃப்ட் இன் த ஷெல்ஃப்னு இளக்காரமாய் தானே குறிப்பிடறாங்க..."

''பரவாயில்லையே... ஆங்கில இடியம்ஸ் எல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கீங்க?''

''இந்த வழக்கு எப்படி நடைமுறைக்கு வந்ததுன்னு உனக்கு தெரியுமா?''

யோசித்தவள் உதடு பிதுக்கினாள்.

''நான் இங்லாண்ட் போயிருந்தப்ப ஷேக்ஸ்பியர் கால வீடு ஒன்றை நேரில் போய் பார்த்தேன் அனு. வீட்டில சுவரோடு பதிக்கப்பட்ட பெரிய அலமாரிங்க இருந்தன. அதிலே மூனு, நாலு அடுக்காய் மரப்பலகைங்க. கல்யாணம் ஆகும் வரைக் கன்னிப் பொண்ணுங்களுக்கு அதில்தான் படுக்கை! கல்யாணமான பிறகு தான் கட்டில்!''

''கன்னிகள் அலமாரியில் முடங்கிக் கிடக்கணுங்கறதைக் குறிக்கும் சொலவடைதானா அது? இன்ட்ரஸ்ட்டிங்.''

''நானும் அது போல உன்னை முடக்கினாத்தான் சரிப்படுவே போலிருக்குது. சொகுசாய் மெத்தையில், சாட்டின் தலையணையோட கிடந்தால் கல்யாண நினைப்பே வராது போல...''

''நான் வேணும்னா இனி ஷெல்பிலே முடங்கிக் றேன்ப்பா... வாழ்க்கை முழுசக்குமான கால்கட்டை விட த்திரி ஏழு, எட்டு மணி நேரம் அடைபடறது தேவலை...!''

''ஜோக்ஸ் அபார்ட், நீ அந்த ரவீந்தரைப் பார்த்தியா... ச்சிருக்குதா?''

''விவேக் மரத்திலேருந்து விழுந்த அன்று சந்திச்சேன்... ப சைட் அடிக்கற சூழ்நிலை இல்லைப்பா.''

ப்பாவிற்கு இடியாப்பம், சொதி பரிமாறியபடி பேசினாள்.



''இன்னைக்கு அருவிக் கரையில...''

''நான் பிக்னிக் போகலைப்பா...''

''அப்ப நானும் சாப்பிடலை...'' அவர் கையை உதறினார்.

''சரி... சரி... நாம ரொம்ப பிகு பண்ணிக்க வேணாம். நானும் உங்களோடயே சாப்பிடறேன். குளியல்தான் அருவியிலே ஆகப் போகுதே... சும்மா சேன்ஜ் பண்ணிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்.''

தனக்கும் பரிமாறியபடி அமர்ந்தாள்.

சாப்பிட்டு விட்டு தகப்பனை வழியனுப்பியவள் முதல் வேலையாய் அசோக்கிற்கு போன் செய்தாள். எடுத்த டெலிபூத் தோழன்.

''அஞ்சு நிமிஷம் கழிச்சுப் பண்ணுங்க... அவனை வரச் சொல்றேன்'' என்றான். காத்திருந்த ஐந்து நிமிடங்களில் ஏனோ சில நாட்களுக்கு முன்பு பார்த்த அரவிந்தசாமி ஜாடை இளைஞன் நினைப்பிற்கு வந்தான். மயங்கிக் கிடந்த அந்நிலையிலும் கூட ஈர்க்கும்படியான ஒரு தோற்றம்... அசோக்கையும் ஒரு ஆணையும் கூட பார்த்தும் கவர்ந்து விட்ட ஆளுமை... 'அவர் உடம்பு தேறியிருக்க வேண்டுமே...' பலமுறை செய்துவிட்ட வேண்டுதலை மீண்டும் மனமார வேண்டினாள்.

ஐந்தாம் நிமிடம் 'பேசி' மூலம் அசோக்கைப் பிடித்தவள் மிரட்டினாள்.

'என்ன பிக்னிக் ஞாபகம் இருக்கில்ல?''

''என்ன... எங்கே?''

"ஐயையோ... தாத்தா பிச்சிடுவார்... அஞ்சுக்கே எழுந்தாச்சு... கீர்த்தனைகளை ஆர்கன்ல வாசிச்சுப் பழகறேன்."

"போதும். கேட்கற காதெல்லாம் பிழைச்சுப் போகட்டும்... நீ கிளம்பி குற்றாலம் பஸ் ஸ்டாண்டுக்கு வா.. இன்னும் 20 நிமிஷ டைம்."

"இதப்பார் அனு. சதா உன்னை அட்டை போல ஒட்டிட்டு வந்தா ரேவதி மேம் என்ன நினைப்பாங்க?"

"தன் கொழுந்தன் பிழைச்சான்னு நினைப்பாங்க."

"புரியலை."

"அப்பா என்னை ரவீந்தரோட சேர்க்கப் பார்க்கறார்..."

"சேர்க்கன்னா... கல்யாணமா?"

"ம்ப்ச்... வேறென்ன... இப்ப அதுதான் அவரோட ஒரே குறி."

"ரவீந்தர் சுருட்டை முடியோட, நிறமாய்... நல்ல மூக்கு... ஹி வாஸ் ஓ.கே."

"பாமரத்தனமாய் பேசாதே... ஆள் பார்க்க எப்படிங்கறது முக்கியமில்லை. குட்டை மொட்டையாய் இருந்தாலும் பரவாயில்லை."

"அது சரி. அதுதான் உனக்கு ஏற்ற ரேஞ்ஜ்..."

"ஏய் அச்சு..! வந்து தொலை... பிறகு பேசிக்கறேன்."

தொடர்பு 'வெடுக்'கென துண்டிக்கப்பட்டது!

ஆனால் வெகு நேரம் அனு பஸ் நிலையத்தைச் சுற்றி ...தும் அசோக் அவளது கண்ணில் படவில்லை.



அவனை ஒரு கல்யாண ஆராதனையில் ஆர்கன் இசைக்க அவளது தாத்தா அமுக்கி விட்டது தெரியாமல் அசோக்கை மனதுக்குள் திட்டித் துவைத்தாள்.

ஆனால் ரேவதியின் வீட்டிற்குப் போனதும் தான் அசோக் வராதது நல்லதே எனப்பட்டது. ஏனெனில் துவாலைகள், மாற்று துணிகள், ஜமுக்காளம், ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளி சகிதம் அருகே தயாராய் காத்திருந்து விவேக்குடன் இரு பெண்கள் மட்டுமே. ஓட்டுனர் பொருட்களை காரில் ஏற்றிக் கொண்டிருந்தார்.

அனு காரை நிறுத்தவும் விவேக் ஓடி வந்து கார் கதவைத் திறந்தான்.

"சீக்கிரம் அப்படியே எங்க காரில ஏறுங்க... கிளம்பலாம்..."

"ரைட்..." என்று அவன் இழுப்பிற்கு இசைந்தாள். நொறுக்குத் தீனியும் பேச்சுமாய் அமர்க்களப்பட்ட 15 நிமிடப் பயணம் அவர்களை புலியருவிக்குக் கொண்டு சேர்த்தது.

## 7

நினைத்ததைவிட அருவியில் அபாரிமிதமான தண்ணீர்.

"முன்னே வரும் வழி காடாட்டும் கிடக்கும். இப்ப எத்தனை வீடுங்க?"

"ம்... பிளாட் போட்டு இன்னும் விற்பனை ஆகாத இடம் ஆகாயம்தான்."

புன்னகையுடன் ஆமோதித்தாள் அனு.

வார நாள்... அதிலும் குளிர்காலம் என்பதால் அங்கு கூட்டமில்லை. அனுவிற்கு இப்போது விவேக்கின் அச்சம் புரிந்து போனதால்,

''எல்லாரும் பேபி அருவியிலேயே குளிக்கலாம்டா செல்லக்குரா...'' என்று விட்டாள்.

அருவி அதிக உயரத்திலிருந்து விழாவிட்டாலும் 'தொப தொப'வென்று குஷியாகவே கொட்டியது.

''கௌரி நீயும் குளி. வா...''

''அப்புறம்ங்கா...'' என்ற கௌரி அவர்களுக்கான குளியல் பொருட்களை அருவி ஓரமாய் கொண்டு சேர்த்தாள்.

கூந்தலைப் பிரித்துக் கோதிய பெண்கள், ஓடை நீரில் இறங்கி அருவியை நோக்கி முன்னேறினர். கால் வழியே 'சுர்ர்' என்று மேலே உச்சிக்குப் பாய்ந்த குளிர்ச்சி அவர்களை 'கிளுகிளு'வென்று நகைக்கச் செய்தது.

அருவிக்குள் தலையை நீட்டியதும் உற்சாகக் கூச்சல் கிளம்பியது. கண்கள் சிவந்து பொங்கும் வரை நீரில் திளைத்து விட்டு கரையேறி கௌரி நீட்டிய துண்டால் தலை துவட்டலானார்கள்.

அதுவரை எட்டியிருந்த தேநீர் கடையிலிருந்த ஓட்டுனர்.

''இப்பத்தான் போட்டாம்மா... நல்லாயிருக்குது'' என்று கொண்டு வந்த சூடான வடையைத் தின்றுவிட்டு உடை மாற்றினார்கள்.

''நாமும்தான் தினம் குளிக்கிறோம்... ஆனா என்னைக் குளியல்லகூட இப்படி ஒரு ஃப்ரெஷ்னஸ் கிடைக்கறதில்லைக்கா.''

''ம். உடம்பே ஏ.஼ி. பண்ணினது மாதிரியிருக்குது.''

ஆனால் அத்தனை பேச்சுக்கும் ரசிப்பிற்கும் நடுவே இரு பெண்களும் விவேக்கை விட்டு ஒரு கணமும் கண்களை அகற்றவில்லை.



அவளை நடுவே உட்கார வைத்தவர்கள் ஓடை நீரில் கால்களை இட்டபடி உட்கார, விவேக் ஓடை மீன்களுக்கு கடலை வீசினான்.

''இனி இங்கே அடிக்கடி வரணும்தான்... போனப்ப பிக்னிக்கின் போதுதான் விவேக் தவறி உருள இருந்தான். அந்த சமயம் எடுத்த படங்களைத்தான் உங்கிட்ட டெவலப் செய்ய தந்தேன்... அதன் பிறகு வெளியே வரவே பிடிக்கலை அனு.''

''விபத்து எப்பவாவது நேரும்தான்... அதற்கு பயந்து ஒதுங்கக்கூடாதுக்கா. கை சுட்டதுன்னு சமையலை விட்டுடறோமா?''

''கை சுடறது வேற... உடம்பு வெந்துடறது பெரிய வேதனையில்லையா? அது கிளம்பின பீதி லேசில் அடங்காது.''

கண்ணெதிரே திமிர்த்திருந்த கரும்பாறைகளை வெறித்தபடி சொன்னாள் ரேவதி.

அவர்களின் பாதங்கள் நீரில் ஊறி மிக வெளுத்திருந்தன.

கடலையைக் கொறிக்க மீன்கள் இவர்களையும் அவ்வப்போது 'நறுக்'கென்று கொறிக்க ஆரம்பிக்க பெண்கள் காலை இழுத்து வெளியேறினர்.

''ரொம்ப பயந்திட்டீங்கக்கா... மனசைத் தேத்திக்கணும் நீங்க.''

''ம்... உன்னோட பேசறது எத்தனையோ ஆறுதலா இருக்குது. வேற பெண் துணை இங்க யாருமில்லையே?''

''உங்களுக்கு நாத்தனார் உண்டுன்னு...''

''ம்... கலிஃபோர்னியாவில் இருக்கறாங்க... அங்கே இதமான கிளைமேட். நிறைய இந்தியர்கள். ஆக மகளோட நாலைஞ்சு மாசம் இருந்திட்டு வர்றேன்னு போன மாமனாரும் திரும்பலை... மாமா இருந்திருந்தால் இங்கே இதெல்லாம் நடந்திருக்காது.''

''எது? விவேக்கிற்கு நேர்ந்த விபத்துக்களா? அதுக்கும் இதுக்கும் எப்படிக்கா முடிச்சு போடறீங்க?''

''இல்லை அனு.. மாமா இருந்திருந்தார்னா இந்த வீட்டிற்கு எங்களை குடியேற விட்டிருக்க மாட்டார்... இல்லைன்னாலும் மத்தவங்களுக்கு ஒரு பயம் இருந்திருக்கும்.''

''இங்க வந்ததாலதானே விவேக் வீட்டில் உங்களோட இருந்தபடியே ஸ்கூலுக்குப் போயிருக்க முடியுது?''

''அப்படிச் சொல்லித்தான் இங்கே வர என்னை ரவீந்தர் சம்மதிக்கப் பண்ணினார். அது தெரிஞ்ச மாமாக்கும் கூட பிரியமில்லை... ஆனால் இங்கே வந்த பிறகு நிறைய குழப்பங்கள் அனு...''

சொல்லவும் முடியாத அடக்கவும் கூடாத குழப்பத்தில் தத்தளித்தது மூத்தவளின் முகம்.

''பரவால்லக்கா, சொல்லுங்க.''

''இங்கே வந்த சில மாசங்களிலேயே இவர்... அதாவது விவேக்கோட அப்பா மாறிட்டார். நீதான் பார்க்கறியே.. சதா அறையில அடைஞ்சுக்கறார். சாப்பாடும் பல பொழுது அவர் அறைக்கே போயிடுது... அதையும் பேருக்கு கொறிக்கறதோடு சரி. கன்னா பின்னான்னு கோவம் வருது. சதா அறையில் என்ன பண்றீங்கன்னா தூங்கறேன்ங்கறார்... எங்கூட நின்னு பேசறது கூடயில்லை...''

இதையே ஒரு திருமணமான பெண்ணிடம் ரேவதி பகிர்ந்திருந்தால்,

'என்ன சண்டை? அதான் நம்ப சந்தோஷத்தை எல்லாம் நார் நாறாய் கிழிக்கற மாமியார், மாமனார், நாத்தனார் யாரும் உன்னோட இல்லையே?' என்றிருப்பாள்.



கல்யாணமாகாத அனு சற்று குழம்பிவிட்டு,

பிஸினஸ்ல ஏதும் பிரச்சனை இருக்குமோ?'' என்றாள் மெள்ள.

''தெரியலை. ஆனால் அதுக்காக எங்க நிம்மதியையும் சேர்த்துக் கொல்றதா?''

நொந்த குரல் இப்போது சற்று ஆவேசமானது.

''அவர் பிரச்னையை தெரிஞ்சுக்கணுங்கா நீங்க.''

''ஒதுங்கி ஒதுங்கிப் போறாரே?''

''அண்ணனுக்கு நெருங்கின ஃப்ரெண்ட் யாரு?''

''ம்ப்ச்... இங்க அப்படி யாருமில்லை... நாங்க முன்னே போல நெருக்கமாய் இருந்திருந்தால் வேற தோழமை தேவைப்பட்டிருக்காது.''

''அவர் தம்பி ரவீந்தர்ட்ட...''

ரேவதியின் முகம் இறுகியது.

''அவங்களுக்கிடையே எப்பவும் அத்தனை நெருக்கம் கிடையாது அனு.''

இளையவளின் குழம்பிய முகத்தில் சற்று வியப்பும் ஏறியது.

''அவங்க ரெண்டு பேரும் உடன்பிறந்தவங்க இல்லை... அதாவது ஒரே அப்பா, ஆனா வெவ்வேற அம்மாக்கள்...''

''ஓஹோ... ரவீந்தர் இளைய மனைவியின் மகனா... ஆனால்.''

''எனக்குமே இந்த விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல கல்யாணத்தப்ப என் மாமியார் இல்லை. ஆக ஏதோ மேம் போக்காய் தெரிஞ்ச விபரங்கள்தான் என் மாமியார் ஆஸ்த்

தூமா பேஷண்ட். அடிக்கடி இளைப்பு, தினறல்னு படுத்திட அப்பா மாமாவுக்கு எப்படியோ பழக்கமான பெண்ணிற்குப் பிறந்தவன்தான் ரவீந்தர். பிறகு அந்தப் பெண் யாரோடவோ ஓடிப் போயிட்டதாயும் அப்ப எட்டு, பத்து வயசாயிருந்த ரவீயை மாமா கூட்டிட்டு வந்துட்டதாயும் தெரியும்.''

''ம்... நான் ராகவ் அண்ணனை பார்த்தே ரொம்ப நாளாச்சு.. உங்கக் கல்யாணத்தப்ப புதுப்பாவாடையோட குஷியாய் சுத்தி வந்தேன்... அது மட்டும் நினைப்பிருக்குது.

''அதாச்சே பத்து வருஷம்... ஐந்து வருஷங்களுக்குப் பிறகுதான் எனக்குப் பிள்ளை தரிச்சது நிஜமாவே தவமிருந்து கிடைச்சவன்... ஆக விவேக்கிற்கு ஏதும்னா தாங்கலை...''

''வால் பசங்க இப்படி வம்புல மாட்டறது சகஜம்க்கா... நீங்க இதைப் பெரிசுபடுத்தி பயப்படக்கூடாது.''

எதையோ சொல்ல நினைத்து மனதை மாற்றிக் கொண்ட ரேவதி ஒரு நீண்ட பெருமூச்சை மட்டும் விட்டாள்.

திரும்பும்போது விவேக் சில ரைம்ஸ்களைச் சொல்ல சூழ்நிலை சற்றுத் தேறியது. தன் தாயின் மடியிலிருந்தபடி விவேக் சைகைகளுடன் பாடுவதை கௌரியும் முன்புறமிருந்த படியே ஓரக் கண்ணால் ரசித்தாள். வேலைக்காரப் பெண் என்பதால் வாய்விட்டு சிரித்து ரசிக்கக்கூடாதுதான். ஆனாலும் ஏனோ அவனின் ரசிப்பிற்குப் பின்னே வேறு ஏதோ ஒரு உணர்வும் தெரிந்தது.

என்ன அது?

அதற்குள் வீடு வந்து சேர்ந்து விட்டார்கள்.

''குளிச்சா வயிறு 'கபகப'ன்னு பசிக்கும். வா அனு.. சாப்பிடலாம்.''



''வடையெல்லாம் உள்ளே போயிருக்கே...?''

அனு தன் வயிறைத் தட்டினாள்.

''கிளம்பும்போதே கோழி குருமா செய்துட்டேன்... வெண்டைக்காய் கூட்டு, வெள்ளரிப்பச்சடி, வெல்லப் பாயாசம் தயாரிக்கச் சொல்லியிருந்தேன்.''

''ம்... மெனுவைக் கேட்ட பிறகு பசிக்கற மாதிரிதான் தோணுது.''•

''கௌரி, இந்த ஈரத்துணிகளை எல்லாம் சுப்பம்மாவை விரிச்சுக் காயப்போடச் சொல்லு. குழம்பை சூடு பண்ணு.''

அவர்கள் வழியில் வாங்கிய மங்குஸ்தான் பழக்கூடை யுடன் சாப்பாட்டுக் கூடத்தினுள் நுழைந்த விவேக் கத்தினான்.

''ஹை... அப்பா!''

''இவர் சாப்பிட வந்து உட்கார்ந்திருக்காரா என்ன?'' ரேவதி அவசரமாய் உள்ளே ஓடினாள்.

''பசிக்குதாங்க... இதோ ஒரு நிமிஷத்துல எல்லாம் டேபிளுக்கு வந்திரும் உக்காருங்களேன்.''

உள்ளே அவள் பரபரப்பது கேட்டது.

அனு தயங்கி நின்றாள்.

இதுவரை தன் கண்களில் படாத ராகவின் முன்தான் திடீரென்று போய் பிரதட்ஷணமானால் இருவருக்குமே சற்று சங்கடமாகிப் போகும். தன்னையே அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்த்தான். ஆனால் ரேவதி தன் கணவனைப் பற்றி கவலையுடன் சொன்னதை எல்லாம் கேட்ட பிறகு, அந்த அறிமுகத்திற்கு பிறகு ராகவ்வின் வரவேற்பு எப்படி யிருக்குமோ என்று வேறு சஞ்சலமாயிருக்கிறது.

போய் விடுவாரோ?

முகத்தை திருப்பியபடி "ப்பா... இதைப் பாருங்களேன் பந்து..."

விவேக் சில மங்குஸ்தான் பழங்களைத் தரையில் உருட்டும் சத்தம் கேட்டது. சூழ்நிலையின் இறுக்கத்தை அந்த உருளல் சற்றுக் கலைக்கப் பார்த்து போல பட்டது அனுவிற்கு. ஆக சாப்பாட்டு அறை நோக்கி நடந்தவள் கனத்த திரைச்சீலையை சற்று ஒதுக்கிப் பார்த்தாள்.

ஜன்னலின் வழியே வெளியே பார்த்தபடி நிற்பதுதான் ராகவ்வா? திரும்பி நடந்தவனது பாதத்தில் உருண்டு வந்த பழம் பட்டு, சற்று அவனை நிலைத் தடுமாறச் செய்தது போலும்... தடுமாறினான்.

"ராஸ்...ஸ்க்கல்."

அந்த மெலிந்த சரீரத்திலிருந்து அப்படி ஒரு கர்ஜனையை அனு எதிர்பார்க்கவில்லை. உறைந்து நின்றாள்.

"பந்து ஆடணும்னா வெளியேப் போகணும்... இதென்ன வீட்டுக்குள்ளே விளையாட்டு? என்னையும் உருட்டித் தள்ளிடலாம்னு நினைச்சியா?"

சின்ன விவேக் கண்கள் பெரிதாய் உருள சுவரோரம் பம்மினான்.

"வாடா சனியனே... வந்து நாலு அறை வாங்கிட்டுப் போ... இன்னைக்கு உனக்குச் சாப்பாடு கிடையாது."

கணவனின் கூச்சலில் பதறி ஓடிவந்தாள் ரேவதி.

"முதல்ல உக்காருங்க... என்ன பண்ணினான் இவன்? விவேக் நீ ரூமிற்குப் போ. அப்புறமாச் சாப்பிடலாம்."



"நோ... அவனுக்கு இன்னைக்குச் சாப்பாடு போடக்கூடாது நீ... சாப்பிடற பொருளை தரையில் உருட்டி விளையாடறான்... அது மேலே காலை வச்சிருந்தால் நானும் உருண்டு போயிருக்க வேண்டியதுதான்."

"அப்படி ஏதும் ஆகலியேங்க."

"ஆகலையேன்னு வருத்தப்படறியா?"

அவன் குரலில் ஏக நக்கல். உதடுகள் ஒரு மாதிரி கோண, உடம்பில் நடுக்கம் கூடியிருந்தது.

"என்னங்க... இப்படியெல்லாம் பேசாதீங்க..." இறைஞ்சிய ரேவதியின் குரல் உடைந்தது. இதையெல்லாம் அனுவும் வேலையாட்களும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடும் என்ற நினைப்பில் கூசிக்குறுகினாள்.

அனு மேலும் பார்க்கத் துணியாமல் அங்கிருந்து அகன்றாள்.

ஒரே நிமிஷத்திற்குள் அவளுக்கு வியர்த்து விட்டிருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு கல்யாண மாப்பிள்ளையாய் கண்ட ராகவண்ணனா இது? இளைத்து, ஆரோக்கியம் குலைந்திருக்கிறார்.

அவருடன் பரிச்சயம் இல்லை என்றாலும் இத்தனைக் குரூரமான மனிதனாய் இருக்கக் கூடியவரல்ல...

ஆக எப்படி நேர்ந்தது இப்படியொரு மாற்றம்?

ரேவதியக்கா கவலைப்பட்டதில் நியாயம் இருக்கிறது.

ஆனால் அவர்கள் கவலைப்படுவதோடு நிறுத்திக் கொள்வதுதான் சரியில்லை.

இவரது நிலை மிக மோசம்தான்.

விவரம் தெரிந்த பிறகு அனு தன் குடும்பத்தில் தாம்பத்யத்தைப் பார்க்க நேர்ந்ததில்லை என்றாலும் அப்பா அம்மா விசாலத்தை.

'விசாம்மா' என்றே அழைத்ததாய் ஞாபகம்.

தன்னையும் அப்படி இப்படி காரணமின்றி கடிந்ததில்லையே...?

பார்க்கும் பிற குடும்பங்களிலும் தம்பதிகள் சதா பிரியம் ஒழுகப் பேசுவதில்லை என்றாலும் இப்படிக் கடித்துக் குதறுவார்களா என்பது சந்தேகமே... அதிலும் தவமிருந்து வந்த சிறு மகளிடம் எத்தனை எரிச்சல்?

"ஐயோ... ஒரு வாய் சாப்பிடுங்களேன்."

ரேவதியின் குரல் தேய்ந்து கேட்க, அவள் கணவனைத் தொடர்ந்து போயிருப்பது புரிந்தது. வீட்டிலிருந்து வெளியேறி அனு, பக்கவாட்டுப் பாதை வழியே பின்புறம் போய், துணிகளை அலசிப் பிழிந்து காயப் போட்டுக் கொண்டிருந்த ஆயாவிற்கு உதவலானாள்.

"எம்மா நீங்க ஈரத்துல... இதோ வேலை முடிஞ்சதே."

காவிப்பற்களை காட்டினாள் ஆயா.

ஆயா நடந்த களேபரத்தைக் கவனிக்கவில்லை போலும்.

"பரவால்ல... நீங்க ரொம்ப காலமாய் இங்க இருக்கீங்களா ஆயா."

"வாக்கப்பட்டு வந்த ஊரும்மா... எம்புருஷனுக்கு கூப்பில மரம் அறுக்கற வேலை... அப்படியே எனக்கும் வீட்டில் வேலை தந்தாக."



"கௌரி எவ்வளவு நாளாய் இங்கே இருக்கறா?"

"அவ சமைஞ்சதும் அவ அப்பன் படிப்ப நிறுத்திட்டு இங்க வேலைல அமர்த்திபுட்டான்..."

"ம்ஹூம்?"

"அந்தப் புள்ளைக்கு கோவந்தான். அதுக்கு காலேசெல்லாம் போய் படிக்க ஆசை. அதெல்லாம் எல்லாருக்கும் கிடைச்சிருமா? இங்கன வேலை பார்க்கவே கொடுத்து வச்சிருக்கனும்... ஆனா அதெல்லாம் இளவயசுக்குப் புரியாதுல்ல?"

"அனு?"

ரேவதியின் அழைப்பு கேட்டது. கூடவே அவள் முகம் ஜன்னலின் வழியே.

"இதோ வரேன்க்கா."

"நல்லவேளை... சாப்பிடாமல் கிளம்பிட்டியோன்னு பயந்தேன்."

"அதெப்படி உங்கக் கோழிக் குருமாவை ருசிக்காம கிளம்பறது? நீங்களும் உட்காருவீங்கல்ல?"

ஏதும் நடக்காதது போல மறுபடி வீட்டிற்குள் நுழைந்தாள் அனு.

மேஜை முன் ஒடுங்கிய குஞ்சாய் உட்கார்ந்திருந்த விவேக்கைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

இப்போது நடந்ததைப் பற்றி பேசக்கூடாது என்று முடிவெடுத்தாள். தனக்கும் ரேவதிக்குமாய் பரிமாறிவிட்டு உட்கார்ந்தாள்.

ஆனால் மூவருமே சாப்பிட்டதைவிட சோற்றை அளைந்ததுதான் அதிகம். குழம்பு ருசிக்கவில்லை.

சிறிது தயிர் ஊற்றி பிசைந்த நேரம் ரவீந்தர் நுழைந்தான்.

''எப்படியிருந்தது பிக்னிக்?''

''ம்... உக்காருப்பா. சாப்பிடு.''

சில நிமிடங்களிலேயே நிலைமை சரியில்லை என்பது புரிந்து போக அவனும் பேருக்கு சாப்பிட்டு முடித்தான்.

சம்பாஷணை மேலோட்டமாய் உருண்டது.

''அனு, நீங்க கிளம்பும்போது சொல்லுங்க.. நானும் உங்களோட வர்றேன்'' என்ற ரவீந்தரை ஆச்சரியமாய் ஏறிட்டாள்.

''அப்பாவைப் பார்க்கவா?''

''ஆமாம். கோட்டயத்தில் ரப்பர் வுட் ரொம்பச் சகாய விலைக்கு வந்திருக்குது. போய் பார்த்தேன். நல்ல சரக்கு... சந்தன நிறத்தில் வழுவழுன்னு இழைச்சப் போட்டிருக்கான். மொத்தமாய் நாம கேட்டால் விலை மேலும் குறையும். அப்பாவும் வாங்குவாங்களான்னு கேட்கணும்... இப்ப வீட்டில் இருப்பாங்களா?''

''இருக்காங்க... மறுபடி நானே உங்களை வந்து இறக்கி விடறேன்.'' என்றாள் உபசாரத்திற்காக.

''நோ... நோ... 15, 20 கிலோ மீட்டர் ஆச்சுதா... ஒரு லோட் இறக்கிட்டு, நம்ப டெம்ப்போ திரும்பும். அதிலே வந்திருவேன்.''

இதை ஒரு சாக்காக வைத்து தன்னுடன் ஏதும் தனியே பேச விரும்புகிறானோ ரவீந்தர்?

சற்று சங்கடமாய் நெளிந்தாள்.



காலையில் அப்பாவின் பேச்சால் விளைந்த எண்ணம் அது...

காரில் ஏறி மறு நிமிடமே அவள் எதிர்பார்த்தது போல பேச்சை ஆரம்பித்தான் அவன்... ஆனால் அவன் பேச்சு அவள் எதிர்பார்க்காதது!

## 8

''இன்னைக்கு அண்ணியின் முகம் சரியில்லையே...''

அனு சற்று நிம்மதியானாள்.

''ம்ம்... இது கொஞ்சம் தனிமையான இடம்.''

''பக்கத்திலே டாக்டரின் பேமிலி இருக்கறாங்களே.''

''நம்மைச் சுற்றி ஐந்து, ஆறுன்னு குடும்பங்கள் இருந்தால் அதிலே நமக்குத் தோதானவங்களாய் தேர்ந்தெடுத்துப் பழகலாம்... இருக்கறது ஒரே நேபர்ன்னா அது சிரமம்தான்... அவங்களைப் பிடிக்கும்னு நிச்சயமில்லையே.''

''நீங்க ரம்யாவைப் பார்த்ததில்லைன்னு நினைக்கறேன்.''

''பார்த்திருக்கேன்.''

சட்டென அனுவின் புறமாய் திரும்பினான்.

''எப்போ... நீ... அவ... ஏதும்?''

அவனது தடுமாற்றத்தை வியப்புடன் கவனித்தவள் சொன்னாள்.

''நேரே பார்த்ததில்லை... போட்டோவில்தான்?''

''ஓ... ஓ...?'' ஒரு தினுசாய் சிரித்தான்.

ஒரு கணம் தன் கவர்ச்சியை இழந்திருந்த அவன் முகம் மறுபடி அதை மீட்டது.

"ஒரு டாக்டர் நம் அண்டை வீட்டில் இருப்பது பெரிய அதிர்ஷ்டமில்லையா?"

"நாம பேஷண்ட்டாய் மாறாமல் இருப்பது அதைவிட பெரிய அதிர்ஷ்டம்" வாய்விட்டுச் சிரித்தான்.

"அண்ணிக்கு உங்க மேல் ஏன் இத்தனைப் பிரியம்ங்கறது இப்பப் புரியுதுங்க அது. அடிக்கடி வீட்டுக்கு வரணும்."

"இதைவிட அடிக்கடி வந்தால் ரேவதிக்காவே துரத்திடு வாங்க."

"இல்லை... மனசு நொந்து போயிருக்கும் சமயத்துல இப்படி ஒரு உற்சாகமான துணை தேவைதான்."

"எனக்கொரு யோசனை... நீங்க எல்லாம் தென்காசியில் குடியேறிட்டா என்ன? இங்கேயிருந்து 20 நிமிஷ ட்ரைவ்... அவ்வளவுதான்..."

"இங்கே இத்தனை வசதியான வீட்டைக் கட்டின பிறகு இதை விட்டுட்டு..." இழுத்தான்.

"நம்ப வசதிக்குத்தானே வீடு மிஸ்டர். ரவீந்தர்?"

"வெறுமே ரவீ போதும் அனு... நமக்கிடையே இப்பத்தான் பரிச்சயம்னாலும் நம் குடும்பங்களுக்கிடையே வெகுநாள் பழக்கமாச்சே."

"ம்.. தென்காசியில் பல வீடுகளிருக்கும் காலனியில் இருந்தால் எல்லாருக்கும் கலகலப்பாய் இருக்கும்... ராகவ் அண்ணனுக்குமே அது நல்ல மாற்றமாய் இருக்கும்னு நினைக்கறேன்."

"நினைச்ச நிமிஷம் வீடு கட்ட முடியாதே? அலாவுதீனின் அற்புத பூதம் என்னோட இல்லை அனு..." என்றான் வேடிக்கையாக.



"காசு பூதம் இருந்தால் போதுமே... வாடகைக்கு நல்ல வீடாய் பிடிச்சுடலாம்."

அவன் முகம் சற்று சுண்டியது.

"அதெப்படி அனு? நம்ப ஸ்டேட்டஸ்ல இருக்கவங்க வாடகை வீட்ல குடியேறுறதாவது? அதுவும் சொந்தத்தில் ரெண்டு வீடு இருக்கறப்ப.. ஊர் விதவிதமாய் வம்படிக்கும்."

"ஊர் வம்பை விட நம்ப வசதி முக்கியம்னு நினைக்கறேன்... இப்ப ராகவ் அண்ணனின் நிலைமை பற்றி ஊரில் ஏதும் பேச்சே எழுந்திருக்காதா... ஸம் திங் இஸ் ராங் வித் ஹிம்... இப்படி கத்துவார்னு நான் நினைக்கலை."

சற்று மௌனமாயிருந்து பின் கேட்டான்.

"அதான் மதியம் வீடு அப்படி இருக்கமாய் இருந்துச்சா?"

"மெலிஞ்சிருக்கார்... கை நடுங்குது... அநாவசிய கோபம்."

"டிரக்ஸ்" என்றான் மெள்ள.

"போதை மருந்து..? எவ்வளவு நாளாய் இந்தப் பழக்கம்?"

எதிர்பார்த்த செய்தி என்றாலும் கேட்கும்போது அதிர்ச்சி தந்ததுதான்.

"சில மாசங்களாய்... போதை தெளிஞ்சதும் நிலைமை படு பயங்கரமாயிடும்ங்கறதை ஏனோ யாரும் புரிஞ்சுக் கறதில்லை..."

"இது ரேவதியக்காவுக்குத் தெரியுமா?"

"தெரியும்... திருந்திடுவார்... மாறிடுவார்னு நினைக்கறாங்க."

"மருத்துவ உதவியில்லாமல் அது சாத்தியமில்லையே..."

''டாக்டர்ட்ட போனால் விஷயமும் வெளியே போயிடுமேன்ர கவலை...''

''நோய் நம்மை விட்டுப் போனால் பொருட்கள் எப்படிக் கிடைக்குது.. யார் மூலம் சப்ளை வருது?''

''எல்லாம்... மர்மமாய்தான் இருக்குது...''

''எல்லாரும் நம்பகமானவங்கதான்.''

''ஓஹோ?''

தலையாட்டிய அனுவின் உள்ளே ஏனோ கௌரியின் நினைப்பு நெருடியது. தன்னுள் ஏதோ ரகசியத்தைப் புதைத்து வைத்திருக்கும் அந்தப் பாவனை பிடிக்கவில்லை.

''ஆனால் வேலைக்கு இருக்கும் அப்பாவிங்க... முதலாளி கேட்டதைத் தட்டாமல் செய்யக் கூடுமில்லையா?''

''ம்ம்... அண்ணன் வெளியே வர்றதேயில்லை... வேலையிலும் நாட்டமில்லை...''

''ஆக டிரக்ஸ் அவரைத் தேடி வருது. அதைத் தடை பண்ணனும். தவிர அவர் சிகிச்சைக்கும் ஏற்பாடு பண்ணனுங்க ரவி.''

பிரதான சாலையிலிருந்து வீடு இருக்கும் பக்கமாய் கார் திரும்பியது.

''எனக்கும் இதை உங்ககிட்ட மனசு திறந்து பேசினது ஆறுதலாய் இருந்தது...''

''ஷ்யர்... அப்பதான் ஏதேனும் தீர்வும் வரும்.''

''ஆனா... இப்போதைக்கு உங்க அப்பாட்ட இது பற்றி ஏதும் சொல்ல வேணாம்'' என்றான் தயக்கமாய்.

''ஆகட்டும்'' என்றபடி காரை பூட்டியவன் அவனோடு வீட்டினுள் நுழைந்தான்.



போனில் பேசிக் கொண்டிருந்த பூபதி இவர்களை ஜோடியாய் பார்த்ததில் பரபரத்துப் போனார்.

'பேசி' தொடர்பை துண்டித்தவர் எழுந்து உற்சாகமாய் வரவேற்றார்.

''வாங்க தம்பி வாங்க... எப்படி இருக்கீங்க?''

உற்சாகத்தில் தந்தையின் முகம் பிரத்தியேகமாய் பளபளப்பதை குறும்புடன் பார்த்து ரசித்தாள் அனு.

''நல்லாயிருக்கேன் அங்கிள்... நீங்க?''

''சௌக்கியந்தான் தம்பி... உட்காருங்க... இந்த சோபா வசதியாய் இருக்கும். அனு குடிக்க, கொறிக்க ஏதேனும் எடுத்துட்டு வாம்மா.''

''இருக்கட்டுங்க... இப்பதான் வீட்ல லஞ்ச் சாப்பிட்டோம்.''

''அப்ப டீ குடிக்கலாமே? அனு டீ போடச்... நீயே போடேம்மா... அனு பிரமாதமாய் டீ போடுவாத் தம்பி...''

பரபரப்பில் பூபதி சற்றுப் புளுகினார்!

''கொஞ்ச நேரம் போகட்டும் அங்கிள்... பிஸினஸ் விஷயமாய் உங்களோட பேச வேண்டியிருந்தது.''

''சொல்லுங்க.''

அனு அவர்களை பேச விட்டுவிட்டு விலகினாள்.

குனிந்து கம்பளி நூலால் பின்னிக் கொண்டிருந்த ரேவதியின் மூக்கு நுனி சிவந்திருந்தது.

அனுவிற்கும் சங்கடமாயிருந்தது. இது சிரமமான விஷயம்... தன்னை விட பத்து வயதேனும் இளைய, அந்நிய

பெண்ணிடம் தன் கணவனின் பலவீனத்தை விவரிப்பது சுலபமேயில்லை.

"பக்கத்திலே டி-அடிக்ஷன் சென்ட்டரை வச்சிட்டு நாம இன்னும் காலம் கடத்தறது தப்புக்கா..."

இறுதியாய் சொன்னாள் அனு.

இதுவரை கைவேலையில் மும்முரமாயிருந்த பாவனையில் குனிந்திருந்த ரேவதி சரேலென நிமிர்ந்தாள்.

"நோ அனு... இவருக்கு சிகிச்சை நிச்சயமா இந்த டாக்டர் சௌந்தர்ராஜன் கிளினிக்ல இல்லை... எனக்கு ஏனோ அவரைப் பிடிக்கலை..."

"அவங்களோட பழகியிருக்கீங்க... அதனால்..."

"பழகித்தான் புரிஞ்சுகிட்டேன். நாற்பது வயசானவர் இத்தனை இளமையாய் அழகாய் ஒருத்தியைக் கல்யாணம் செய்ததுமே அவரைச் சந்தேகப்பட்டு ஒதுக்கியிருக்கணும்."

"டாக்டர் பிரம்மச்சாரி. அவ, அதாவது ரம்யா சம்மதிச்சுதான் அல்லது விரும்பி அவரை கல்யாணம் பண்ணிக் கொண்டா... இதிலென்ன தப்பு?"

"அப்படி இயல்பாய் தெரியலை அவங்க உறவு... ரம்யா அவரை கண்டு நடுங்கறா..."

குரல் தணித்து சொன்னாள் ரேவதி.

"நிறைய படிச்சவர், மூத்தவர்ன்ர மரியாதையாய் கூட இருக்கலாம்."

"என்ன நீ? அது தம்பதிகளிடையே பிரியமாய் வெளிப் படணுமேத் தவிர பயமாய் இல்லை..."

"ம்ம்..."



"டாக்டர் பக்கத்துல வந்தாலே ரம்யா எழுந்து நின்னிடுவா. பேசும்போது 'ஏதும் தப்பாய் சொல்லிடலியே நான்'ங்கற மாதிரி அவரையே மிரண்டு பார்ப்பா... சாப்பிடும்போதுகூட அவளது பார்வை அவர் தட்டிலேதான்... பார்த்து பார்த்துப் பரிமாறுவா... அப்ப விரல்லாம் நடுங்கறாப்பல படும்..."

"ஓஹோ?"

அனுவிற்கு அசோக் ரம்யாவை சந்தித்த சம்பவமும் நினைப்பும் வந்தது.

அச்சத்துடன், 'இங்கேயிருந்தால் ஆபத்து' என்றுதானே சொல்லி துரத்தினாளாம்?

"ஆனாக்கா... அது அவங்க சொந்த வாழ்க்கை. அவர் போலி டாக்டர் இல்லை. ஆக ஒரு முதலுதவி போல... இல்லை அண்ணனின் நிலைக்கு என்ன சிகிச்சை, அதை எங்கே செய்துக்கறது சிறப்புன்னு ஆலோசனையாவது அவரிடம் கேட்கலாமில்லையா?"

ரேவதியின் உதடுகள் வெகு ஏளனமாய் மடிந்தன.

அம்முகத்தின் கசப்பு அனுவைக் கலக்கியது.

"என்னக்கா?"

"இவர் நிலைமைக்குக் காரணமே அந்த டாக்டரோன்னு எனக்குச் சந்தேகம்?"

அனுவின் அதிர்ச்சியை ஒரு கணம் பார்த்துவிட்டுத் தொடர்ந்தாள். "ரம்யா இப்படி நடுங்கறதால, அவங்க இங்கே வரும்போது நான் அவளைக் கூட்டிட்டு உள் அறைக்குப் போயிடுவேன்... எங்க உறவுக்காரங்க வரும்போதுகூட அவங்களையும் விருந்துக்கு அழைப்போம். அப்பவும் பெண்கள் பரிமாற, சாப்பிட்ட மேஜையை ஒழிக்க, பேசன்னு

ஒதுங்கிட டாக்டர் இவரோட தனியேப் பேச நிறைய சந்தர்ப்பங்கள்.''

''ஆனால் போதையின் பிடியிலிருந்து தன் நோயாளிகளை விடுவிக்கும் ஒரு டாக்டர் எதற்கு அண்ணனை போதைக்கு அடிமையாக்கணும்?'' ஒரு வக்கீலைப் போல கேட்டாள் அனு.

''எனக்கு சாட்சியங்கள் இல்லை அனு... அனுமானம்தான். நாங்க இங்க குடியேறும் வரை ராகவ் அப்பழுக்கில்லாதவர்... அன்பானவர். டாக்டரின் பழக்கம் ஏற்பட்ட பிறகுதான் இப்படியெல்லாம் மாற்றங்கள்...''

''இப்ப டாக்டர் இங்க வர்றதில்லையா? அண்ணனை வந்து பார்க்கறதில்லையா?''

''நான் கொஞ்சம் கடுகடுப்பாவே பேசி அவரை எட்ட நிறுத்திட்டேன். போன் பண்ணி இவரைக் கேட்டாலும் 'வேலையாய் இருக்கார்னு' வெட்டிட்டேன்.''

குழப்பமாய் தலையாட்டினாள் அனு.

''எதை, யாரை நம்பணும்னே தெரியலைக்கா... கடவுள்தான் இதற்கெல்லாம் நல்ல முடிவாய் காட்டணும்.''

மாடிப்படிகளில் யாரோ வேகமாய் ஓடிவரும் ஓசை கேட்டது.

''யம்மா... ஐயா ரூம்புல பேச்சு மூச்சில்லாம கிடக்குறாங்க.''

கௌரி சொல்ல, இரு பெண்களும் ஓடினார்கள். படுக்கையில் கோணலாய் கிடந்த ராகவ்வை நேரே படுக்க வைத்துக் கொண்டிருந்த ரவீந்தரிடமும் பதட்டம்.

அனு ராகவ்வின் மணிக்கட்டைப் பிடித்துப் பார்த்துவிட்டு,

''பல்ஸ் கொஞ்சம் லோவாய் இருக்குக்கா... டாக்டரை...''

''உடனே போய் டாக்டரை வரச் சொல்றேன்... இல்லை போன்...''



''யாருக்கு, சௌந்தர்ராஜன் வேண்டாம்'' என்றாள் ரேவதி அழுந்த.

''ஆபத்துக்கு... பழகினவர்...''

''வேண்டாம்னேன்'' ரேவதி ஏறக்குறைய அலறினாள். ''இங்கே வந்து ஓடற மூச்சையும் நிறுத்தறதுக்கா... நோ.''

''இதென்ன இப்படிப் பேசறீங்க?'' அனு குறுக்கிட்டாள்.

''ஷ்... ரவீ அக்காவை டென்ஷனாக்காதீங்க. நான் வேற ஏற்பாடு செய்றேன்.''

''இப்ப யாரைப் போய் வரச்சொல்றது?''

''எங்க பேமிலி டாக்டர் நம்பூதிரி இருக்கார். போன்ல அவரைத் தயாராய் இருக்கச் சொல்லிட்டு நானே போய் அழைச்சுட்டு வந்துடறேன்.''

மின்னலாய் செயல்பட்டாள் அனு.

''கௌரி கொஞ்சம் ஹார்லிக்ஸ் கரைச்சு எடுத்து வா'' தன் கணவனைக் கவனிக்கலானாள் ரேவதி.

டாக்டர் நம்பூதிரியின் முதிய கைகள் ராகவ்வை நிதானமாய் பரிசோதித்தன.

ரேவதியை வேண்டிய கேள்விகள் கேட்டவரின் அனுபவ விழிகள் சற்று மூடித் திறந்தன.

அனு தன் அப்பாவையும் வரவழைத்திருந்தாள்.

''ஏதும் மருந்து வரவழைக்கணுமா டாக்டர்...? என்ன செய்யணும் சொல்லுங்க?''

''உடம்பைச் சேதப்படுத்தியிருக்கார், பூபதி. இங்கே இனி வச்சிருக்கறது தப்பு. ஹி நீட்ஸ் டு பி ஹாஸ்பிட்டலைஸ்ட்...''

''ஐயோ. வேணாங்க.''

அப்ப உன் புருஷன் மறுபடி டிரக்ஸ் எடுத்துப்பார்... உன்னால் தடுக்க முடியாதேம்மா... ஹாஸ்பிடல்ல கவனமாய் பார்த்துப்பாங்க.''

''நான் இவரோடயே இருந்து... அவர் அடிச்சாலும் பரவால்ல...''

''போதைப் பழக்கத்திலிருந்து மீளறது கஷ்டம்மா... வித்ட்ராயல் ஸிம்ப்டம்ஸ் பயங்கரமான வேதனை. கெட்ட பழக்கங்களுக்கு சீக்கிரமாய், சுகமாய் அடிமைப்பட்டுடலாம். ஆனால் அந்தக் கட்டிலிருந்து விடுபடறது சிரமம், வேதனை. அமெரிக்காவில், 'போதை மருந்தின் பாதிப்பால் உங்கள் மூளை...'ன்ற வாக்கியத்தின் கீழே, கொதிக்கிற எண்ணெயில் உடைத்த முட்டைகளைப் பொரியும் படம் போட்டிருப்பாங்க... மனுஷனது பிரதான உறுப்பைப் பாதிக்கும் இதிலிருந்து மருத்துவ உதவியில்லாம மீள முடியாது...''

டாக்டர் ரேவதியை சம்மதிக்கச் செய்வதற்குள் பூபதி மற்ற ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்திருந்தார்.

அத்தியாவசிய பொருட்களை கண்ணீரோடு ரேவதி பெட்டியில் அடுக்க, அனுவும் உதவினாள்.

''இனி கவலைப்பட வேண்டாம்க்கா... விவேக் வேணும்னா எங்கூட இருக்கட்டுமே? நான் அவனை ஸ்கூலுக்கும் அனுப்பிக்கலாம்.''

''வேணாம் அனு... அவன்தான் இப்ப எனக்கான ஆறுதல். விர அவன் எம்பார்வையிலேயே இருந்தால் தான் ம்மதியும்... இவனையும் நான் இழந்திடக்கூடும்.''



வந்த ஆம்புலன்ஸில் ராகவ்வை ஏற்றி அனுப்பியாகி விட்டது. பூபதி ரேவதியை தன்னுடன் கூட்டிப் போய்விட, வீட்டின் முக்கிய அறைகளைப் பூட்டிய அனு சோர்ந்து தோட்டத்தின் மர பெஞ்சில் சரிந்தாள்.

அருகே ஏதோ அசைவு தெரிய திடுக்கிட்டவள், நின்றது ரவீந்தர்தான் என்று தெரிந்ததும் புன்னகைக்க முயன்றாள்.

ஆனால் அவன் முகம் இறுகிக் கிடந்தது.

''எதிர்பார்க்காததெல்லாம் நடந்திடுச்சு...'' என்றாள் மெள்ள.

''நீ இதையெல்லாம் எதிர்பார்த்திருந்தாய் போலயே?''

அவளுக்குள் அசதியை மீறிய ஆத்திரம் துளிர்த்தது.

அவன் பேச்சின் தொனி சரியில்லை.

''என்ன சொல்றீங்க?''

''ரொம்ப சுறுசுறுப்பான ஏற்பாடுகள். உடனே வேற டாக்டரையும் கூட்டிட்டு வந்துட்டே?''

''ரேவதிக்கா டாக்டர். சௌந்தர்ராஜன் வேண்டாம்னு அத்தனை பிடிவாதமாய் சொல்லும்போது...''

''அநாவசிய பிடிவாதத்திற்கு நாம இடங்கொடுக்க வேண்டியதில்லை.''

அனுவிற்கு தொடர்ந்து விவாதிக்க மனமோ... சக்தியோ இல்லை. தொய்ந்தவளாய் எழுந்து தன் காரை நோக்கி நடந்தாள்.

## 9

**சோ**பாவில் சாய்ந்து நீள பெருமூச்செறிந்தாள் அனு.

விரல்களால் பிடரியை நீவி விட்டாள்.

"எல்லாருமே மோசமானவங்களாய் தெரியறாங்க, அக்க."

"இதையே நாலாவது தடவையாய் சொல்றே. கோக் குடி."

"அது உனக்காய் வச்சது. மனுஷ சுபாவம் பிடிபடலை..."

"பேக்கன் சொன்னது நினைப்பு வருது."

"விருப்பம் நிறைவேறாத போதுதான் ஒருவனது குணம் வெளிப்படும். விருப்பத்திற்கு மாறான விஷயங்கள் நடந்ததும் மனுஷனுடைய மூர்க்க சுபாவம் வெளிப்படுது..."

"ம்ம்... ரேவதிக்கா கத்தினதும் எனக்கு வெலவெலத் திடுச்சு... ஆனா அவங்க அந்த டாக்டரை வேண்டாம்னதிற் கான காரணம் புரிஞ்சது. டாக்டர் மேலிருந்த சந்தேகம் அது... ஆனால் ரவீந்தர் ஏன் அப்படி காட்டமாய் பேசினாருன்ற காரணம் புரியலை..."

"வீட்டில் ஆம்பிளைத் தானிக்க, புதுசாய் நுழைஞ்ச ஒருத்தி முடிவுகளை எடுத்து அதை அமல்படுத்தறாங்கற எரிச்சல் - சிம்ப்பிள்."

"மே பி... ஆனா அவர் முகத்தில் அதை மீறிய ஒரு உணர்வு - ஏமாற்றம் தெரிஞ்சதோ? இதையெல்லாம் யோசிக்க எனக்கு பயம்மா இருக்குது அசோக்..."

"இனி செய்ய வேண்டியதை மட்டும் யோசி."

"சாயங்காலம் நெல்லை போறேன். ராகவ் அண்ணனைப் பார்க்கணும். நீயும் வர்றியா?"

"அனு... அதே ஹாஸ்பிட்டலா?"

ஆர்வமாய் நிமிர்ந்தவன் கேட்டான்.

"எதே?"



"நீ நம்ப அரவிந்த்சாமியை அட்மிட் பண்ணின அந்த ஹாஸ்பிட்டல்லதானே?"

"யெஸ்... அதுதான் பெஸ்ட்னு கேள்வி."

"நான் அதுக்குப் பிறகு ரம்யாவைப் பார்க்கவேயில்ல அனு."

தேவதாஸ் போல கோக் கிளாஸை ஒரே மூச்சில் வாயில் கவிழ்த்த அசோக் ஏறக்குறைய புலம்பினான்.

"இப்ப எதுக்கு அவளைப் பத்தின பேச்சு?"

"ஷி வாஸ் லவ்லி அனு... அவ ஏன் தன் புருஷனுக்குப் பயப்படணும்? அத்தனை அழகான முகத்தில சந்தோஷத்தைத் தவிர வேற உணர்வுகள் இருக்கக் கூடாது... ஆனா அவ முகத்தில நிறைய பயம்... பதட்டம்... பாவம் தான் அழகாய் இருக்கறதே ஆபத்துதான் போல..."

"எத்தனை அழகிங்க அம்சமாய் குடும்பம் நடத்தறாங்க? இந்த ரம்யா ஏன் நாப்பது வயசுக்காரரைக் கல்யாணம் செய்துக்கணும்? பேராசை... அவர் சீக்கிரம் மண்டையைப் போட்டுட்டாருன்னா... தனக்கு அத்தனைக் காசும் வந்திடும்கிற கெட்ட ஆசை."

"ச்சேச்சே... அவ அந்த மாதிரியாய் தெரியலை."

"அவ நிச்சயம் காதலுக்காய் அவரைக் கல்யாணம் செய்துக்கல... அப்படியிருந்தால் இப்படி புருஷனைக் கண்டு நடுங்க வேண்டாமே?"

"காசுக்காய் கல்யாணம் பண்ணவளாயும் தெரியலை..."

ஆதங்கத்துடன் சொன்னான் அசோக்.

அனு தோள்களை உயர்த்தினாள். "நமக்கது வேண்டாத ஆராய்ச்சி அக்க."

"இப்ப ஹாஸ்பிடலுக்குப் போறப்ப..."

"என்ன?"

"அங்க ஏதாவது தகவல் கிடைச்சால்... அதாவது அரவிந்த்சாமியைப் பற்றி விசாரிச்ச... அவர் மூலம் ரம்யாவைப் பற்றி மேலும் விவரங்கள்..."

"எப்படி விசாரிப்ப? பத்து நாள் முன்னே சினிமா ஹீரோ மாதிரியான ஒரு ஆளை மயக்கமாய் கொண்டு வந்து போட்டோமே... அவர் பாக்கெட்டில் ஒரு படம் இருந்துச்சா? அந்தப் படத்து அழகியை..."

படபடத்த அனுவை நோக்கி சரணாகதி பாவனையில் கைகளை உயர்த்தினான் அசோக்.

"குட்... ஆனா நீயும் வர்றே!"

"வர்றேன்."

உத்தரவிற்கு அடங்கினாள்.

வெள்ளை முயல்குட்டி போல நர்ஸ்கள் எங்கும் சுறுசுறுவென நடமாடியதே அந்த மருத்துவமனையின் சூழலை ரம்யமாக்கி விட்டிருந்தது.

ரேவதிக்கு பிரத்தியேக அறை அமைந்து விட்டதால் அவர் கணவர் அருகே தன் மகனுடன் தங்கிக் கொள்ள முடிந்தது.

ஆரம்ப சிகிச்சைக்குப் பிறகு ராகவ் போக வேண்டிய மருத்துவமும் முடிவாயிற்று.

"எத்தனை நாளாய் டிரக்ஸ் பழக்கம்?"

"எந்தெந்த போதை வஸ்துகள் - என்ன டோஸெஜ்?"



என்ற கேள்விகளை மருத்துவர் தன் மனைவி முன்னிலையிலேயே கேட்க ராகவ் குன்றினான். இந்த நரகத்திலிருந்து தப்பினால் போதும் என்ற மனநிலைக்கு அவனுமே வந்திருந்ததால் சிகிச்சை சுலபமாயிற்று.

ரேவதியும் சுணங்காமல் அவனருகே பரிவுடன் நின்றாள்.

"இனியாவது அந்தச் சனியன் பிடியிலிருந்து விடுபட்டால் சரிங்க" என்று அவன் தலையைக் கோதித் தேற்றினாள்.

போதைக்காக அவனது உடல் ஏங்கி முறுக்கித் தவித்த நேரங்களில் அவளும் துடித்தாள்.

"நாளைக்கு இந்த தாபம் இன்னும் மட்டுப்படுமாங்க... இனியும் சிகிச்சைக்கு எடுத்துக்கிட்டா அந்த எண்ணமே அண்டாது."

என்றெல்லாம் முத்தமிட்டுத் தேற்றினாள்.

விவேக்கை அனுவோ அசோக்கோ மாறி மாறி வெளியே கூட்டிப் போனார்கள். அன்று அப்படி ஒரு சுற்று சுற்றிவிட்டு மருத்துவமனைக்குத் திரும்பிய அனுவிற்குள் திடீரென்று ஒரு யோசனை.

எமர்ஜென்ஸி வார்ட் பக்கமாய் போனவள் அங்கு சற்று இளையவளாய் தெரிந்த ஒரு நர்ஸுடன் பேச்சு வளர்த்தாள்.

"விபத்திலே சிக்கினவங்க இங்கே வரும்போது இந்த இடமே களேபரமாய் தெரியும்..."

"ம்ம்... அப்படியும் வந்திருக்கீங்களா?"

"பத்து நாளைக்கு முன்னே பஸ் ஸ்டாண்டிலே மயங்கி விழுந்திருந்த ஒருத்தரை இங்கே கொண்டு வந்தேன். உங்க ட்யூட்டி நேரம் எப்படி?"

இவர்கள் பேசுவதைக் கண்களை உருட்டிப் பார்த்த விவேக்கின் கன்னத்தை தட்டினாள் நர்ஸ்.

"ட்யூட்டி டைம் மாறி மாறி வரும்."

"ஜஸ்ட் எ குட்வில். நாம கொண்டு வந்து விட்டவர் நல்லாகிப் போனாரான்ற ஆர்வம்... தவிர ஆள் சினி ஸ்டார் போலிருந்தார்."

குறும்பாய் சிரித்தாள் அனு.

"ஓ?" நர்ஸ் முகத்திலும் சற்று பிரகாசம் கூடியது.

"அச்சு அசலாய் அரவிந்த்சாமி... அந்த நெற்றி மரு உள்பட..."

"ரைட் நினைப்பிருக்குது... ஹி ஸ் ஆல்ரைட்... ஒரு நாள் அப்ஸர்வேஷன்ல வச்சிருந்து. பேஸிக் டெஸ்ட்ஸ் எல்லாம் நார்மல்னதும் அவரை அனுப்பிட்டோம்..."

"அவர் உள்ளூர்தானா?"

நெற்றி சுருக்கி ஒரு கணம் யோசித்த நர்ஸ் தலையாட்டினாள்.

"ம்ம்... மகாராஜநகர் பக்கத்திலேதான்."

"அந்த ஏரியா தெரியும். முன்னே சில வீடுகள்தான்... இப்ப விஸ்தீரணமாயிடுச்சு."

"அதிலும் சில வீடுகளில் மாளிகையாட்டம் எழுப்பி யிருக்காங்க. ஜி.கே.ஜுவல்லர்ஸ் சமீபத்தில் கட்டின வீட்டைப் பார்க்கணும். கருநீலம், வெள்ளை, சிகப்புன்னு கலரும் கலவிலும் மிரட்டலான வீடு."

"ஓஹோ... சம்பாதிக்கிறதை பிறகு எப்படி செல வழிக்கிறது?"



"உண்மைதான்... அந்த வீட்டுக்கு எதிர் வீடுதான் ஹீரோவுடையது..."

"யார்... நான் கூட்டி வந்த...?"

"அவரேதான். மறுநாள் அவருக்கு எப்ப தன்னை வீட்டுக்கு அனுப்புவாங்கன்னு ஆயிடுச்சு. அப்ப எங்களோட பேசிட்டிருந்தார்."

"அவர் வீட்டிலேருந்து யாரேனும் வந்திருந்தாங்களா?"

"ம்ம்... ஒரு வயசான அம்மாதான்."

"தாங்க்ஸ்... வரேன்."

தான் கேட்டறிந்த விவரங்களை அசோக்கிடம் சொன்ன அனுவின் கண்கள் பளபளத்தன.

"இப்படி சுலபமாய் நம்ப ஹீரோவை ட்ரேஸ் பண்ண முடியும்னு நினைக்கலே அச்சு."

"அவர் மூலம் ரம்யாவைப் பற்றி தெரிஞ்சுக்கலாம்" அவனும் ஆவலானான்.

"ம்ப்ச்... உனக்கு அதே நினைப்புதான்."

"பின்னே, வேறெதுக்கு அந்த ஹீரோவை தேடி பிடிச்சே?"

"அ... அது... க்ளு ஏதேனும் கிடைக்கும்னுதான்."

"ஹீரோவுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? ரம்யாவுடைய படம் அவரிடம் இருந்தது ஒன்னுதானே சம்பந்தம்."

"சரி சரி கூல் இட்... நாளைக்கு ராகவ் அண்ணனை டீ அடிக்ஷன் சென்டருக்கு மாத்தறாங்க... நமக்கும் வேலை இருக்கும்... ஆனா இப்ப நாம ஃப்ரீ."

''சரி கிளம்பு.''

வெகு சுலபமாய் வீட்டைத் தேடி எடுத்து விட்டார்கள்.

அரண்மனை போலிருந்த வீட்டின் முன் அதற்கேற்ற அலங்காரத்துடனிருந்த காவலாளியிடம் காரிலிருந்து இறங்கிய அசோக் விசாரித்தான்.

''ஏம்ப்பா.... நடிகர் அரவிந்த்சாமி சாயல்ல ஒருத்தர்.''

''இந்த எதிர் வீடுதான் சாப்'' பதில் உடனடியாய் வந்தது.

அனு காரை மர நிழலில் நிறுத்தினாள். ஆனால் இறங்கவும் தயக்கமாயிருந்தது.

எதிரே இருந்த இராட்சத அலட்டலை சற்றும் பொருட்படுத்தாத தினுசில் அமரிக்கையான அழகுடன் நின்றது அவ்வீடு.

சின்ன வளைவான தாழ்வாரத்தைத் தாண்டி உள் கூடம் தெரிந்தது. அதில் ஊஞ்சல் ஆடுவது உள்பட...

''உள்ளே ஆள் இருக்காங்க போலியே?'' கிசுகிசுத்தாள் அனு.

''அவங்களைப் பார்க்கத்தானே வந்திருக்கோம்...''

''ஆனா பேச்சை எப்படித் தொடங்குவே?''

''அதெல்லாம் உள்ளே போய் ரெண்டு நிமிஷம் அசடு வழிஞ்ச பிறகு எப்படியாவது ஆரம்பிச்சுடலாம்.''

''அப்ப நீ மட்டும் போறியா அக்க...''

''வீர சாகசம் பண்ணிட்டாப்ல அட்ரஸை கண்டு பிடிச்சுட்டேன்னு அலட்டினே இப்ப என்ன?''



''இல்ல வீட்ல பெரியவங்க இருக்க, நாம விசாரிக்கற மாதிரி போய் நின்னா... என்ன நினைப்பாங்க... அதான்.''

''சரி. நான் தனியா போறேன். ஆனா உள்ளே என்ன பேசினோங்கறதை உங்கிட்ட மூச்சு கூட விடமாட்டேன்.''

கறாராய் மிரட்டினான்.

இப்போது ஆவல் அவளை உந்தித் தள்ளியது.

''ரொம்ப நோண்டாதே அச்சு... லேசாப் ஆரம்பி. அவங்க பேசப் பிரியப்படலைன்னால் திரும்பிடுவோம்.''

''ம்ம்...''

படியேறிய அசோக் குரல் கொடுத்தான்.

''அம்மா...''

''யாரது?'' ஊஞ்சலை விட்டு இறங்கி வந்த பெண்மணி கண்களை இடுக்கியபடி கேட்டாள்.

''அவர் இல்லையா?''

''யாரு மகேஷா?''

''ஆ... ஆமா... ஆமா...''

''நீ யாருப்பா?''

''அவரோட ஒன்னா...'' அசோக் இழுக்க,

''படிச்சவனா...?'' என்று அந்த அம்மாள் சிறு சிரிப்புடன் முடித்தாள். அசோக் ஒரு தினுசாய் புன்னகைக்க அனு அசட்டு முழியுடன் நின்றாள்.

''உள்ள வாங்க... இருங்க... வரச்சொல்றேன்.''

''நீங்க மகேஷுடைய...?''

''அத்தை.''

உள்ளே போய் ஐந்தாம் நிமிடம் இரு உயரமான ஸ்டீல் டம்ளர்களில் கருவேப்பிலை மிதந்த மோருடன் திரும்பினாள்.

''சாப்பிடுங்க... தம்பி எந்த ஊர்ல என்ஜினீயர்?''

''இல்ல ஒன்னா ட்ரெயினில் வந்தோம்... அப்ப...''

இப்போது அத்தம்மாவின் முகம் சற்று மாறியது.

''இந்தப் பொண்ணு யாரு?''

''இவளும் நானும் நிஜமாவே ஒன்னாப் படிச்சவங்க.''

வழக்கமாய் 'லொட லொட'க்கும் அனு ஊமையாய் உட்கார்ந்திருந்தாள்.

''வாங்க'' என்றபடி அறைக்குள் வந்தவனைக் கண்டதும் இருவரும் இயல்பாய் எழுந்தனர்.

''ப்ளீஸ் உட்காருங்க. என்னைப் பார்க்கத்தானே வந்தீங்க?''

முறுவலுடன் விசாரித்தான் மகேஷ்.

வெள்ளை வேட்டி, பொடிகட்டமிட்ட கறுப்புச் சட்டையிலும் அவன் கவர்ச்சி சற்று சளைக்காததை வியப்புடன் பார்த்தாள் அனு.

''சமீபமாய் உங்களை ரெயில் பயணத்தப்பப் பார்த்தது... எம் பேர் அசோக்'' புருவங்களை சுருக்கியவன் ஆமோதித்தான்.

''ரைட்... பார்த்த முகமேன்னு யோசிச்சேன். ஐ ரிமெம்பர்.''

''இவங்க அனு... என் ஃபிரெண்ட். அவளும் அதே நாள் உங்களைப் பஸ் ஸ்டாண்டில பார்த்திருக்காங்க... ஆனா நீங்க இவளைப் பார்த்திருக்க முடியாது.''



''என்ன மகேஷ்... என்ன சொல்றாங்க?'' குழம்பினாள் அந்த மாமி.

ஒரு நிமிடம் அனுவைப் பார்த்தவன் புன்னகைத்தான்.

''அப்ப நீங்கதான் மயங்கிக் கிடந்தப்ப காரில் லிஃப்ட் தந்த யங் லேடி?''

''ம்ம்...'' அவசரமாய் தலையாட்டினாள் அனு.

''எப்படி ஸார் கண்டுபிடிச்சீங்க?''

''அவங்க என்னைப் பார்த்தாங்க... ஆனா நான் அவங்களைப் பார்க்கலைன்னு தெளிவாகவே சொல்லிட்டீங்களே. தவிர எனக்கந்த நாள் மறக்காது. ரோட்டில் மயங்கி விழறது வாடிக்கையான சம்பவமில்லையே...''

''ம்ம்... ஆனா நான் தான் உங்களைக் காரில் ஏத்திட்டுப் போனதுன்னு எப்படிச் சொன்னீங்க?''

''எனக்கு நினைவு வரும் வரை போலீஸ்காரர் என்னோட இருந்தார். ஒரு ஸ்மார்ட் பொண்ணுதான் உங்களுக்கு உதவுச்சுன்னு விவரிச்சார். இந்தக் காலத்துல அந்த நல்ல மனசு பலருக்கு இல்லைன்னு வேற அங்கலாய்ச்சார்... ஸ்மார்ட்டாய் இருக்கீங்க... முகத்தில கனிவும் தெரிஞ்சது... அதான்.''

அனு முகம் சிவப்பதை விழி பிதுங்க பார்த்திருந்தான் அசோக்!

''நீங்கதான் தலைக்கு இறுக்கமாய் கட்டுப் போட்டீங்கப் போல... அதனால் அதிக ரத்தம் வீணாகலை... அந்த டவலைக்கூட துவைச்சு பத்திரமாய் வச்சிருக்கேன்.''

''அடடே தம்பியைக் காப்பாத்துன பொண்ணா நீ? கரிசனையோட விசாரிக்க வந்திருக்கியாம்மா...'' அத்தை

அருகே வந்து வாஞ்சையுடன் இளையவளின் கரங்களைப் பற்றி நீவினாள்.

"காப்பாற்றல்லாம் இல்லீங்க... என்னால முடிஞ்ச சின்ன உதவி... நீங்க எப்படி அங்கே விழுந்தீங்க ஸார்?"

"ஸ்ட்ரேஞ்ஜ்... யாரோ என் காலை இடறினாப் போலிருந்தது... ஆனா விழுந்த வேகத்தில் பின்னந்தலை கீழேயிருந்த கல் மோதியிருக்கணும்."

"உங்க சாமான் ஏதும் காணாமல் போச்சா?"

"அது திருட்டு முயற்சியாய் எனக்குப் படலை... நீங்க ரெண்டு நண்பர்களும் ஒரே நாளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் என்னைப் பார்த்ததும் கூட விநோதம்தான். ஆனா எப்படி...?"

அவன் கேள்வி புரிந்தது போல முந்திக் கொண்டான் அசோக்.

"நீங்க ஒரு நடிகர் சாயல்ல இருந்ததாய் ரெண்டு பேரும் பேசினதில் நாங்க பார்த்ததே ஒரே ஆள்... அதாவது நீங்கன்னு முடிவு செய்தோம்."

மகேஷ் சிரித்தான்.

சிரிப்பில் தெரிந்த தெற்றுப் பல்கள் அவன் சாயலை வேறாக்கிக் காட்டின. அந்தை குறுக்கிட்டாள்.

"எல்லாரும் இவனை அ.சாமின்னுதான் கிண்டலாய் கூப்பிடறது... இப்ப கொஞ்சம் சதை சேரவும் எனக்கே அப்படிப்படுது."

அசோக் காரியமே கண்ணாய் பேச்சைத் திருப்பினான்.



"அது தவிர உங்கள் கையில் ஒரு ஸிட்னி ஷெல்டனின் நாவலும் இருந்தது ஸார். ஆனால் அனு அப்படி எதையும் பார்க்கலைன்னுட்டா..."

மகேஷின் சிரிப்பு மங்கியது.

"நீங்க குறிப்பிடவும்தான் நினைவுக்கு வருது... வச்சிருந்த புக்கைக் காணலை... தவறிடுச்சு..."

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"அதுக்குள்ளே ஒரு போட்டோ கூட இருந்துச்சு ஸார்."

மகேஷின் பார்வை கூர்மையானது.

"அதை நீங்க எப்படி... எப்பப் பார்த்தீங்க."

"நீங்க பக்கங்களைப் புரட்டாமல் புத்தகத்தையே வெறிக்க... கொஞ்சம் ஆர்வமாகி ட்ரெயினில் எட்டிப் பார்த்தேன் ஸார்..."

"அந்தப் படம் ரொம்ப அழகாயிருந்ததுன்னு அசோக் சொன்னான்..."

விஷயத்தை இயல்பாக்க முயன்றாள் அனு.

மகேஷ் குனிந்தபடி தன் கை விரல்களைக் கோர்த்தான். பிரித்தான்.

அது பற்றி கேட்க வந்தீங்களா?" என்றான் கடைசியில்.

"ஆமாம் ஸார்... ஏன்னா அந்தப் படத்தில் இருந்த பெண் இப்போ குற்றாலத்தில் இருக்கா... அவளைப் பார்க்கவும் நேர்ந்தது... அவ ஆபத்திலே இருக்கான்னு நினைக்கிறேன்..."

அசோக் அவசரமாய் பேசினான்.

மகேஷின் முகப்போக்கு அவன் பேச்சைத் தூண்டித்தது.

10

"அவ ஆபத்தில இருக்காளா? ரூபாவால பிறருக்கு ஆபத்தே தவிர. அவளுக்கு ஏதும் நேராது."

மகேஷ் மிக மெல்ல ஆனால் தெளிவாய் சொல்ல அவனது எதிரே இருந்த அனுவும் அசோக்கும் மூச்சு விடவும் மறந்திருந்தனர்.

"இவங்க யாரைப் பத்தி பேசறாங்க மகேஷ்... அந்த அந்த ரூபாவைப் பத்தியா?"

"ஆமாம் அத்தை... அவளுடைய நடை உடையெல்லாம் கடந்த வருஷங்கள்ல மாறியிருந்தாலும் அவளை எங்கே பார்த்தாலும் கண்டு பிடிச்சிடணும்ங்கிறதுக்காய் அவ போட்டோவை நாவலுக்குள்ளே வச்சிருந்தேன்... அப்பப்ப பார்த்துக்கிட்டேன். அதை இந்தத் தம்பி கவனிச்சிருக்கார்."

"இந்தப் பொண்ணு உன்னைத் தூக்கிப் போய் காப்பாற்றியிருக்குது... ஆனா இவங்களுக்கும் அவங்களுக்கும் என்ன சம்பந்தம்...?"

"நான் காப்பாத்தலைங்க... ஹாஸ்பிடலுக்கு என் கார்ல..."

"லான்லர்ல தலைல ரத்தம் வடியற ஒருத்தனை ஏற்ற தனி மனசு வேணும்ங்க..."

முறுவலித்தான் மகேஷ்.

"அதெப்படி லான்ஸர்ல வந்தேன்னு உங்களுக்குத் தெரியும்?"

"போலிஸின் ரிப்போர்... ஆனா நீங்க ரெண்டு பேருமே நிறைய துப்பறிவீங்கன்னு நினைக்கறேன்... உங்களுக்கு ரூபாவை எப்படித் தெரியும்?"



"ரூபாவைத் தெரியாது... அவங்க பேர் ரம்யா, டாக்டர் சௌந்தர்ராஜனின் மனைவி."

"பேரை விஷம்னு வச்சுக்கிட்டால் பொருத்தமாயிருக்கும்.. பளபளன்னு மின்னுற விஷக் குமிழ் அவ... ஆசைப்பட்டு தொட்டவன் பிழைக்க முடியாது..."

"யு மீன்... நீங்க அவளை...?"

அனு தயங்க, மகேஷ் விளக்கினான்.

"இல்லைங்க... நல்லவேளை எனக்கப்படி சந்தர்ப்பம் வாய்க்கலை... அப்போ நான் பிலானில்ல என்ஜினீயரிங் படிச்சிட்டிருந்தேன்... அவளால பாதிக்கப்பட்டது மகிளா - என் தங்கச்சி."

ஊஞ்சலைப் பற்றியபடி நின்ற அத்தை மெல்ல விசும்புவது கேட்டது.

"அழாதீங்க அத்தை... இனி அழுது மகிளா திரும்பப் போறதில்லை..."

"தெரியும்டா... ஆனாலும் போகற வயசா அது... எத்தனை அம்சமான பொண்ணு அவ."

"வெறும் அழகைக் கொண்டு சந்தோஷப்பட்டுட்டோம் நாம. அவளுக்கு உலகத்தைப் பற்றி எதுவுமே கற்றுத் தரலை."

"ம்ப்ச்... பொத்தி வச்சு நல்லவன் ஒருத்தன் கையில கொடுத்திடணும்னு நினைச்சோம்... அவ ஒரு பயல்ட்ட நின்னு பேசியிருப்பாளா?"

"பசங்களும் பொண்ணுங்களும் பேசிப் பழகணும் அத்தை... அப்பத்தான் ஓரளவு நல்லதும் மற்றதும் புரியும். நீங்க சேர்ந்து படிச்சவங்களீங்க?" அசோக்கைப் பார்த்து கேட்டான்.

''ஆரம்பக் கல்வி சேர்ந்துதான்... பிறகு வெவ்வேற ஸ்கூல்ன்னாலும் ஒரே ஊர்ங்கறதால் சேர்ந்து பயணமும் செய்வோம். ஒருத்தரை ஒருத்தர் பொறுத்து போய்க்குவோம்'' கண்களை உருட்டினான் அசோக்.

''ம்ம்... மகிளா பெண்களோட பழகறது ஆபத்தில்லைன்னு நினைச்சு அவளைப் புலி வாயில்ல விட்டுட்டோம்.''

''புலி வாய்ன்னு நீங்க சொல்றது ரம்யாவை அதாவது ரூபாவை?''

''அவ மகிளாவுடைய காலேஜ் சீனியர்.''

''நீங்க இப்ப அந்த நாசக்காரியைப் பார்த்தீங்களா?'' அழுகையூடே ஆத்திரமாய் கேட்டாள் அத்தை.

''அத்தை... நீங்க என்னை மன்னிக்கணும்... அவ குற்றாலத்தில் இருக்கறது எனக்குத் தெரியும்.''

''அப்புறம் ஏன்பா அவளை இழுத்துப் போட்டு... நாலு கேள்வியாவது கேட்கலாம்ல?''

''அவளும் நாமும் வெவ்வேற அத்தை. மனசாட்சி ல்லாமல் அவ ஏதேதோ செய்தா... அதையெல்லாம் நாம னைச்சுக்கூட பார்க்க முடியாது. உங்களுக்கு விவரமாய் சால்றேன். எங்கப்பா தாசில்தார். அடிக்கடி மாற்றலாகும். த்யோகம் என்பதால் அப்பா இங்கே பிளாட் வாங்கி வீடு டிட்டார். பாளையங்கோட்டையை 'ஆக்ஸ்ஃபோர்ட் ஆப் வுத்'னுவாங்க. படிப்புக்காக நாங்க அம்மாவோட இங்கே கினோம்.

'ஆமா... இவங்களுக்குப் புரியறாப்ல சொல்லு... ஆனா நச் சனியனை.''



''அத்தை எல்லாருக்கும் காபி எடுத்துட்டு வாங்களேன்?''

அத்தை மூக்கை உறிஞ்சியபடி எழுந்து போன பிறகு தொடர்ந்தான். ''வாழாவெட்டியான இந்த அத்தையும் எங்களோட வந்துட, நாட்கள் சுவாரஸ்யமாய் தான் போச்சு.''

''உங்க பெற்றோர்கள்?''

''இப்ப ஸ்ரீவில்லிபுத்தூர்ல இருக்காங்க. அதான் பூர்வீகம்... மகிளா நடமாடிய வீட்டை... சிரிச்சு நிறைச்ச இந்த வீட்டில இனி அவங்க இருக்கப் பிரியப்படலை... முடியலைன்னு வைக்கலாம்... அம்மாவும் அத்தையும் மகிக்கு கோலம், சமையல், பாட்டு, ஸ்லோகம்னு அவங்களுக்குத் தெரிஞ்சதை எல்லாம் கற்றுக் கொடுத்திருக்காங்க... அதே சமயம் கண்டிப்பான வீடு இது... ஆக அவ உலகம் அறியாமல் வளர்ந்துட்டா...!''

காபியுடன் வந்த அத்தை கூடவே எடுத்து வந்திருந்த மகிளாவின் புகைப்படத்தையும் காட்டினாள்.

''பாருங்க... எத்தனை சுந்தரமான பொண்ணுன்னு... நகையெல்லாம் போட்டு நிறுத்தினா அவளைக் கும்பிடத் தோணும். அத்தனை தெய்வாம்சம்!''

முத்து புல்லாக்கு, மாணிக்கங்கள் பதித்த நெற்றி சுட்டி, ஜிமிக்கி, அட்டியல், காசு மாலை என்று படத்திலும் கூட அப்பெண்ணின் தேஜஸ் ஜொலித்தது.

''பின்னல் தொடையில் இடிக்கற நீளம்... அந்த ரூபா சொல்லி அதையும் வெட்டி வீசிட்டாளே...''

''ஓஹோ.''

''மகிளா பக்கத்திலிருக்கற பள்ளியில படிச்சதால சதா அவ மேல கவனம் வச்சுக்க முடிஞ்சது... டீச்சர்லாம் கூட அவளை

அடைக்காத்தாங்க. ஆனால் காலேஜ் இவங்களுடைய வரம்பை மீறினது... அதுவரை அனுபவிக்காத சுதந்தரம்... சிலோன்ல இருந்து வந்து படிச்ச சீனியர் ரூபாவை மகிக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு... அலட்டலான அந்தப் பொண்ணு மேல ஒரு ஈர்ப்பு..."

"புரியுது ஸார்... ரூபா போட்டோவைப் பார்த்த நானே அவளைப் பற்றி மேலும் தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன்!"

அசோக் ஒப்புக் கொண்டான்.

"தினம் காலேஜிலிருந்து வந்ததும் ரூபா புராணம்தான்... அவளுக்கு ஹாஸ்டல் சாப்பாடு சரியில்லைன்னு வீட்டுச் சாப்பாடு கொண்டு கொடுப்பா... அவ டான்ஸ்ல சேர்ந்திருக்கான்னு இவளுடைய பட்டுப் புடவை போகும்... ஆறு மாசம் கழிச்சு அந்தக் கழிசடையை வீட்டிற்கும் கூட்டிட்டு வந்தா... எங்களையும் மயக்கிட்டா..."

மாமி சொல்ல புரிதலுடன் தலையாட்டினர் அசோக்கும், அனுவும்.

ரூபாவும் தன் பங்குக்கு மகிளாப் புராணம் பாட, நல்லப் பொண்ணுதாம் போலன்னு எண்ணிட்டோம். அதுகளும் மேலும் நெருங்கிடுச்சுங்க..."

"அப்ப நான் பிலானில்ல படிச்சிட்டிருந்ததால இங்கே இருந்தது பெண்கள் மட்டும்தான். டாக்ஸி வச்சு ரூபா இவங்களை எல்லாம் அப்பப்ப வெளியே அழைச்சுட்டுப் பாயிருக்கா..."

"எங்கக் கைச் சமையலை எத்தனை நாள் சாப்பிட் நப்பா... அவ உருட்டி உருட்டி ரசிச்சு சாப்பிட்டதைப் ர்த்து வயிறு குளுந்தோம்... பிறகு அப்படியே வயிறு எரிகங்கப் பண்ணிட்டாளே..."



"இருங்கத்தை கோர்வையாய் சொன்னால் தானே அவங்களுக்குப் புரியும்!"

ஆனால் இவர்களுக்கு பழகித் துரோகம் செய்திருக்கிறாள் அந்த ரூபா என்றளவில் புரிந்தது.

"இருப்பா... ஒரு தரம் கடைக்குப் போனோம்மா... இதெல்லாம் நடந்து அது ஆச்சு ஆறு வருஷம்... அப்பத்தான் சூடிதார் பிரபலமாயிட்டிருந்துச்சு... அதுவரை மகிக்குப் பாவாடை தாவணிதான். அந்த ரூபாதான் விதவிதமாய் உடுத்துவா. எங்களையும் வற்புறுத்தி மகிக்கு ரெண்டு செட் சூடிதார் செட் எடுக்க வைச்சுட்டா. இப்ப உங்க ஆசைக்குன்னு அவ காசுல மகிக்கு பட்டுப் பாவாடை ஒன்னை எடுத்துட்டா... கரும்பச்சையில தங்கக் கரையிட்ட பாவாடை. அதுக்குத் தோதாய் டிஷ்யூ தாவணி."

அத்தையின் கண்கள் பழங்கனவுகளில் மிதந்தன.

"அந்த ஞாயிறு மகிக்கு தாழம்பூ வச்சுப் பின்னி விடச் சொல்லி, புது பாவாடை, தாவணியை உடுத்தி விட்டு, மேக் அப்னு ஏதோ தடவிய மகியை எங்க முன்னே நிறுத்த, அசந்துட்டோம். அப்பத்தான் விஜயா."

"அது எங்கம்மா" விளக்கினான் மகேஷ்.

நகைகளை எல்லாம் எடுத்து தன் மகளுக்குப் போட்டு அழகு பார்த்தா... ரூபா தன் கேமராவும் கொண்டு வந்ததால் எடுத்த படம்தான் இது... அப்புறம் நகைகளை எடுத்துஉள்ளே வைக்கறப்ப கூட கவனிக்கலை. பிறகு தான் கண்டு பிடிச்சோம். சந்திர பிரபையை காணலைன்னு... காசு மாலை இருபத்தேழு பவுன்... வட இந்தியாவிலிருந்து அந்தக் காலத்தில தருவிச்ச குந்தன் வைர மாங்காய் மாலை பதினொரு பவுன்... நெற்றிச் சாமான், அட்டியல்ல உள்ள மாணிக்கமெல்லாம் அந்தக்

காலத்துல பர்மா போயிட்டு வர்ற செட்டியார்கள்ட்டருந்து விஜயாவின் தாத்தா வாங்கினது. நாற்பது வருஷங்களாயிட்டா நகைகளுக்கு 'ஆன்டிக்'னு தனி மதிப்பு கூடிடுது.

அந்த வகையில் அதுங்களின் இப்போதைய மதிப்பு கால் ஏன் அரை கோடி ரூபா இருக்கும்.

''அத்தை ஏன் இதெல்லாம் விலாவாரியாய் சொல்றாங் கன்னா... அந்த நகைங்கதான் மகிளாவின் உயிருக்கே எமனாயிடுச்சு...''

''நகை எமனில்லைடா... ரூபாதான் எமன். யாரையும் கொள்ளையடிச்சு பிடுங்கின சொத்தில்லையே அது? உழைச்ச காசில உருவானதுங்க. ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலுக்கான நகைகளைச் செய்ற ஆசாரிமார் உருவாக்கின நகை. நுணுக்கமான வேலைப்பாடு... அதைப் பார்த்த ரூபா மாதிரிக்கான அந்த சந்திரபிரபை.

''அதென்ன?'' சந்தேகமாய் கேட்டான் அசோக்.

''நெற்றிச் சுட்டிக்கு வலது, இடது புறம் வைக்கற நகைங்க.''

''எடுத்துட்டுப் போய் காட்டி விவரம் கேட்டிருக்கனும்... அவனுங்களும் பேராசைப்பட்டுட்டாங்க...''

''இதுல கொள்ளைக்கார கும்பலே சம்பந்தப்பட்டிருக் தா?''

''இருக்கனும்... ஒரு பொண்ணு ஒண்டியாய்... கொலை ய்ற வரை...''

''அப்டின்னா மகிளாவை...''

''மகி இப்ப இல்லை... அவ சடலத்தைக் கட்டி அழக்கூட வலியே...''

என்னாச்சு?'' மிக மிருதுவாய் வினவினார்கள்.



''மகி காலேஜ் சேர்ந்த ரெண்டாம் வருஷம் நிறைய மாறிட்டா. தலை முடியைக் குறைச்சவ. தான் ஏர் ஹோஸ்டலஸாய் ஆகப் போவதாய் பேச ஆரம்பிச்சாளாம்... படிப்பை முடிச்ச ரூபா தனக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்குன்னு சொல்லி எல்லாரையும் இன்வைட் பண்ணியிருக்கா...''

''எங்க எல்லாரையும் கட்டிப் பிடிச்சு கண்ணு கலங்கினா... மகி இல்லாம எங்கழுத்தில தாலி ஏறாதுன்னா, விஜயா மகி அப்பாட்ட சொல்லி சம்மதம் வாங்கி பாஸ்போர்ட்டுக்கும் ஏற்பாடு பண்ணிட்டா... எங்களுக்கும் கடல் கடந்து போற நப்பாசை...''

அத்தையின் குரல் மிகக் கம்மியது.

''சிலோன்ல தங்களுக்கு ரூபராஜ்'ங்கற பேர்ல எஸ்டேட்ஸ், வீடு எல்லாம் இருக்கறதாய் அவ சொன்னதை நம்பிட்டாங்க... மகியை என்னோட கூட்டிட்டுப் போயிடறேன்... நீங்க பின்னால் வாங்கன்னதும் சந்தோஷமாய் வழியனுப்பி வச்சாங்க...''

''பாவி... முட்டாப் பாவிங்க...'' அத்தை கேவினாள்.

''சிலோனிலிருந்து ஒரே வாரத்திலே தகவல்... போலீஸ் தந்தாங்க.

மகிளா பரணிதரன் டெட்'ன்னு.

''கடவுளே...!''

''நானும் அப்பாவும் சிலோன்ல ஓடினோம். அப்பா அரசு அதிகாரியாய் இருந்ததால உடனே அயல் நாட்டிற்கு போக முடிஞ்சது. ஆனா அங்கே எங்களுக்கு அதிர்ச்சிக்கு மேலே அதிர்ச்சி... ஏதோ விபத்துன்னு பதறின எங்களை அங்கே

நடத்தினாங்க... மகிளா போலீஸ் இளக்காரமாய் விஷமெடுத்துத் தற்கொலை செய்துகிட்டதாய் சொன்னவங்க எங்களை அழைச்சிட்டுப் போனது ஒரு மூன்றாந்தர லாட்ஜுக்கு... அங்கேதான் என் தங்கை மகி ஒரு வாரமாக தங்கியிருந்தாளாம்..."

"உங்க தங்கை போன் செய்து ஏதும் தகவல் தரலியா?"

"போனோகிராம் வந்தது. 'பத்திரமாய் வந்து சேர்ந்தேன்'னு சரி, கல்யாண மும்முரம்னு நினைச்சிட்டோம்."

"அது மாதிரியான லாட்ஜ் எதற்குப் பிரசித்தம்னு பார்த்ததுமே புரிஞ்சது."

மறுபடி அனு. "கடவுளே" என்று முகம் பொத்திக் கொண்டாள்.

"பெட்டியில் மகி எடுத்துப் போயிருந்தது பட்டு, நகைகளைத் தவிர மற்றவைத் தாறுமாறாய் கிடந்தன..."

"பழங்கால நகைகளையுமா எடுத்துட்டுப் போயிருந் தாங்க?"

"கல்யாணப் பெண்ணின் தோழி மகிதான். அவ என்னைய பீட் பண்றாப்பல உடுத்திக்கனும்னு சொல்லி நகைகளை எடுத்துப் போகப் பண்ணிட்டா."

"ஆக நகைக்காக?"

"போலீஸ் ரிப்போர்ட், மகி விஷமெடுத்து தற்கொலை செய்துகிட்டதாய் சொன்னதோட முடிடுச்சு... அந்த ஹோட்டலில் இருந்த குண்டர்களும், மது நெடியும், பேச்சும்... காட்... இன்னும் நினைச்சால் பயங்கரம்தான்..."

"ரூபா என்ன ஆனா?"



"தகவலே இல்லை... மகிளா யாரோடு இங்கே இருந்தான்னு கேட்டா, 'பல பேர் வந்தாங்க, போனாங்க... யாரையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது'ன்னு நக்கலாப் பதில் வந்தது. அப்பா நொறுங்கிட்டார். அவங்க நீட்டிய பேப்பர்ஸ்ல எல்லாத்திலேயும் கையெழுத்து போட்டுட்டு என்னையும் இழுத்துட்டு வந்து சேர்ந்தார். ஆக காரண காரியங்களைக் கிளறாம அவளை தகனம் பண்ணியாச்சு... அந்நிய நாட்டில் எதையும் விசாரிக்க முடியலை... அத்தகு சூழலும் இல்லை... அது ரொம்பப் பெரிய அதிர்ச்சி..." பெருமூச்சு விட்டான்.

அனுவின் நெஞ்சு இளகியது.

"ஆனா நாங்க கலாட்டா செய்து, நியாயத்திற்காக போராடி, நகைகளைப் பற்றி விசாரிச்சிருக்கனும்."

"அத்தனை விலை மதிப்பில்லாத நகைகளை வெளி நாட்டுக்குக் கொண்டு போவது சுலபமில்லையே? இன்ஷூர் பண்ணனும்..."

"அதைப் பற்றியெல்லாம் ரூபா யோசிக்கவே விடலை... யாரும் கேட்டால் நீ டான்ஸர்... அதுக்கான போலி நகைகள் இதுன்னு சொல்லிடுன்னு மகிளாட்ட சொல்லி வச்சிருந் திருக்கறா..."

"ரொம்பப் பிளான் பண்ணி செய்த காரியம் தான் இது."

"ஆமா. தன் போட்டோவை கூட அவ இங்கே விட்டுட்டுப் போகலை... கல்யாணத்தை முடிவு பண்ணி, நடத்தும் தன் பெரியம்மாட்ட காட்டன்னு எடுத்துட்டுப் போயிட்டா... நெக்லஸ் உள்பட அத்தை தான் ஒரு க்ரூப்பில் அவ இருக்கற படத்தை தேடி பிடிக்க, நான் அதை என்லார்ஜ் பண்ணினேன்."

''ஹா... எத்தனை அழகுன்னு நினைச்சேன் ஸார்... இப்ப எத்தனை ஆபத்தானவன்னு பயம்மா இருக்குது... அவளை இனிப் பார்க்கற துணிச்சலே இல்லை...''

உடல் குலுங்கினான் அசோக்.

## 11

பகலின் வெப்பத்தை எல்லாம் அவிழ்த்துப் போட்டு விட்டு உலகம் நிலவொளியில் குளித்துக் கொண்டிருந்தது.

''அந்த ரம்யா பூ மாதிரி இருந்தா அனு... ஆனா பூவேயில்லை. ஒரு பாசாங்குப்பூ... அதனுள்ளே இருக்கிறது தேனில்லை... விஷம்.''

''அப்படின்னா இப்ப ஆபத்தில் இருக்கறது அவளில்லை. டாக்டர் சௌந்தர்ராஜன். அவளுடைய புருஷன்.''

''யூ ஆர் ரைட் அனு. ரூபா அதாவது ரம்யா...''

''ரம்யான்னே சொல்வோம். இல்லைன்னா குழம்புது.''

''ம்ம்... அவளைப் பற்றி மகேஷ் ஸார் சொல்றதைக் கேட்க கேட்க எனக்குள்ளே ஒரு பயம்...''

''என்ன? இவ மேல ஆசைப்பட்டோமே... இந்த ரம்யா கைல சிக்கியிருந்தா நம்ப கதி என்னன்னா?''

''ச்ச... குற்றாலத்திற்கு என்ன திட்டத்தோட வந்திருக்காளோன்ற நெருடல்.''

''நாம இதையெல்லாம் யாரிடம் சொன்னாலும் எடுபடாது. முக்கியமாய் டாக்டர் சௌந்தர்ராஜன்.''

''ம்ம்... இதுவரை அவரை நாம் சந்திச்சதில்லை... இப்படி அவர் மனைவியைப் பற்றிச் சொன்னால் இது உங்க பிஸினஸ்



இல்லைன்னு நம்மைத் துரத்திடுவார். ஏன் இத்தனை நடந்தும் மகேஷ் சாரே விட்டேற்றியாய்த் தானே பேசினார்.''

''அது விட்டேற்றியான பேச்சில்லை அசோக். விவேகம்... பக்குவப்பட்டதால் வந்த பண்பு. அவர் பேசினது தான் சரி... ஐ லைக்ட் இட்.''

''எது? பழிவாங்கணும்ம்ர சாக்கிலே நானும் ஒரு மிருகமாய் மாற விரும்பலைன்னாரே - அதுவா? அதுவும் சரிதான்... பைபிள்கூட 'பழி வாங்குதல் கர்த்தருக்குரியது'ன்னுதான் சொல்லுது.''

''ஒவ்வொருத்தரும் பழி வாங்கன்னு கிளம்பிட்டால் உலகம் வெறுப்புக் காடாயிடும். ரம்யா குற்றாலத்தில் இருப்பது தெரிஞ்ச பிறகும் மனசை அடக்கி ஒதுங்கிட்டாரே... அதுக்கப்புறம் தானே தனக்கு நிம்மதியாய் தூக்கம் வருதுன்னார்?''

''ஆனால் இப்படியொரு கிரிமினலை சுதந்தரமாய் உலவ விடறது பெரிய தப்பு... அனு... பாவம் டாக்டர்...''

''அசோக்... வல்லவனுக்கு வல்லவன் வையத்திலே உண்டுங்கறது போல ஒரு வேளை டாக்டர், ரம்யாவை விட பெரிய கேடியாய் இருந்தால்?''

இருவரும் மௌனமாயிருந்தனர் சற்று நேரம்.

''ஆக ரேவதிக்கா டாக்டர். சௌந்தர்ராஜனை தன் கணவனுக்கு சிகிச்சை தர அழைக்காததும் சரிதான்னு படுது... அண்ணன் மயங்கிக் கிடந்த போது கூட டாக்டர் வரக் கூடாதுன்னு பிடிவாதமாய் நின்னுட்டாங்க.''

''நல்ல வேளையாய் நீயும் அப்போ அங்க இருந்ததால் உதவிட்ட...''

''அது ரவீந்தருக்குப் பிடிக்கலை...'' பெருமூச்சு விட்டாள் அனு.

ஊர் எல்லையைத் தாண்டியிருந்தார்கள். புகை படியாத குளிர் காற்று அவர்களை நீவி குளிர்விக்க முயன்று கொண்டிருந்தது.

அதிக போக்குவரத்தின்றி சாலை விச்ராந்தியாய் நீட்டி நிமிர்ந்திருந்தது.

''ரேவதிக்கா முகத்தில் இப்பதான் நிம்மதி தெரியுது.''

''ம்ம்... தகுந்த சிகிச்சையில் தன் கணவரை வச்சிருக்கற திருப்தி. நாளை மதியம் இங்க வீட்டுக்கு வந்துடறாங்கல்ல?''

''ஆமா... நான் நாளை காலைல ரேவதிக்கா வீட்டுக்குப் போய் வீட்டைச் சுத்தம் செய்யச் சொல்லணும். அன்னைக்கு அப்படியே போட்டுட்டு அவசரமாய் கிளம்பியாச்சல்ல?''

''ரவீந்தர் இப்ப எங்கே?''

''திருநெல்வேலி பக்கம் ஏதோ வேலையும் இருக்கறதாய் சொன்னார்... ரெண்டு நேரம் ஹாஸ்பிட்டல் வந்தாரே...''

''ரேவதி மேடமோட அவரும் வந்துடுவாரோ?''

''ம்ம்... மே பி...''

இருவரும் மௌனமாய் தன் சிந்தனைகளில் மும்முரமாயிருந்தனர்.

திடீரென ஏதோ நினைவில் தட்டுப்பட்டது போல ஒரு சிலுப்பலுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அவரை... அதான் மகேஷை தள்ளி விட்டது யாராய் இருக்கும்... அதுவும் அத்தனை பலக்க...?''



''அதுவும் தள்ளிவிட்ட ஆள் ஏன் அப்படி மறைஞ்சிடணும்... ஒன்னு அவன் குற்றவாளியாய் இருக்கணும்...''

''அதாவது வேணும்னே மகேஷின் காலை இடறி விட்டிருக்கணும்... இல்லைன்னா தன் கவனக் குறைவால் ஒரு ஆசாமி ரத்தம் வழிய கீழே கிடப்பது கண்டு பயந்தும் பதுங்கியிருக்கலாம்.''

''ம்ம்... ஏன்னா அந்தப் புத்தகத்தை அதிலிருந்த புகைப்படத்தோட கை முதல் பண்ரது லில்லி. ஏன்னா மகேஷ் ஸார்கிட்ட அதன் நெகடிவ் இருந்திருக்குமே? நான் ஒரு விஷயம்... அதாவது ரம்யாவைப் பற்றி...''

''அடடே... இன்னும் அவளைப் பத்தி யோசிச்சாலே உம்முகத்துல பல்ப் எரியுதே அச்சு...''

''இல்லை அனு... இது ஒரு புது கோணம்... அந்த பல்ப் ஞான ஒளின்னு வேணும்னா வை. கவனி... நான் முதல் நாள் எதிர்பாராம ரம்யாவைச் சந்திச்ச போது...''

''ம்ம்... உன்னை உடனே தப்பிச்சு போயிடச் சொன்னா... பயந்து தெரிஞ்சா.''

''அது நடிப்புன்னு படுது அனு...'' என்றான் மெல்ல.

அனுவின் புருவங்களின் நடுவே குட்டி முடிச்சு ஒன்று உருவானது.

''உன்னை யார்னே தெரியாதே? அப்ப ஏன் ரம்யா உங்கிட்ட நடிக்கணும்?''

''அவ என்னை அதாவது ஒரு புது முகத்தை எதிர்பார்க்கலை... ஆனா வேற ஒருத்தரை எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கா...''

அனுவின் புருவ முடிச்சு மேலும் ஆழமானது.

அசோக்கின் முகத்தில், தொனியில் இருந்த தீவிரத்தைக் கண்டவள் தானும் உன்னிப்பாய் யோசித்தாள்.

"இன்னும் தெளிவாய் சொல்லேன், அக்க."

காரின் வேகத்தைக் குறைத்து, சாலை ஓரமாய் நிறுத்தினாள்.

"ரம்யா யாரையோ அந்த நேரத்திற்கு எதிர்பார்த்து, அது நான்தான்னு நினைச்சு அவசரமாய் என் பக்கமாய் வந்துட்டா..."

"ம்ம்... இல்லைன்னா யாரோ மர நிழலில் பதுங்கி நிற்கிறதைப் பார்த்து அவ பயந்து கத்தியிருக்கனுமே..."

"குட், நீயும் நுனி நூலைப் பிடிச்சுட்டே. ஆக ரம்யா என்னை நெருங்கினதும் நான் தான் வேற்று ஆளுங்கறது புரிஞ்சது."

"ஆக பயந்தது போல பாவனை காட்டி உன்னையும் பயங்காட்டி விரட்டிட்டா... ரைட்?"

"ரைட்... நொடிப்பொழுதில் நிலைமை மாறியது புரிஞ்சு சமாளிச்சுட்டாப் பார்த்தியா... ஷி... இஸ் டேஞ்சரஸ்..."

"ம்ம்... அந்நேரம் ரம்யா எதிர்பார்த்த நபர் யாராய் இருக்கும்? ராகவண்ணன்? ஒரு வேளை அங்கே போய் தனக்கு போதை மருந்துகளை வாங்கினாரோ?"

"ஓஹ்... யோசிக்க யோசிக்க மூச்சை அடைக்குது. இது நம்மை மீறின சமாச்சாரம்... ஆனால் கிடப்பிலே போட்டு மூடறது தப்பு. ஏன்னா இதனால பல பேருக்கு ஆபத்து..."

"பெரியவங்கள்ட்ட சொல்லிடணும் அக்க..."

"உங்கப்பா திருநெல்வேலில... என் தாத்தாவும் ஒரு கல்யாணத்துக்காய் மதுரை போயாச்சு... பொறுப்போம்..."

அனு காரை உயிர்ப்பித்தாள்.



அந்த தாமதம் மேலும் ஆபத்துகளுக்கு காரணமாகப் போவது தெரியாமல் சில சிக்கல்களை திறமையாய் முடிச்சவிழ்த்த திருப்தியில் இருந்தனர் இளையவர்கள் இருவரும்.

## 12

அன்றிரவு அனுவை தூக்கம் சுலபத்தில் நெருங்கவில்லை. சாட்டின் தலையணையை விதவிதமாய் கட்டியும் அதில் புதைந்தும்கூட உறக்கம் எட்டியே நின்று அவளது 'உறக்க முயற்சிகளை' வேடிக்கைப் பார்த்தது.

அசோக்குடனான சம்பாஷணையை மனதுள் மறுபடி ஓட்டினாள்.

அசோக் சொன்னது மிக உண்மை என்று பட்டது. யாரையோ எதிர்பார்த்துதான் ரம்யா அசோக்கை அவசரமாய் நெருங்கியிருக்க வேண்டும்... ரம்யா எதிர்பார்த்த நபர் ஒரு ஆண் என்றால் அவன் யாராய் இருக்கக்கூடும்?

ராகவ்?

அசோக்கிற்கு இந்த அனுபவம் நேர்ந்த சமயம் ராகவண்ணன் அவரது மாடி அறையில் இருந்ததாய்தானே அக்கா சொன்னார்கள். அப்படியே வெளியேற வேண்டு மானாலும் ஒரேவழிதான். அண்ணன் படியிறங்கவில்லையே... ஆக அவரில்லை..."

ரவீந்தர்?

அவளுக்குத் தெரிந்து அங்கிருந்த மற்றொரு ஆண்.

அன்று தான் ரம்யாவைப் பார்த்திருப்பதாகக் கூறியதும் எத்தனை வெடுக்கென்று திரும்பினான்... ஏனப்படி?

ராகவன்னனை டாக்டர் சௌந்தர்ராஜனிடம் சிகிச்சைக்கு கூட்டிச் செல்ல முனைந்ததும் ரவீந்தர்தான்.

ஆனால் அதை குற்றம் என்றும் சொல்லிவிட முடியாது. அது லாஜிக்... அருகிலிருக்கும் மருத்துவரின் உதவியை நாடத்தான் யாருமே நினைப்பார்கள்...

இத்தகு கேள்வி, சமாதானங்களுடன் தூங்கிப் போனவள் எழ, காலையில் வழக்கம் போல தாமதமாகி விட்டது.

எப்போதையும் போல ஆயாவிடமிருந்து 'நல்ல பெண்மணி'க்கான விளக்கங்களும், அந்தப் பட்டத்தைத்தான் அடைய முயலுவதாயில்லை என்ற அனுவின் மறுப்புகளுமாய் நேரம் கழிந்தபோது போன் மணி கிணுகிணுத்தது.

பேசிவிட்டு வந்த அனுவின் முகத்தைப் பார்த்த ஆயா அயர்ந்துதான் போனாள். அதில் நூறு மலர்களின் மலர்ச்சியிருந்ததே!

''யாருப்பா போனிலே...?''

மறுபடி மணியோசை குறுக்கிட்டது.

இம்முறை ஆயா கருத்தாய் ஒட்டுக் கேட்டாள்.

பேசவது ரேவதிதான் என்று புரிய சுவாரஸ்யமின்றி நகர்ந்தாலும் போன் சம்பாஷணை முடிந்ததும் விசாரித்தாள்.

''அந்தம்மா என்ன சொல்லுறாங்க?''

''ரேவதிக்காவுடைய அப்பா, அம்மா ஒரிஸாவிலேருந்து வர்றாங்களாம்.''

''பாவம் அந்தப் பொண்ணு கஷ்டப்பட்டிருக்க. கொஞ்சம் முன்னமே பெரியவங்க வந்து மாப்பிள்ளையை ரெண்டு அமட்டு அமட்டியிருந்தா இந்த நிலைமை வந்திருக்காது.''



''அதெப்படி மாப்பிள்ளையை மிரட்டறது? இங்கே பொண்ணுங்கதானே அடங்கி அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகணும்?''

இடக்காய் சீண்டினாள் அனு.

''அதுவும் உண்மைதான் பாப்பா... ஏதும் கேட்டு மாப்பிள்ளை முறுக்கிட்டா அதுவும் வம்பு.''

''முறுக்காத நல்ல பையன்களும் இருப்பாங்கன்னு தோணுது ஆயா.''

''உங்குணத்துக்கு அப்படித்தாம்மா அமையும்.''

''சரி... இப்ப நான் ரேவதிக்கா வீட்டுக்குப் போறேன். எதுக்குத் தெரியுமா... அங்குள்ள வேலைகளை எல்லாம் பார்க்கத்தான்.''

ஆயாவின் முகம் மலர்ந்தது.

''பொண்ணுங்களே இப்படித்தான். பிறந்த வீட்டில துரும்பை நகர்த்தலைன்னாலும் போற வீட்டைத் தூணாய் தாங்குங்க...''

''அ... அ... ஆங்... பொறுங்க ஆயா... இப்ப போறது ரேவதிக்காக மட்டும்தான். பாவம் ஒண்டியாய் எத்தனை வேலையைத்தான் பார்ப்பாங்க... சரி வரட்டா?''

பெருமூச்சுடன் கையசைத்தாள் முதியவள்.

''சரி பாப்பா... பாட்டா... பொழுதோட வந்து சேரு.''

ரேவதியின் வீடு சுத்தமாகவே தெரிந்தது. பூட்டப்பட்டிருந்த மாடி அறையைத் திறந்து விட்டாள் அனு.

அவசரமாய் கிளம்ப நேர்ந்ததால் அறை களேபரமாய் கிடந்தது.

ராகவண்ணனை டாக்டர் சௌந்தர்ராஜனிடம் சிகிச்சைக்கு கூட்டிச் செல்ல முனைந்ததும் ரவீந்தர்தான்.

ஆனால் அதை குற்றம் என்றும் சொல்லிவிட முடியாது. அது லாஜிக்... அருகிலிருக்கும் மருத்துவரின் உதவியை நாடத்தான் யாருமே நினைப்பார்கள்...

இத்தகு கேள்வி, சமாதானங்களுடன் தூங்கிப் போனவள் எழ, காலையில் வழக்கம் போல தாமதமாகி விட்டது.

எப்போதையும் போல ஆயாவிடமிருந்து 'நல்ல பெண்மணி'க்கான விளக்கங்களும், அந்தப் பட்டத்தைத்தான் அடைய முயலுவதாயில்லை என்ற அனுவின் மறுப்புகளுமாய் நேரம் கழிந்தபோது போன் மணி கிணுகிணுத்தது.

பேசிவிட்டு வந்த அனுவின் முகத்தைப் பார்த்த ஆயா அயர்ந்துதான் போனாள். அதில் நூறு மலர்களின் மலர்ச்சியிருந்ததே!

''யாருப்பா போனிலே...?''

மறுபடி மணியோசை குறுக்கிட்டது.

இம்முறை ஆயா கருத்தாய் ஒட்டுக் கேட்டாள்.

பேசுவது ரேவதிதான் என்று புரிய சுவாரஸ்யமின்றி நகர்ந்தாலும் போன் சம்பாஷணை முடிந்ததும் விசாரித்தாள்.

''அந்தம்மா என்ன சொல்லுறாங்க?''

''ரேவதிக்காவுடைய அப்பா, அம்மா ஒரிஸாவிலேருந்து வர்றாங்களாம்.''

''பாவம் அந்தப் பொண்ணு கஷ்டப்பட்டிருச்சு. கொஞ்சம் முன்னமே பெரியவங்க வந்து மாப்பிள்ளைய ரெண்டு அமட்டு அமட்டியிருந்தா இந்த நிலைமை வந்திருக்காது.''



''அதெப்படி மாப்பிள்ளையை மிரட்டறது? இங்கே பொண்ணுங்கதானே அடங்கி அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகணும்?''

இடக்காய் சீண்டினாள் அனு.

''அதுவும் உண்மைதான் பாப்பா... ஏதும் கேட்டு மாப்பிள்ளை முறுக்கிட்டா அதுவும் வம்பு.''

''முறுக்காத நல்ல பையன்களும் இருப்பாங்கன்னு தோணுது ஆயா.''

''உங்குணத்துக்கு அப்படித்தாம்மா அமையும்.''

''சரி... இப்ப நான் ரேவதிக்கா வீட்டுக்குப் போறேன். எதுக்குத் தெரியுமா... அங்குள்ள வேலைகளை எல்லாம் பார்க்கத்தான்.''

ஆயாவின் முகம் மலர்ந்தது.

''பொண்ணுங்களே இப்படித்தான். பிறந்த வீட்டில துரும்பை நகர்த்தலைன்னாலும் போற வீட்டைத் தூணாய் தாங்குங்க...''

''அ... அ... ஆங்... பொறுங்க ஆயா... இப்ப போறது ரேவதிக்காக மட்டும்தான். பாவம் ஒண்டியாய் எத்தனை வேலையைத்தான் பார்ப்பாங்க... சரி வரட்டா?''

பெருமூச்சுடன் கையசைத்தாள் முதியவள்.

''சரி பாப்பா... டாட்டா... பொழுதோட வந்து சேரு.''

ரேவதியின் வீடு சுத்தமாகவே தெரிந்தது. பூட்டப்பட்டிருந்த மாடி அறையைத் திறந்து விட்டாள் அனு.

அவசரமாய் கிளம்ப நேர்ந்ததால் அறை களேபரமாய் கிடந்தது.

''மெத்தைகளைத் தட்டி வெயில்ல போடுங்க...'' என்றபடி தரையில் இறைந்து கிடந்த துணிகளைச் சேர்த்து சலவைக்குப் போட்டாள் அனு.

போதை மருந்தின் நெடி போலும்... அறையுள் இன்னும் மிச்சமிருந்ததால் ஜன்னல்களைத் திறந்தாள். காற்று அறையைக் கோதி விட்டது.

வேலையாட்கள் சுறுசுறுப்பாய் பெருக்கித் துடைத்தார்கள். தங்களது எஜமானி வீடு வரப்போகும் ஆவல் அவர்களது முகம்முரத்தில் தெரிந்தது.

''அப்புறம் ரேவதிக்காவின் பெற்றோர் வராங்க... கெஸ்ட் ரூம் எது?''

''வடக்குப் பார்த்த அறையிலதான் முன்ன வந்தப்ப தங்கினாங்கம்மா. அப்ப அந்த அறையோட மெத்தையையும் காத்தாட விடணும்ல...''

''செய்ங்க...''

அடுத்த ஒரு மணி நேரத்தில் ரேவதி, ராகவ்வின் அறை 'பளிச்'சென்று மாறியது. புது படுக்கை விரிப்பைத் துளி சுருக்கமின்றி விரித்துக் கொண்டிருந்த கௌரியின் முகம் இப்போது சாதாரணமாகவே தெரிந்தது.

எறும்பின் சுறுசுறுப்புடன் வளைய வந்தாள் அவள்.

புத்தியில் துளி சந்தேகம் புகுந்து விட்டால் அது பார்வையின் நிறத்தையே மாற்றித்தான் விடுகிறது.

எதையும் எல்லாரையும் சந்தேகத்திற்குரியவர்களாய் காட்டித் தொலைகிறது... திடீரென மனது மகேஷின் கூறியதிற்குத் தாவியது.



வன்மம், கோபமெல்லாம் முற்றிலும் துடைத்து விட்டால்தான் நிம்மதி என்றாரே.

அந்த நிம்மதி அவர் முகத்திலும் இருந்ததே.

''ஏம்மா... இந்த கண்ணாடியத்தான் அப்பமே துடைச்சீங்களே... மறுபடி ஏந்துடைக்கீங்க? மறு ரூம்புக்குப் போவோம்.''

கௌரி அழைக்க ஒரு அசட்டுச் சிரிப்புடன் அந்த அறைக் கதவைப் பூட்டினாள் அனு.

கீழேயிருந்து ரசம் தாளிக்கும் வாசனை மிதந்து வந்து நாசியைக் கிள்ளியது.

''ஓ... சமையலும் ஆகுதா? நா அது பற்றி யோசிக்கவேயில்லை. ஆனா ரேவதிக்கா லஞ்சுக்குள் வீடு வந்திடு வாங்களோன்னும் தெரியலை.''

''நீங்க இருக்கீங்களேம்மா... வேலைய முடிச்சிட்டு வெறும் வயிறாவாப் போவீங்க?''

வடக்குப்புற அறையைத் திறக்க, தோட்டத்து வேலையாட்கள் மெத்தைகளை அப்படியே வெளியே அள்ளிச் சென்றார்கள்.

தூசி கொள்ளையாய் படிந்திருந்தது.

அனுவிற்கு தும்மி தீரவில்லை.

ஜன்னல்களை விரிய விட்டவள், ''தண்ணி தெளிச்சுப் பெருக்குங்க. இல்லைன்னா மூச்சடைச்சிரும்'' என்றபடி வெளியேறினாள்.

அந்த அறையிலிருந்து ஒரு பழைய 'லக்ஷ்மி'யின் நாவலை எடுத்து அதை தூசு தட்டி வாசிக்க ஆரம்பித்தாள்.

40 வருடங்களுக்கு முந்தைய வாழ்க்கை முறைகள், உடைமணிகள், கூட்டுக் குடும்பப் பிரச்னை, சமூக அமைப்பு அத்தனையும் அந்த எழுத்தின் மூலம் பார்க்க முடிந்தது. இடை இடையே சுவாரஸ்யமான காதல் சம்பவங்கள் சம்பாஷணைகள் வர, அவை ஏனோ மகேஷின் நினைப்பை இழுத்து வந்தன.

சற்று சங்கடமாய் நெளிந்தாள்.

வலுக்கட்டாயமாய் வேறு திசையில் சிந்தையை ஓட்டினாள்.

''இந்த அச்சு மோசம்... வரவேயில்லையே... ஏமாத்துத் தடியன்' என்று திட்ட முனைந்தும் கூட அசோக் வராதது ஒரு குறையாய் படவில்லை.

இப்படி வேலையும், மகேஷ் பற்றிய நினைப்பு உரசல்களுமாய் இருப்பது நன்றாகவே இருந்தது.

மாடி அறையை நீர் ஊற்றி 'சரட் சரட்' எனப் பெருக்கித் தள்ளும் லயம் கூட சங்கீதம் போலிருந்தது.

''யம்மா சாப்பிடறீங்களா?'' என்று சமையல்காரம்மாவின் குரல் உலுக்கவும்தான். தான் உட்கார்ந்தபடியே கண் அயர்ந்திருந்தது புரிந்தது.

எழுந்து முகம் கழுவித் துடைத்தாள்.

''ரேவதிக்கா வந்திரட்டுமே...''

''சாப்பாடு தயாராய் இருக்குதும்மா. பசிச்சா உட்காருங்க.''

''ம்ம்... இன்னும் கால் மணி நேரம் பார்ப்போம்.''

எதிர்பார்த்தது போல சற்று நேரத்தில் வீட்டின் முன் கார் வந்து நிற்கும் சத்தம் தொடர்ந்த சில நிமிடங்களில் வீட்டின் சூழல் மாறிப் போனது.



''வாங்கம்மா... ஐயாவுக்கு இப்ப தேவலையா?'' என்ற விசாரிப்புடன் வேலையாட்கள் சாமான்களை இறக்க,

''குட்டி ராஜா இல்லாம வீடே வெறிச்சோடிடுச்சு'' என்று ஆளாளுக்கு விவேக்கைத் தூக்கிக் கொஞ்சினார்கள்.

அவனும் வீட்டின் குறுக்கும் மறுக்குமாய் பறக்க, வீடு கலகலத்தது.

அனுவின் கைபற்றிக் கொண்டாள் ரேவதி.

''எப்படி நன்றி சொல்லப் போறேன் அனு... உனக்கும் அங்கிளுக்கும்.''

''முதல்ல சாப்பிடுவோம்க்கா... அப்பா எங்கே?''

''நெல்லைல சில வேலைகள் இருக்குது. முடிச்சுட்டு வரேன்னாங்க... எங்க துணைக்கு ரவீந்தர் இருந்தானே.''

வேலையாட்களை ஏவிய ரவீந்தர் தன் பங்கிற்கு அனுவிடம் நன்றி தெரிவித்தான். போன முறை அத்தனை சுமூகமாய் பேசாத சங்கடம் அவன் முகத்தில் இருந்தது.

''நன்றியெல்லாம் எதுக்கு? அண்ணன் சரியாகி வீடு திரும்பணும்.''

'ம்... இப்பமே கொஞ்சம் தெளிஞ்சிட்டாங்க. அடுத்த வாரம் வரை டாக்டர் எங்களை அங்கே வரவேண்டாம்னுட்டார்.''

''விவேக்கும் ஸ்கூல் போகணுமே... அது இதுன்னு ஒரு வாரம் பறந்திரும்.''

ஏதோ யோசனையாய் தலையாட்டினான் ரவீந்தர்.

''ஆனா அவர் முழுசாய் தேறி வீடு திரும்ப ஒ மாசமேனும் ஆகுமாம் அனு. அதற்குள்ளே வேற வீ மாறிடலாமான்னும் யோசிக்கிறேன்.''

சாப்பிட்டபடி ரேவதி சொல்ல, அனு சற்று சங்கடமாய் ரவீந்தர் பக்கம் பார்த்தாள்.

இந்த யோசனை அவனுக்குக் கசப்பானது என்பது தெரியும்.

'சொந்த வீடிருக்க, வாடகை வீட்டிற்குப் போவானேன்' என்று அவன் கேட்பதிலும் அர்த்தம் இல்லாமலில்லை.

"உங்கம்மா, அப்பா எப்போ வர்றாங்கக்கா?" என்று தன்னால் முடிந்தளவு சாமர்த்தியத்தோடு பேச்சை மாற்றினாள் அனு.

ரவீந்தர் ஒரு கணம் விறைத்தாற் போலிருந்தது.

உணவை மென்ற அவனது தாடை அசைவற்றது... பின் இறுகியது. ரேவதியின் முக பாவனையையும் கணித்த அனுவிற்குத் தான் பேச்சைத் திருப்பியது வெகு தப்பான திசைக்கு என்பது புரிந்தது.

"என்னன்னி, அத்தை மாமா வர்றாங்களா என்ன?" கேட்டான்.

"ம்ம்... நிச்சயமாய் ஏதும் தெரியலை ரவீ... இவருக்கு உடம்புக்கு சரியில்லைன்னதும் பதறுனாங்க."

"அவங்க வந்தால் உங்களை மேலும்தான் பயப் படுத்துவாங்க" என்றான் சற்று காட்டமாய்.

"பெத்தவங்ககிட்ட மனசார பேசினாலே பயம். பதட்டமெல்லாம் குறைஞ்சிடும்" அனுவும் சற்று காட்டமாகவே பதிலளித்தாள்.

"ஷுயர்... அவங்க வந்தால், நானும் நிம்மதியாய் என் வேலையைக் கவனிக்கலாம்" என்று தோள்களை குலுக்கியவன் 'டக்'கென எழுந்தான்.



அனுவிற்கு குற்ற உணர்வு உந்த - "சாப்பிட்டாச்சா... அதுக்குள்ளேயா?" என்றான் சற்று இதமாய்.

"ம்ம்... நிறைய வேலை இருக்குது."

ஆனால் அவன் விலக, பெண்களுக்கு வசதியாய் போனது.

சுதந்திரமாய் பேசலானார்கள்.

"ஏன்க்கா உங்க பெத்தவங்க வர்றது பற்றி ஏதும் ரவீட்ட சொல்லலையா...?"

"வந்ததும் தெரியட்டுமேன்னு விட்டுட்டேன்."

"அவங்க ரூமையும் தயார் பண்ணியாச்சு."

"தாங்க்ஸ்... பல நாள் மூடியே கிடந்த அறை அது."

"அடை. அடையாய் தூசி. கழுவி விட்டாச்சு. மெத்தை தலையணையை வெயில்ல போட்டிருக்குது."

"நல்லது. இன்னொரு முக்கியமான வேலை இருக்குது."

"செய்வோமே."

கைகழுவிய அனு மூத்தவளைத் தொடர்ந்தாள்.

குளித்த பெண் போல ஒரு ஜிலுஜிலுப்புடன் இருந்தது அந்த வடக்குப்புற அறை. கழுவிய ஈரம் காய்வதற்காய் மின் விசிறியை சுழல விட்டிருந்தார்கள்.

"சாயங்காலமாய் மெத்தையைத் தட்டி கட்டில்ல போட்டு புது விரிப்பைப் போட்டால் ஆச்சு..."

"அதைவிட முக்கியமான விஷயம் ஒன்னிருக்குது அனு. இங்கே ஒரு பெடஸ்டல் ஃபேன் கொண்டு வைக்கணும்."

அனு சுறுசுறுப்பாய் சுழன்ற ஃபேனின் காற்றாடியை அண்ணாந்து பார்த்தாள்.

"ஜருராய் சுற்றுதேக்கா. பிறகென்ன?"

"ரவீந்தர் சொன்னதில் தப்பில்லை அனு. எங்கம்மா இங்கே வந்தால் உதவியை விட உபத்திரவம்தான்."

"இதென்ன இப்படி பேசறாரேன்னு நினைச்சால் நீங்களும் இப்படி..."

"அம்மாவுக்கு சதா ஏதேனும் ஒரு பதட்டம்தான்... அப்பா அதிகம் பேசாதவர். ஆக ஒதுங்கி நின்னுடுவார். அம்மாவுடைய அர்த்தமற்ற பயங்களுக்கு ஒரு உதாரணம்தான் இப்ப நான் கொண்டு வரச்சொல்லியிருக்கிற நிக்கிற ஃபேன்!"

அனு குழப்பத்துடன் பார்த்திருந்தாள்.

"லம்பர் ரூமிலே கிடக்கற ஃபேனை கௌரியை எடுத்து வரச் சொல்லியிருக்கேன். அதிகக் கனமில்லாதது. தனியாய் தூக்கிடுவான்னு நினைக்கறேன்."

"அது எதுக்குன்னு எனக்கு இன்னும் புரியலைக்கா."

"அம்மாக்கு மேல சுழலும் ஃபேன் பிடிக்காது. அது எந்நேரம் தன் தலையிலே விழுமோங்கற பயம்...! எங்க வீட்ல... அதாவது அம்மா வீட்டிலே சீலிங் ஃபேனைச் சுற்றி வலைக் கூண்டு பொருத்தியிருப்பாங்க."

"ஓஹோ" புரிந்த தினுசில் தலையாட்டினாள் இளையவள்.

"அம்மாவுடைய அநாவசிய பயங்கள் எனக்கும் வந்திருச்சோன்னு கூட அஞ்சினேன் அனு... ஏன்னா எனக்குள்ளும் ஏதேதோ சந்தேகம்... குழப்பங்கள்."



"ஆனால் நீங்கள் ராகவண்ணனை இங்கேயுள்ள டாக்டர்ட்ட காட்டாமல் வெளியே அழைச்சிட்டுப் போனது சரியான முடிவுதாங்கா... நீங்க அந்த டாக்டர், சௌந்தர் ராஜனை, அவர் குடும்பத்தை பார்த்து ஒதுங்கினதுக்குக் காரணம் இருக்குது... விசாரிச்சு நிறைய விஷயங்களைத் தெரிஞ்சுகிட்டோம்... ஆனால் உங்ககிட்ட உடனே ஏதும் சொல்ல வேண்டாம்னு..."

'டமார்' என்ற சத்தம் அவர்களை திகைக்க வைத்தது. ஒரு குட்டி இடியின் வலுவோடு வீட்டிற்குள்ளிருந்து கிளம்பியது அந்த சத்தம்.

ஸ்தம்பித்தார்கள். "என்னது?" என்று ஒருவரையொருவர் கேட்க ஆரம்பிக்க, "அம்மா..." கீழேயிருந்து விவேக் அலறும் குரல் தொடர, இரு பெண்கள் பதட்டமாய் படியிறங்கினார்கள்.

## 13

"விவேக் எங்கேயிருக்கே...?"

ஏறக்குறைய அலறினாள் ரேவதி.

"இங்க..." விசும்பலுடன் வந்தது சின்ன குரல். வேண்டாத பொருட்களை இட்டு வைக்கும் அறை பக்கமாய் ஓட, அந்த வாசலில் உதடு பிதுக்கிய விவேக் கௌரியின் பிடிக்குள் இருந்தான்.

"கௌரி என்ன பண்ணினே?" அனு அதட்டினாள்.

"தம்பி.. பெட்டி... மேலேருந்து..."

ரேவதி அதற்குள் மகனை தன் பிடிக்குள் இழுத்து இறுக்கினாள்.

"என்னாச்சு ராஜா?"

“மேலேருந்து பெட்டி வுழுந்துச்சு... பக்கத்தில... பயந்துட்டேன்...”

“கௌரி தள்ளிவிட்டாளா?” - இது அனுவின் விசாரணை.

“தெரில்ல... கௌரிக்கா வந்து என்னைத் தூக்கிட்டா.”

“கடவுள்தான் இவனை மறுபடி காப்பாத்தினது...” மகனை கட்டி முத்தமிட்டு மறுகினாள் தாய்.

திறந்திருந்த லம்பர் அறைக்குள் மெள்ள நுழைந்தாள் அனு.

அங்கு எரிந்து கொண்டிருந்த மங்கலான பல்ப் அறையை முழுதாய் காண்பிக்கவில்லை.

நடு அறையில் ராட்சத்தனமான டிரங்க் பெட்டி ஒன்று வாய் பிளந்து கிடந்தது.

“ஐயோ... இந்த டிரங்க்கா மேலேருந்து விழுந்தது?”

“ம்ம்...”

“நீ ஏன்டா இந்த அறைக்குள்ளே போனே?”

“காக என்னலான்னு...”

“அதென்ன பொக்கிஷ அறையா? அங்க ஏது காசு? இனி எங்கன்னை விட்டு நகராத...”

“விவேக் பயந்திருக்கான்க்கா... அவனைப் படுக்க வைங்க. நீங்களுமே ரெஸ்ட் எடுங்க.”

ரேவதியின் உடம்பு நடுங்கியது.

“விவேக்கை எங்கிட்ட தாங்க... நான் தூக்கிட்டு வரேன்.”

படியேற ஆரம்பித்த அனு கிசுகிசுத்தாள்.

“எனக்கென்னவோ அந்த கௌரியைப் பிடிக்கலைக்கா.”



“அவ என்ன செய்தா?”

“இது அவ வேலையாய் இருக்குமோன்னு...”

“இல்லை அனு... என் சந்தேகம் எல்லாம் வேற இடத்தில்...” மேலும் தொடர முடியாமல் திணறினாள் ரேவதி. சொல்லவும் வழியின்றி அடக்கவும் வகையின்றி எம்பியது அவளது நெஞ்சு.

“என்னக்கா?”

“ஒன்னுமில்லை... நீ அந்த லம்பர் ரூமைப் பூட்டிட்டு வந்திடு.”

“ஃபேன்?”

“அதை அப்புறம் பார்த்துக்கலாம்.”

விவேக்கை படுக்க வைத்த அனு, பேச்சை வளர்க்க விரும்பாமல் அவசரமாய் கீழே வந்தாள்.

அறையின் சாவி துவாரத்தில் கனத்த இரும்பு சாவிநாக்கு போல துருத்தி நின்றது. அறைக்குள் எரிந்த மின் விளக்கை அணைப்பதற்காக அறைக்குள் நுழைந்த அனுவின் கண்கள் ஸ்விட்ச் போர்டைத் தேடின. வலதுபுற சுவரில் அது தெரிய அதனருகேப் போனவள் விளக்கை அணைப்பதற்கு முன் தரையில் மின்னியவை அவள் கவனத்தை இழுத்தது.

“என்னதது’ என்ற யோசனையுடன் பெட்டியை நோக்கி நடந்தவள் குனிந்தாள். வாய் திறந்து கவிழ்ந்து கிடந்த பெட்டியருகே சிறு அச்சத்துடன் மண்டியிட்டாள். இரும்பு கோடுகளும் குமிழ்களும் அலங்கரித்த பழங்கால இரும்புப் பெட்டி அது... சற்று அசைக்க முயன்ற போதுதான் அதன் கனம் புரிந்தது...

இது தலையில் விழுந்திருந்தால்... குட்டி விவேக் இந்நேரம் உயிரோடு இருக்க முடியாது! நடுங்கும் விரல்களால் பெட்டியின் அருகே கிடந்த மூன்று நாணயங்களை எடுத்தாள்.

5 ரூபாய் நாணயங்கள். மஞ்சள் கயிற்றின் ஈரம் காயாத புதுப்பெண்ணாய் ஜொலித்தன அவை.

இவை இங்கே எப்படி வந்தன?

இத்தனை பழைய பெட்டிக்குள் இந்தப் புது காசுகள் இருந்திருக்க சாத்தியமில்லை... பின்னே எப்படி?

''யக்கா, இங்க வாங்களேன்.''

கௌரியின் குரல் ஒரு அவசரத்துடன் வாசல்புறமிருந்து அவளை அழைத்தது. அந்த அறைக்குள்ளிருந்து போனால் போதும் போலொரு அச்சம் நெட்டித் தள்ள அவசரமாய் விளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்தாள்.

கௌரி அவசரமும் ஆத்திரமுமாய் கதவை மூடி, சாவியைத் திருகினாள்.

''யக்கா, போலீஸுக்கு சொல்லி விடுங்க.''

சொன்ன கௌரியின் மார்பும் எம்பித் தணிந்தது.

''என்ன சொல்றே... எதுக்கு?''

''முதல்ல போலீஸ் வரட்டும்... நான் பிறவு சொல்றேன்.''

''விஷயம் என்னங்கறதைச் சொல்லாம போலீஸை எப்படி வரச் சொல்றது? விருந்தா தரப்போறீங்கன்னுவாங்க.''

அனு சிடுசிடுத்தாள்.

''அப்ப, அறைக்குள்ளார கொலைகாரனை அடைச்சு வச்சிருக்கோம்... வந்து பிடிச்சுட்டுப் போகணும் வாங்கனுங்க.''

இப்போது அனுவிற்கு தலை சுற்றுவது போலிருந்தது.

''கௌரி என்ன உளர்றே?''



''நிஜம்தாக்கா... ரேவதிம்மாவுக்கு ஏதும் தெரிய வேண்டாம்னுதான் நான் எதையும் உடனே சொல்லலை... ஆனா இனியும் பொறுத்தோம்... நமக்கு விவேக் தம்பி மிஞ்ச மாட்டாங்கா.''

''அப்படீன்னா... அந்த அறைக்குள்ளே...'' தொடர்ந்து பேச முடியாமல் அனுவின் நாக்கு உலர்ந்தது.

''பெட்டியை தம்பி மேல தள்ளி வுட்ட ஆளு இருக்குதுக்கா.''

''கடவுளே... அது யாரு?''

''நீங்க முதல்ல போலீஸுக்கு போன் போடுங்க. பிறவு சொல்றேன்.''

''அவங்க விவரமாய் கேட்பாங்களே.''

''வந்ததும் நான் எல்லாஞ் சொல்றேன்... நானிருக்கேன் சாட்சி.''

தீவிரமாய் பேசினாள் கௌரி.

''என்ன சாட்சி சொல்லப் போறே?''

''யக்கா... நேரங்கடத்தாதீங்க... விவரம் புரியாம ரூம்புக்குள்ளேப் போனீங்க... இப்ப கேள்வியாக் கேக்குறீங்க... விரைசலாப் போனு போடுங்க.''

''இதப்பார் கௌரி... போலீஸுக்குப் போறது விளையாட்டில்லை. அதுவும் வீட்டு எஜமானியம்மாவுக்குத் தெரியாமல் அவங்களை வரச் சொல்றது தப்பு. முதல்ல ரேவதிக்காட்ட சொல்லிட்டு...''

''அம்மா அதுக்கு சம்மதிக்க மாட்டாங்க.''

''அப்ப எப்படி...?''

"விவேக் தம்பி வாழனுமில்லை... நம்ப ஐயா சௌக்கியமா இருக்கனுமில்ல?"

அனுவிற்கு தலை மேலும் சுழன்றது.

இதென்ன இந்தப் பெண் என்னென்னவோ பேசுகிறாள்? ஆனால் கௌரியின் கண்கள் தெளிந்திருந்தன. இந்நாள் வரை அதில் அடைபட்டிருந்த ரகசியம் விடுபட்டது போன்ற தெளிவு.

பாசாங்குகள் அற்ற பளிங்கு முகம்.

அசோக் இப்போது இங்கிருந்தால் நன்றாக இருக்குமே என்றெண்ணினாள் அனு. யாரிடமாவது ஆலோசனை கேட்டால் நல்லது.

இந்த கௌரியின் பேச்சைக் கேட்டு ஏதாவது செய்யப் போய் பெரிய வம்பாகி விட்டால்?

"வேண்டாம் கௌரி... அவங்க வந்து இந்த அறையிலே யாருமே இல்லைன்னுட்டாங்கன்னா?"

"இருக்கானே... மேலே பரணிலே ஒளிஞ்சிட்டிருக்கான்."

"யாரு?"

"அதை போலீஸ் வெளிய இழுத்துட்டு வர்றப்ப பார்த்துக்கங்க."

இத்தனை அடம் பண்ணுகிறதே இந்தப் பெண்.

"உள்ளே எந்தச் சத்தமும் கேட்கலியே?"

"செய்த காரியம் அப்படி... பம்மிட்டான். விவேக் தம்பி மேலே பெட்டி வுழுந்திருந்தா அந்தப் பிஞ்சு நசுங்கி யிருக்கும்ல?"



இரு பெண்களின் உடல்களும் நடுங்கி சிலிர்த்தன.

"விவேக் எப்படி இந்த அறைக்குள்ளே போனான்?"

"அம்மா நிக்குற ஃபேனை எடுத்து வரச் சொல்லிச் சாவியத் தந்தாங்க. ரூமுக்குள்ள ஒரே தூசு. ஃபேன் மேலேயும் அடையாய் அப்பியிருந்துச்சு. இப்பத்தானே அறைய கழுவி வுட்டோம்... ஆக ஃபேனை துடைச்சு மேலே எடுத்துப் போகலாம்னு துணி எடுத்து வந்து துடைக்க ஆரம்பிச்சேன். அந்த மூக்கு இருட்டா இருந்துச்சு. நான் ரூம்புக்குள்ள இருக்கறது தெரியாம ரவீந்தரய்யா..."

"ரவீந்தரா?"

நாக்கைக் கடித்தது போல சுண்டியது கௌரியின் முகம். அப்போதுதான் அனுவிற்கும் இது நேரம் வரை ரவீ கண்ணில் படாதது கருத்தில் சுட்டது.

"ம்ம்... அவரு உள்ள நுழைஞ்சாரு. கூடவே விவேக்கும்.

"இந்த ரூம்பு சாவிய எப்படி எடுக்கறதுன்னு யோசிச்சிட்டு இருந்தேன். இப்ப அது வாய் வழி விட்டிருச்சு பாரு'ன்னு ஏதோ சொல்லிட்டு தம்பி கையில் காசைத் தந்து, பிறகு அதையே தரையில போட்டு,

'இத வச்சு இங்கனயே விளையாடு'ன்னு சொல்லிட்டு ஏணி வழியே பரணில் ஏறி மேலப் போனாரு."

அனுவிற்கு வியர்த்தது... இருதயம் முரசாய் கொட்டியது.

"ரவீந்தரா பெட்டியைத் தள்ளி விட்டது?"

"எங்கண்ணால பாத்ததுக்கா... அவருக்கு நான் உள்ளார இருந்தது தெரியாது. நானும் அஞ்சி ஒடுங்கி நின்னேன். இப்படியொரு பாதகத்தைச் செய்யப் போறாருன்னு

எதிர்பார்க்கலை... இல்லைன்னா ஓடிப்போய் தம்பிய தூக்கிட்டு வெளியாற வந்திருப்பேன்... முன்னமேயே எனக்கு அவரு மேல சந்தேகந்தான். ஆனா இப்படி... இவ்வளவு...''

இளம் முகம் கசங்க அழ ஆரம்பித்தாள் கௌரி.

உண்மைதான். ரவீந்தர் குற்றவாளி. அதுவும் கொலைக்கு முயற்சித்தவன் என்பது தெரிந்தாலும் ரேவதி போலீஸை அழைக்கத் தயங்கக்கூடும்.

'குடும்ப மானம்' பறந்து போகுமே என்ற கலவரம் இயல்புதான்.

ஆனால் இப்போது அறைக்குள் அடைபட்டிருக்கும் ரவீந்தரை இப்படியே விட்டு விடவும் முடியாதே?

வலுவான சாட்சியாய் கௌரி இருப்பதால்... காவல் துறையின் உதவியைக் கேட்பதுதான் சரி.

அவள் முடிவெடுத்த அதே நிமிடம் வாசற்புறமிருந்து வாகனத்தின் உறுமலும் பேச்சுக் குரலுமாய் கேட்டன.

அப்பாதான் வந்து விட்டார் போலும் என்ற ஆவலுடன் வாசலுக்கு விரைந்த அனு திகைத்து... விறைத்து நின்றாள்.

## 14

மடிப்பு குலையாத காக்கிச் சீருடையின் பின்னே அசோக்கின் உருவமும் தெரியவும்தான் அனு சற்று தளர்ந்தாள்.

''வாங்க ஸார்... இதான் அனு... உட்காருங்க.''

வந்த போலீஸ் அதிகாரியை உபசரித்த அசோக் அனுவின் பக்கமாய் திரும்பினான்.

''நீயும் உக்காரு அனு.. எல்லா விவரத்தையும் சொல்லு.''



''என்ன சொல்றே அக்க...?''

''நாம ரம்யா பற்றி அறிஞ்சதெல்லாம்...''

''அசோக்... இப்ப இங்கே இன்னும் என்னென்னவோ நடத்திருச்க.''

''சரி... அதையும் சொல்லு.''

ஆனால் இன்ஸ்பெக்டர் அவளது கலக்கத்தைப் புரிந்து கொண்டார்.

''என்னம்மா இப்படி பயந்து பாக்கறே? நான் அசோக்கின் மதுரை கஸினுடைய ஃபிரண்ட். அசோக் தன் தாத்தாட்ட ஓரளவு விஷயத்தைச் சொல்ல விஷயம் ஸீரியஸ்தான்னு புரிஞ்சு என் ஃபிரண்ட் எங்கிட்ட ஆலோசனை கேட்டான். நானும் அசோக்கிட்ட பேசினேன். நீங்க இனியும் இந்த விஷயத்துல அநாவசியமாய் தலை நீட்டறது ஆபத்துன்னு படுது... நான் இந்த ஏரியா இன்ஸ்பெக்டர். ஆக நீங்க குறிப்பிட்ட நபர்களை கண்காணிச்சுக்கறேன்... விஷயத்தை மேலும் தெளிவாய் எங்கிட்ட சொல்லிட்டா உங்க ஆபத்தும் குறையும்... நாங்களும் செயல்பட முடியும் சொல்லுங்க.''

ஆழ்ந்த குரலில் கணீரென்று பேசினார் இன்ஸ்பெக்டர்.

ஆனால் இன்னும் அனுவிற்கு நாக்கு புரள மறுத்தது.

''இப்ப... இப்பதான் போலீஸுக்கு போன் பண்றதாய் இருந்தேன். திடீர்னு உங்களைப் பார்த்ததும் எப்படியோ... பதட்டமாய் இருக்கும்.''

''பதறவே வேணாம்... உட்கார்ந்து ஆரம்பத்திலிருந்து சொல்ல ஆரம்பிங்க. அதாவது நீங்க மகேஷைக் காப்பாற்ற உதவியதிலிருந்து...''

அசோக் இடைபுகுந்தான்.

''அதெல்லாம்தான் வரும்போதே உங்கிட்ட சொல்லிட்டேனே, ஸார்.''

''ரெண்டு கோணங்களிலிருந்து கிடைக்கிற தகவல்கள் எனக்கு இன்னும் தெளிவாய் புரிய வைக்கும். தவிர போலீஸ் புத்தி... ரெண்டு பேர் சொல்றதும் ஒத்துப் போகுதான்னும் பார்க்கணுமே? அது யார்..?''

கௌரியைப் பார்த்து கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''ம்ம்... அவ கௌரி... ரேவதிக்கா என்ன பண்றாங்க, கௌரி?''

''தம்பியை தூங்க வச்சவங்க அசதியில அவங்களும் படுத்திட்டாங்கம்மா.''

''எல்லாருக்கும் காபி போடறியா?''

''இதோங்கம்மா.''

அனு விறுவிறுவென்று சமீபத்தில் மகேஷைச் சந்தித்து ரம்யாவைப் பற்றி அறிந்து கொண்டதைச் சொல்லவும் காபி வரவும் சரியாக இருந்தது. அனைவரும் காபி தேவையாய் இருக்க, அமைதியாய் அச்சூடான பானத்தை உள்ளிறக்க லானார்கள்.

''எனக்கு நேற்று உறக்கமே வரலை ஸார். ரம்யா மாதிரி கொலைக்கும் அஞ்சாத ஒருத்தியை இப்படியே விடறது சரியில்லைங்கற உறுத்தல்... அதான் போன் போட்டு ாத்தாட்ட சொன்னேன்.''

''விஷயம் பெரிசுதான்... ஆனால் சாட்சியங்கள் துமில்லையே?''



''மகிளா... அதாவது மகேஷின் தங்கை இறந்தது?''

''அதாச்சு அஞ்சு வருஷம். தவிர அது தற்கொலைன்னு மூடப்பட்ட கேஸ். தவிர அந்தப் பெண் மகிளாவின் குடும்பம் அதை மறுத்தோ, எதிர்த்தோ ஏதும் கேள்வி எழுப்பலை. தொலைந்ததாய் சொல்லும் விலையுயர்ந்த நகைகளைப் பற்றி புகாரும் செய்யலை'' என்றார் இன்ஸ்பெக்டர் தன் பெல்ட்டை தீவியபடி.

''அப்படி புகார் செய்யக்கூடிய நிலையில்லையே... அத்தனை மதிப்பான நகைகளைக் கடல் கடந்து கொண்டு போனதே தப்பாச்சே.''

''ம்ம்... ரம்யா ஒன்னாம் நம்பர் கிரிமினல். அவளுக்கு இங்கேயும் ஒரு கையாள் இருந்திருக்கணும்... சாட்சிகள் கிடைக்கணும்.''

''இருக்கு ஸார்... அதாவது இப்ப இருக்குது. இப்ப... இங்கே ஒரு கொலை முயற்சி நடந்தது... அதுக்கு இந்த கௌரிதான் சாட்சி.''

'இனியும் தாள முடியாதடா ஸாமி' என்ற தினுசில் அனு படபடவென்று கொட்டிவிட, இரு ஆண்களும் திகைத்து விட்டனர்.

''என்னாச்சு அனு... ஒழுங்காச் சொல்லு...''

''இப்ப ரேவதிக்கா வந்து இறங்குனாங்களா...'' மளமளவென்று முடித்தவரை கோர்வையாய் மதியம் நிகழ்ந்தவற்றைச் சொல்லனானாள் அனு.

''அப்ப இதுவரை விவேக் தப்பிப் பிழைச்சது விபத்துக் களில் இருந்தில்லை... கொலை முயற்சிகளிலிருந்தா?''

"அப்படித்தான் போல அக்க."

இன்ஸ்பெக்டர் எழுந்து நின்றார்.

"அப்ப கொலைக்கு முயற்சித்தவன் இன்னும் அறைக்குள்ளதான இருக்கான்?"

"ஆமாங்க சார்... ரூம்பைத் திறக்கட்டுமா?"

துடியாய் நின்றாள் கௌரி.

"ஒரு நிமிஷம் ஸார்... அவர் அவரு இந்த வீட்டின் முதலாளி. அதாவது ராகவண்ணாவின் தம்பி... அவரை எப்படி?"

"சட்டம் எல்லாருக்கும் ஒன்னுதாம்மா. கண்ணால் பார்த்த சாட்சியம் இருக்குதே."

கௌரி முனைப்பாய் பேசினாள்.

"முன்னமே எனக்கு சின்னவரு ரவீய்யா மேல சந்தேகந்தாங்க ஸார்... அவரு விவேக் தம்பியை கொல்லாம விடமாட்டாருன்னு பயந்துட்டேயிருந்தேன். யார்கிட்டேயும் சொல்லவும் முடியாத விஷயமில்ல அது? இப்பக் கண்ணால பார்த்த பிறகும் வாய மூடிட்டு இருக்க முடியுமா? சின்னவருக்கு நானும் ரூம்ல இருந்தது தெரியாது..."

"ரைட். அறையைத் திறம்மா. அவரை வெளியே கூட்டிட்டு வந்து விசாரிக்கலாம்."

இதுவரை அந்த வீட்டின் உறுப்பினனாய், கவர்ச்சியான ஒரு வாலிபனாய் பார்த்த ரவீந்தரை ஒரு கொலைக் குற்ற வாளியாக பார்க்கும் துணிவு அனுவிற்கு இல்லை... கூசியது.

ஆனால் இன்ஸ்பெக்டர் விடுவிடு என்று நடந்தார்.



அசோக்கின் கையில் ஒரு தடியைத் தந்து அவனை ஜாக்ரதையுடன் நிற்கச் சொன்னவரின் கை தன் ரிவால்வரின் மேலே பதிந்தது.

தன்னிடமிருந்த பெரிய இரும்புச் சாவியை கதவில் பொருத்திவிட்டு ஒதுங்கிய கௌரி இன்ஸ்பெக்டர் கேட்டது போல ஒரு கட்டு முறுக்குக் கயிறுடன் மறுபடி ஓடி வந்தாள்.

அனு அந்தப் பக்கமே போகவில்லை.

கதவைத் திறக்கும் சத்தத்தில் அவளுக்கு வியர்த்தது.

ஆனால் அதைத் தொடர்ந்து வேறு சத்தமே இல்லை.

சில நிமிடங்களுக்கு மேல் ஆவலைத் தாங்க முடியாது எழுந்தவள் மெள்ள அந்தப் பின்புற அறை பக்கமாய் நகர்ந்தாள்.

அறையின் கதவு விரிந்து கிடந்தது.

நெருங்கியவள் அதனுள் எட்டிப் பார்த்தாள்.

மங்கிய பல்ப்பின் ஒளியோடு கூட புழுதியையும் போர்த்தியபடி கிடந்தது அறை. இன்ஸ்பெக்டர் மேலே பரண் மீது நின்று, பின் எதையோ குனிந்து பார்ப்பது தெரிந்தது.

"என்னாச்சு ஸார்... வரவா?"

அசோக் ஆவலும் அச்சமுமாய் குரல் தந்தான்.

'வேண்டாம்' என்பது போல சைகை செய்தார் இன்ஸ்பெக்டர்.

"ஹி இஸ் டெட்."

அவ்வார்த்தைகள் அங்கு நின்ற ஒவ்வொருவரையும் பலக்க அடித்தது.

## 15

"என்ன ரவீ... செத்துட்டாரா?"

"ம்ம்... இங்கே பாம்பு அல்லது ஏதோ விஷ ஜந்து இருக்கனும்... அது கடிச்சதால் விஷம் ஏறி மரணம் சம்பவித்திருக்குது..."

போலீஸ் பாஷை பேசினார் அவர்.

"தன் குட்டு வெளியான அதிர்ச்சி... ஆகக் கத்தவும் முடியாமல் அப்படியே கிடந்து செத்துட்டாரோ?"

"மே பி இந்தாம்மா... டார்ச்சை பிடிச்சுட்டு மேலேறி வா. இவர்தான் ரவீந்தரான்னு வந்து பார்த்து சொல்லு."

துணிவைத் திரட்டிய கௌரி மேலேறிப் போய் குனிந்து பார்த்து ஆமோதிப்பாய் தலையாட்டினாள்.

இன்ஸ்பெக்டர் தன் காவல் நிலையத்திற்கு போன் மூலம் உத்தரவுகளைப் பிறப்பித்தார். வியர்த்த முகத்தை கழுவி துடைத்துக் கொண்டார்.

"ஹா... அங்க சில நிமிஷங்கள் இருக்கவே மூச்சு அடைச்சிருக்க... விஷ ஜந்து கடிச்சிருக்கனும். வெளிச்சத்துல பாடியைக் கொண்டு வந்து பார்த்தால் ஓரளவு புரியும். முதல்ல பாடியை 'மார்க்' செய்யனும். மேலும் காற்றும் வெளிச்சமுமில்லாத அந்த அறையில் இத்தனை நேரம் அடைஞ்சு கிடந்ததும் மரணத்துக்கு காரணமா இருக்கலாம்."

"நான் வந்ததும் உங்ககிட்ட விஷயத்தைச் சொல்லியிருக்கனும் ஸார்" குறைபட்டாள் அனு.

"இது கடவுளுடைய தண்டனைங்கம்மா... இத்தனை தரம் விவேக்கைக் காப்பாத்தினவரு இப்ப அலுத்துப் போய் ஆபத்துக்குக் காரணமானவரை அழிச்சிட்டாரு... அப்படித் தான் தோணுது."



தீர்மானமாய் சொல்லிவிட்டு பின் கட்டிற்குப் போன கௌரியையே பார்த்தபடி சொன்னாள் அனு.

"நான் இவகிட்ட மன்னிப்பு கேட்கனும். அசோக்... இவமேல் சந்தேகப்பட்டதுக்காய் 'ஸாரி'ங்கனும். கௌரியோட படிப்பு தொடருவதுக்கும் என்னாலான உதவியைச் செய்யனும்... அதுதான் சரியான பிராயச்சித்தம். தவிர இவ சூட்டிகையானவ... நல்லவ..."

அதற்குள் கௌரியின் மூலம் விஷயம் கசிந்து, பின் கட்டு பரபரப்பானது. ரேவதிக்கும் மென்மையாக விவரம் தெரிவிக்கப்பட, அவள் விக்கித்துப் போனாள். சற்று பொறுத்தான் அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

"ஐயோ... அப்ப நான் சந்தேகப்பட்டது நிஜந்தானா... சரிதானா அனு? வேற தாயுடைய மகன்னாலும் தன் அண்ணன் மகனைக் கொல்ல எப்படி மனசு துணியும்?"

"ரவீ, ராகவண்ணனை சகோதரனாய் நினைக்கலை... உறவை விட சொத்து மேல் அதிக ஆசை. அதை எப்படியாவது அடையனுங்கற வெறி."

உறங்கிக் கொண்டிருந்த விவேக்கிற்கு போர்த்திவிட்ட ரேவதி, அனு நீட்டிய காபியை பருகி முடித்தாள்.

பாதி தனக்குள்ளாகவே சொன்னாள்.

"இந்த வீட்டை ரவீந்தர் அவசர அவசரமாய் கட்டினப்பவே எனக்குள் அந்த சந்தேகம் வந்திருச்சு..."

"என்ன சந்தேகம்?"

"அவன் அந்த ரம்யாவைக் காதலிக்கறானோன்ற சந்தேகம்."

வருத்தத்துடன் தலை கவிழ்ந்தாள் ரேவதி.

"ஒஹோ?"

"ரம்யாவோ கல்யாணமானவ... இது ரொம்ப ரசாபாசமாகக் கூடிய விவகாரம்... இந்த பயம் போதாதுன்னா மாதிரி விவேக் வேற விதவிதமான ஆபத்துகள்ல சிக்கினான். அவன் உயிருக்கு யாரோ குறி வைக்கிறாங்கன்ர கிலியும் சேர்ந்தது... இதையெல்லாம் அமுக்கிடற திநுசில் ராகவ்வின் மாற்றம் விசுவரூபம் எடுத்தது. அவர் ஆளே மாறி சீரழிய ஆரம் பிச்சார்... எல்லாம் சேர. எனக்கு என் மனநிலை வேற சந்தேகம்... இதையெல்லாம் கற்பனை செய்றேனோன்ர கலக்கம். ஆனா ரவிக்கும் இப்படி ஒரு முடிவு வந்திருக்க வேணாம்."

"இந்த முடிவு பிறருக்கு முக்கியமாய் ஒரு பிஞ்சு குழந் தைக்கு வரணும்னு நினைச்சதுக்கான தண்டனை இது..."

அசோக் வந்து இரு பெண்களையும் கீழே வரச் சொன்னான்.

"பாடியை மார்க் செய்தாச்சு அனு... தவிர உங்கப்பாவும் வந்துட்டாங்க."

அத்தனையும் அசாத்திய வேகத்துடன் நடந்தது போலத் தோன்றியது மனசுக்குள் அசாத்திய கலக்கம் புகுந்து குடைந்தது.

மறுநாள் விடிகாலையில்தான் அனுவிற்கு சற்று உறக்கம் பிடித்தது.

ரேவ்தி குழந்தையுடன் வீட்டில் தனியே இருப்பது உசிதமில்லை என்று பூபதி. அனுவின் அப்பா அவர்களைத் தன்னுடன் கூட்டி வந்து விட்டார்.

ரேவதி சமாதானப்படுத்த. நிமிடத்திற்கு நான்கு கேள்விகளைக் கேட்ட விவேக்கிற்கு பதில் சொல்லி சமாளிக்க என்று அனுவின் நாள் கழிந்தது.



ஆனாலும் அன்றிரவு அனைவருமே உறங்கியதை விட படுக்கையில் உருண்டதுதான் அதிகம்!

அகற்றப்படும் போது ரவீந்தரின் உடலை ஒரு சில கணங்களே பார்க்க நேர்ந்தது என்றாலும் அந்த நீலம் பாரித்த நகங்களும் கோணிய முகமும் அனுவின் நினைவில் மீண்டும் மீண்டுமாய் ஆடிப் பிராண்டின.

காலையில் அவளை எழுப்பியது சின்ன விவேக்தான். வாழ்வில் நிலையாமைப் பற்றிய சஞ்சலத்திலிருந்த மனதை சிறுவனின் அண்மை சமாதானப்படுத்தியது.

குளித்து உடை மாற்றியவள் விருந்தாளிகளைக் கவனிப்பதில் மும்முரமானாள்.

பத்து மணி போல வீடு நுழைந்து அசோக்கை சிறு முறுவலுடன் வரவேற்க முடிந்தது. ஆனால் அசோக்கின் முகத்தில் பதில் புன்னகை இல்லை.

"சாப்பிட்டியா அசோக்?"

"ம்ம்..."

அருகிலிருந்த பிரம்பு நாற்காலியில் சரிந்தான்.

"நேத்து நடந்ததையே நினைச்சுட்டிருக்கேல்ல... ப்ச்... கொடுமைதான்."

"இன்னொன்னும் நடந்து போச்சு, அனு..."

"என்ன... என்னாச்சு?"

சற்று தேறியிருந்த அவள் மனசு மறுபடி தவித்து துடிக் கலானது.

"ரம்யாவும் இறந்துட்டா."

அவனையே பார்த்த அனுவின் விழிகள் நிலைகுத்தி நின்றன.

"தற்கொலையாம்..."

''கடவுளே... அவளால் பிறருக்கு ஆபத்து... அடுத்த ஆபத்து யாருக்கோன்னு பயந்தோம்... கடைசியில்...''

''தூக்குப் போட்டுக்கிட்டாளாம். ஒரு சீட்டு எழுதி வச்சிருந்தாளாம்.

''என் சாவிற்கு என் பாவங்கள் மட்டுமே காரணம்'ன்னு.''

''எப்ப நடந்துச்சாம்?''

''அதிகாலை... இன்ஸ்பெக்டர் மூலம் எனக்குக் கிடைச்ச தகவல் இது... மற்றபடி அதிகம் தெரியலை. யூகங்கள்தான், ஆளாளுக்கு ஏதேனும் சொல்றாங்க. டாக்டர் சௌந்தர்ராஜன் ரொம்ப அதிர்ச்சியில் இருக்காராம்... படுத்திட்டாராம். அதிகம் பேச வைக்கவும் முடியலையாம்... தவிர...''

''சொல்லு...''

''அங்குள்ள வேலைக்காரங்க மூலம் கசிஞ்ச ஒரு தகவல் இல்லை புரளி என்னன்னா... ரவீந்தரின் இழப்பைத் தாங்க முடியாமல்தான் ரம்யா தற்கொலை செய்துகிட்டதாய்...''

''வேலைக்காரங்களுக்கும் மற்றவங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் தெரிஞ்சிருக்கக்கூடும் அசோக்.''

''அவங்க ரெண்டு பேரும் அடிக்கடி தோட்டத்துல சந்திச்சுகிட்டாங்களாம். ரம்யாவிடமிருந்து வாங்கிட்டு வந்த சின்ன சின்ன பொட்டலங்களைத்தான் ரவீந்தர் தன் அண்ணன் ராகவிடம் தந்ததாய் கூட கேள்வி.''

''அதாவது ராகவன்னனுக்கு போதைப் பொருளைத் தந்து பழகினவங்க இவங்கதான்...?''

''இருக்கணும்... அப்படித்தான்னு தோணுது. ரம்யாவின் பாவப்பட்டியல் ரொம்ப நீளமாகி கடைசியில் அவ கழுத்தைச் சுற்றி இறுக்கிட்டதாய் தோணுது...''



''நீ அங்கே போன ராத்திரி அப்ப உன்னை ரவீந்தர்னுதான் தப்பாய் நினைச்சு நெருங்கியிருக்கா... ம்ப்ச்... எனக்கு மனசு ஆறலை அசோக்.''

''போகட்டும் விடு... ரவீந்தரோ அவளோ புண்ணிய ஆத்மாக்கள் இல்லை. பார்வைக்கு பூப்போல தெரிஞ்சாலும் உள்ளே நிறைய விஷம்... விஷப்பூக்கள்... உதிர்ந்தது நல்லதுதான்...''

''அதில்லை அச்சு. நான் இது வரை ரம்யாவை சந்திச்சதேயில்லை... அத்தனை அழகின்னு எல்லாரும் சொன்னாங்க. ஆனால் நான்-பார்க்கலியே?''

''ம்ம்... ஆச்சரியம்தான். பார்க்காத அவளைப் பற்றி உனக்கு நிறைய விஷயங்கள் தெரியும்! அவள் ஹஸ்பன்ட் டாக்டருக்கேத் தெரியாத உண்மைகள் நமக்குத் தெரியும்.''

''அத்தனை ஏமாற்றுக்காரியாய் இருந்தும் அவளை காதல் அடிச்சு வீழ்த்தியிருக்குது... ரவீந்தரின் இழப்பைத் தாங்கக் கூடாமல் தான் ரம்யா தற்கொலை செய்திருக்கணும்.''

''டாக்டருக்கும் ரம்யா மேல பிரியம் ஜாஸ்திதான் போல... குழந்தை மாதிரி அழறாராம்.''

''அப்ப அவரைக் கண்டு ஏன் ரம்யா பயந்தாள்? அப்படித்தானே நம்மிடம் ரேவதிக்கா சொன்னாங்க?''

''அதுவும் நடிப்பாய்தான் இருக்கணும். ஏதோ ஒரு மாயையைத் தன்னைச் சுற்றி உருவாக்க ரம்யா அப்படி பாவ்லா செய்திருக்கணும்... கிழட்டு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்ட இளம் மனைவி... 'பாவம் அப்படி பயப்படறா அந்தப் பொண்ணு... கிழவன் என்னென்ன கொடுமை பண்ணினானோன்னு ஒரு பிரமையை ஏற்படுத்தும் முயற்சி.''

அனு ஆமோதிப்பான யோசனையுடன் தலையாட்டினாள்.

''ம்ம்... ரம்யா டாக்டரை கொன்னாலும் கூட அனுதாப அலை ரம்யா பக்கமாய்தான் அடிச்சிருக்கும். அதிலே ரம்யா சுலபமாய் தப்பிச்சிருப்பா.''

''அதுபோல ஏதோத் திட்டத்தோடுதான் அவ இந்த டாக்டரின் மனைவியாகியிருக்கனும்... அவரைக் கொன்று சொத்து அத்தனையும் தான் கொண்டாடலாங்கற ஆசை.''

''அதேபோல இங்கே ரவீந்தர் தன் அண்ணன் குடும்பத்தை அழிச்சிட்டு, சொத்து அத்தனையையும் தன்னுடையதாய் ஆக்கிக்க திட்டம் போட்டிருந்தான்...''

''ரொம்பப் பொருத்தமான ஜோடிதான்...'' வருத்தமான இகழ்ச்சியுடன் சொன்னான் அசோக்.

''சில வருடங்களாகவே இந்தத் திட்டம் அவங்கள்ல இருந்திருக்கனும் அச்சு... அதனால்தான் அவ வீட்டுப் பக்கத்திலேயே ரவீந்தர் தன் வீட்டையும் கட்டிட்டான்... எல்லாம் கச்சிதம்தன்... நடந்ததுதான் வேற மாதிரி ஆயிடுச்சு.''

''குறுக்குப் பாதை உன்னை சீக்கிரமாய் கொண்டு போய் சேர்க்கும். நீ போக விரும்பாத இடத்திற்கு'ன்னு கேள்விப்பட்டிருக்கோமே! எத்தனை உண்மை பார்த்தியா? இதை அவருக்குச் சொல்லனும், அச்சு.''

''யார்... மகேஷிற்குத்தான?''

சின்ன திடுக்கிடலோடு தன் நண்பனை ஏறிட்டாள்.

''எப்படி... எப்படி அவர்தான்னு சரியாய் சொல்லிட்ட?''

''நமக்கான இந்த அனுபவத்திலே கிடைச்ச ஒரே நல்ல விஷயம் மகேஷ்தான? கண்டிப்பாய் போய் சொல்லனும்...''

''அப்புறம்... அவர்...'' எதையோ சொல்ல ஆரம்பித்தவளை இடைவெட்டினான்.



''அன்னைக்கு மகேஷை பஸ் ஸ்டாண்டிலே யாரும் தள்ளி விட்டதாய் நினைக்கலை அனு. அது விபத்துதான்.''

''இப்படி நாமாய் நிறைய யூகிச்சு, கெஸ்-கேம் ஆடறோம்.''

''ஏன் சொல்றேன்னா, ரம்யாவின் போட்டோ அவரிடம் வேற காப்பியும் இருந்திருக்கும். இதை மட்டும் அபகரிச்சு என்ன லாபம்?''

''உண்மைதான்.''

''கடவுள் உன்னை... நம்மை அவரைச் சந்திக்க வைக்கனும்னு நினைச்சுட்டார். அதற்கான சந்தர்ப்பம், சம்பவம்தான் அந்த விபத்து... பிறகு விறுவிறுன்னு எத்தனையோ நடந்து போச்சு... கடைசியில் இப்படியொரு முடிவு.''

இருவரும் பெருமூச்செறிந்தனர்.

''இருந்தாலும் போலீஸ் ரம்யாவைப் பிடிச்சு விசாரணையில் நகக்கி அத்தனை விஷயங்களையும் வெளியே கொண்டு வந்திருந்தால் எனக்குத் திருப்தியாய் இருந்திருக்கும்.''

''ரம்யாவின் தற்கொலைக்கு அந்த பயமும் காரணமாய் இருந்திருக்கனும் அச்சு. நம்ப ஆட்டம் முடிஞ்சிருச்சுன்றதை அவ உணர்ந்துட்டா.''

''நாம கிழவன், கிழவி ஆன பிறகும் கூட இந்த கேஸைப் பற்றி ஆச்சரியமாய் பேசிக்குவோமாய் இருக்கும். புதுசு புதுசாய் அப்பவும் கூட ஏதேனும் யூகங்கள், உண்மைகள் தோனும்.''

''அச்சு, நாளைக்கே திருநெல்வேலி போலாமா?''

''ம்ம்...''

அப்புறம் உங்கிட்ட ஒன்னு சொல்லனும்... அவர்... மகேஷ் எனக்குப் போன் செய்தார்... என் நம்பர் அவருக்கு எப்படிக் கிடைச்சதுன்னு தெரியலை... நேத்தும் கூட நான் வீட்ல இல்லாதப்ப போன் செய்திருக்கார்...''

"ம்ஹூம்? என்ன பேசினார்?"

"ச்சும்மாதான்... மறுபடி நன்றி சொன்னார்... நாம எந்த சிக்கல்லேயும் மாட்டிக்கக்கூடாதுன்னார்..."

"நீ என்ன சொன்னே?"

"நான்... என்ன சொன்னேன்னு நினைப்பில்ல. ஆனா நிறைய பேசினோம். என் நம்பர் அவருக்கு எப்படிக் கிடைச்சதுன்னுதான்..."

"நண்பர்கள் வேற எதுக்கும்மா இருக்கோம்? 'உன் தோல்விகளைக் கண்டுக்காமல் இருக்கவும் வெற்றிகளைப் பொறுத்துக் கொள்ளவுமே நண்பர்கள்'ன்னு சொல்வாங்க. இதையும் சேர்த்துக்கலாம்... குறிப்பறிந்து போன் நம்பர் கொடுத்து உதவவும்னு..."

"நீயா... எப்ப, எப்படி?"

"நீ மகேஷ் வீட்டுக்குப் போனதும் திடீர்னு பேசா மடந்தை. ஆயிட்டே. அவர் உன்னைப் பார்த்த பார்வையில் ஒரு சுவாரஸ்யம் தெரிஞ்சது. ஆக சும்மா இருக்கட்டும்ன்ர மாதிரி உன் நம்பரை அவர்ட்ட தந்துட்டு வந்தேன். திட்டம் சரியாய் செயல்படுது போல..."

அனு அவசரமாய் தன் விரல்களைப் பின்னிப் பின்னி பிரித்தாள்.

"நாளைக்கே மகேஷ் வீட்டுக்குப் போவோம். உங்கப் பாவையும் அழைச்சுட்டுப் போகனும்... அவரும் மாப் பிள்ளையைப் பார்த்துக்கட்டும்" என்றான் மும்முரமாய்.

"ஷ்... அச்சு..."

அனுவின் முகத்தில் அதுவரை தேங்கி நின்ற அதிர்ச்சி, குழப்பங்களை எல்லாம் ஒரு நாணச் சிரிப்பு பொங்கி வந்து அடித்துக் கலைத்தது...!

✿